கல்கி

KALKI 14.3.93 ரூ. 3.00





* கிரியப்பா சாலையில் - சுவர்ச் சித்திரங்கள்

அன்புக்காகப் பணிசெய்யும் ஆஸ்திரேலியக் குழு!

பொதுக் கழிப்பிடங்களை உபயோகிக்க நேருவதே பெரிய தண்டனையாக இருக்கும் பொழுது, அவற்றைத் தாமே முன் வந்து சுத்தம் செய்யும் ஒரு குழுவினர் உள்ளனர் என்பதே ஆச்சரியம்தானே.

ஆஸ்திரேலியாவிலிருந்து வந்து சென்னை திருவல்லிக்கேணியில் தங்கி, சாக்கடைகளையும் கழிப்பறைகளையும் சுத்தப்படுத்துவதில் ஈடுபடும் இக்குழுவின் கொள்கை: 'அன்புக்காகப் பணி செய்.'

கிரியப்பா சாலையிலுள்ள பொதுக் கழிப்பிடத்தைச் சுத்தம் செய்து அதன் சுவர்களில் வண்ண ஓவியம் தீட்டி, இந்தக் கொள்கை வாசகத்தையும் எழுதி வைத்துள்ளார்கள் இவர்கள்.

''தண்ணீர் வசதி இல்லாத கழிப்பறைகளைத் துப்புரவு செய்வதால் என்ன பயன். அவற்றைத் தொடர்ந்து எப்படி சுத்தமாக வைத்துக் கொள்வது?'' என்று கேட்ட போது, இக் குழுவைச் சேர்ந்த கெவின் மகே சொன்னார்:

''நாங்கள் துப்புரவுப் பணியைத் தொடங்கியபோது அக் கழிப்பறையை உபயோகித்து வந்தவர்கள், எங்களை மாநகராட்சி ஊழியர்கள் என்றே நினைத்தார்கள். பிறகுதான் மெள்ள விசாரித்து உண்மையை அறிந்து கொண்டார்கள். அவர்களுக்கு அவமானமாகப் போய்விட்டது. எங்களுக்கு உதவ முன்வந்து, தூரத்திலிருந்த கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க ஆரம்பித்தார்கள். இப்போது அப் பகுதியில் வாழும் ஒரு பெண்மணியே தலைக்கு இருபத்தைந்து பைசா பெற்றுக் கொண்டு துப்புரவுப் பணியைத் தாமே தொடர்கிறார்.

''எங்கள் குழுவைச் சேர்ந்த ஹென்ரி, மாநகராட்சியிடம் சென்று இக் கழிப்பறைக்குத் தண்ணீர் வசதி செய்து தரும்படி கேட்டார். துப்புரவுப் பணி சரியாக நடப்பதற்கு எங்கள் குழு பொறுப்பேற்குமெனில் அவ்வசதியைச் செய்து தருவதாக மாநகராட்சியினர் கூறினார்கள்....''

* மழை நீர்ச் சாக்கடையில் அடைப்பு நீக்க முற்படுகிறார் கிரேய்க் - உடன் அப்பகுதி சிறுவர்கள்.



திருவல்லிக்கேணியில் இக் குழுவினர் தங்கும் அறையில், இவர்களுடைய பணி அட்டவணை, சுவரில் மாட்டப்பட்டிருக்கிறது. வாரத்தில் மூன்று நாட்கள் கழிப்பறைகள் சுத்தப்படுத்துவது, மூன்று நாட்கள் மரக்கன்று நடுவது, வெள்ளையடிப்பது, சுவரில் ஓவியம் தீட்டுவது, ஞாயிறன்று ஓய்வு என வகுத்துக் கொண்டுள்ளார்கள்.

ராயப்பேட்டை அரசு மருத்துவ மனை

பட விளையாட்டு-2 போட்டி முடிவு

சினிமா நட்சத்திரங்களைக் கண்டுபிடிப்பதை விடப் பிரபலங்களைக் கண்டுபிடிப்பதில் கல்கி வாசகர்கள் அதிகத் திறமை காட்டியிருக்கிறார்கள். வந்து குவிந்த ஆயிரக்கணக்கான விடைகளில் 119 பேர் சரியான விடைகளை எழுதியிருந்தனர் :

1. கே. பாலசந்தர்
2. ஆர். எம். வீரப்பன்
3. திருநாவுக்கரசு
4. கமல்ஹாசன்

குலுக்கல் முறையில் பின்வரும் பத்துப் பேர் தலா ரூ 25/- பரிசு பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. கே. கோபாலகிருஷ்ணன், இந்தியன் வங்கி, தெற்கு வீதி, தஞ்சாவூர் - 613 009.

2. ஆர். மணிவண்ணன், 28/2 கந்தன் தெரு, செனாய் நகர், சென்னை - 600 030.

3. வெ. ஆனந்தி, த/பெ வை. வெங்கடேசன், 7/1, நவாபு தோப்பு சந்து, விழுப்புரம், தென் ஆற்காடு மாவட்டம் - 605 602.

4. திருமதி காயத்ரி, 32, ராஜு நாயக்கன் தெரு, 4, அருண் பிளாட்ஸ், மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.

5. ஜ. சேதுராம், B-66, ஸ்டாஃப் காலனி, எஸ்.ஜ.வி. லிமிடெட், சிறுமுகை அஞ்சல், கோவை மாவட்டம் - 641 302.

6. ஏ. நித்யா, த/பெ. ஆர். சி. ஆனந்தன், பிளாட் நெ : 6, கண்ணன் நகர் விரிவாக்கம், குரோம்பேட்டை, சென்னை - 600 044.

7. B. ரத்னகுமார், 4/71 B செட்டியார் தெரு, கந்தர்வகோட்டை (அஞ்சல்) புதுக்கோட்டை (மாவ.)

8. எம். பாலசுப்பிரமணியன், 8, பிள்ளையார் கோவில் தெரு, திலகவதி நகர், இரும்புலியூர், கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.

9. பால் இளங்கோவன், பி.ஈ. கடைசி வருடம், D-46, டி.சி.ஈ. ஆண்கள் ஹாஸ்டல், மதுரை - 625 015.

10. எம். எஸ். ஷீலாதேவி, 51, வைகிராப்ட்ஸ் முதல் தெரு, ராயப்பேட்டை, சென்னை - 600 014.

யின் குழந்தைகள் வார்டையொட்டி ஒரு சிறிய பூங்கா அமைத்துள்ளனர். ''ரெயின்போ கார்டன்'' என்று இதற்குப் பெயர்.

திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையைச் சுத்தப்படுத்தி மரக்கன்றுகள் நட்டனர். தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த, சில நாட்களுக்கு இலவசமாக வெந்நீர் விநியோகம் செய்தனர்.

''எங்க கடைகளுக்கு எனாமல் பெயிண்ட், சுண்ணாம்பு அடிச்சுக் கொடுத்திருக்காங்க; கடை சுத்தமாக இருந்தால் தான் வாடிக்கைக்காரங்க நிறைய வருவாங்கன்னு சுத்துக் கொடுத்திருக்காங்க'' என்கிறார் அத்தெருவில் உள்ள 'ஆனந்த் டெய்லர்ஸ்' தையற்கடையின் உரிமையாளர்.

இருபத்தியோரு நபர்கள் அடங்கிய 'அன்புக்காகப் பணி செய்' குழு, அமெரிக்கா இங்கிலாந்து போன்ற முன்னேறிய நாடுகளிலும் பணியாற்றுகிறதாம். பணம்....? சொந்தப் பொருள்களை விற்றும் படிப்புக்குக் கிடைத்த அரசு மானியத்தை மிச்சப்படுத்தியும் ஒரு பொது நிதியை ஏற்படுத்தி, அதிலிருந்து செலவு செய்கிறார்கள். மிக மிக எளிய வாழ்க்கை. பிறர் கொடுக்கும் பண, பொருள் உதவிகளை நன்றியுடன் ஏற்கிறார்கள்.

இவர்களுடைய பணிகளைப் பலவித மான நபர்கள் பல்வேறு கண்கொண்டு பார்ப்பது பழகிப் போய்விட்டதாம்.

''உங்களால் இந்த நாட்டை மாற்றி விட முடியுமா?'' என்று கேலியும் கோபமுமாகக் கேட்ட ஸ்கூட்டர்காரர், குழிப்பறைச் சுவரில் ஓவியம் தீட்டப்படுவதைக் கண்டு தம் வீட்டிலும் ஓவியம் தீட்டும்படி அழைத்த பணக்காரர் (இதற்கு மறுப்புக் கூறி, தங்களுக்கு உதவும்படி அழைத்த போது அவர் தம் காரில் வேகமாகப் பறந்து விட்டார்!), சாக்கடைகளில் கண்ட குப்பைகளையும் கொட்டி அடைப்பு ஏற்படுத்தியதற்காக வருத்தம் தெரிவித்த பெண்கள்.... என்று பலரக அனுபவங்கள்.

பெங்களூரில் ஒரு சமயம் இக் குழு பொதுக்கழிப்பிடங்களைச் சுத்தம் செய்வதைப் பார்த்த பன்னிரண்டு வயதுச் சிறுமி பத்மா யோசிக்க ஆரம்பித்தாள். ஒரு மாதம் அவர்களுக்கு உதவியாக டாய்லெட்டுகளைச் சுத்தம் செய்தாள். பின்னர் பெற்றோர் அனுமதி பெற்று அக் குழுவினருடனேயே ஆஸ்திரேலியா சென்றாள். இப்போது பத்மா கெவின் மகேயின் மனைவி. ''எங்கள் மூச்சுள்ளவரை இச் சேவையைத் தொடருவோம்'' என்கிறார், பத்மா.

- பானுமதி ராமச்சந்திரன்

படங்கள் : பாலாஜி

விமர்சனம்

●● 'மாதவன் சேவை' என்று நாட்டிய நாடகம். சிறுவர் நிகழ்ச்சி. கனகச்சிதமான தயாரிப்பு. ஆனால் டைட்டில் கார்டு காட்டினதில்தான் குகம்பு வேலை செய்து விட்டார்கள். ஏழெட்டுக் குழந்தைகள் பங்கு பெறும் நிகழ்ச்சியில், இரண்டு பேரின் பெயரை மட்டும் போட்டு, மற்றவரை 'மற்றும் பலரா'க்கியது சிலாக்கியமானதாகப்படவில்லை. அந்தக் குழந்தைகள், தம் பெயரை டீவியில் பார்க்க எத்தனை எதிர்பார்ப்புடன் காத்திருந்திருப் பார்கள்? குழந்தைகளின் மனங்களையா நோக அடிப்பது?

●● புதன் மற்றும் சனிக்கிழமைகளில் பெரும்பாலான நிகழ்ச்சிகளை, பட்ஜெட்டுகள் விழுங்கி விட்டன. ஜாபர் ஷெரீபும் (ஸ்கூல் வாத்தியார் கெட்டார், 'லிஸன் டு மீ! லிஸன் டு மீ!'), மன்மோகன் சிங்கும். நம்மை பிரமிக்க வைத்தது. பிரணாய் ராய் அலசல். டைப்ரைட்டிங் எக்ஸாம் மாதிரி படபடவென்று அவர் கேட்கிற கேள்விகளென்ன, தொகுப்பில் காட்டும் ஜாலங்களென்ன, சட்சட்டென்று பம்பாய் ஷேர் மார்க்கெட், பார்லிமெண்ட் கட்டட வாசலில் பிரதமர் என்று டெக்னாலஜி புண்ணியத்தில், உட்கார்ந்த இடத்திலிருந்தே உரையாடிய வேகமென்ன, கிளாஸ்!

●● வியாழன் இரவு வயலும், வாழ்வும். மாட்டுக்குக் கொம்பை அவ்வப்போது வெட்டி விடுவதற்கான அவசியம் பற்றிச் சொன்னார்கள். நல்லது. நிகழ்ச்சி முடிந்து முழுசாக ஒரு மணி கூட ஆகியிருக்கவில்லை. முத்தமிழ் மன்றத்தில் கொத்தமங்கலம் சுப்பு பற்றி, அவர் மகன் விசுவநாதனுடன் ஒரு சந்திப்பு. மாடுகளின் கொம்பு மற்றும் வாலை, நமது வசதி கருதி வெட்டி விடுவது எத்தனை தவறு என்பது பற்றிய சுப்புவின் பாடலுக்கான ரசனை தோய்ந்த சிலாகிப்பு. மக்கள் பின்பற்ற வேண்டியது முன்னதையா? பின்னதையா? யாராவது விளக்கினால் சரி.

●● தமிழக அரசின் சினிமா விருதுகள். இரண்டு வாரங்களாக முதல்வர், கால் கடுக்க நின்றபடியே இருக்கிறார். அரியர்ஸ் வைத்து, மொத்தமாகத் தீர்த்திருக்கிறார்கள். பரபரப்பாகப் பேசப்பட்ட மனோரமா -



✱ பிரணாய் ராய் : கிளாஸ்!



✱ கொத்தமங்கலம் சுப்பு : ரசனை தோய்ந்த சிலாகிப்பு

பிரமிக்க வைத்த பிரணாய் ராய்!


முதல்வர் முத்தக் காட்சியும் இடம்பெற்றது.

●● திரைப்படம் தேன்கூடு. விசு பாணிக் கதை, மைனஸ் விசு. ஒரு நல்ல கதையைப் பச்சை சினிமாத்தனங்களுடன் பாழ்பண்ணியிருந்ததால் பத்தோடு பதினொன்று.

●● பி.பி.ஸியில் காஷ்மீர். சென்னையை விட சாவகாசமாக அந் நகரம் இயங்குவது பார்க்க, சந்தோஷம் கலந்த, வியப்புக் கலந்த, நிம்மதி. ஹிந்துக்கள் கோவிலுக்குப் போகிறார்கள். முஸ்லிம்கள், தர்கா அல்லது மசூதிக்கு. ஒரு சப்தம் கேட்க வேண்டுமே, மூச்... தீவிரவாதமாவது, ஒன்னாவது! ஜனங்கள் முகத்தில் சிரிப்பு தெரியறது சுவாமி!

– கிச்சா

பஸ்ஸில் குண்டு, காந்தி சிலைக்குக் குண்டு, விமான மற்றும் டீ.வி. நிலையங்களில் குண்டு என்று வெடிகுண்டுச் சம்பவங்கள் தமிழகத்தில் சர்வ சாதாரணமாகி விட்டன. இந்த வெடிகுண்டுக் கலாசாரம் எப்போது தோன்றியது? எப்படி? ஏன்? இதை முற்றிலுமாக ஒழிக்க என்ன வழி? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்க முற்படுகிறது பல்வேறு தரப்புகளிலிருந்தும் தகவல் சேகரித்து எழுதப்பட்ட இந்தக் கட்டுரை.



● ஹிந்தி பிரசார சபாவில் குண்டு வெடிப்பு...

தமிழகத்தில் பரவிவரும் வெடிகுண்டுக் கலாசாரம்!

"வெள்ளையனே, வெளியேறு" கோஷத்தின் பலனாக காங்கிரஸ்காரர்கள் (முக்கியமாகத் தலைவர்கள்) உள்ளே இருந்த சமயம். கம்யூனிஸ வாசனை மெதுவாக இந்தியக் காற்றோடு கலக்க ஆரம்பித்தது. காந்தியின் சாத்வீக அணுகுமுறை வெள்ளையரிடம் எடுபடாது; கோல் எடுத்தாலொழிய குரங்கு ஆடாது என்கிற ரீதியிலான போதனைகள்; பிரசங்கங்கள்; பரிசோதனைகள்.

1949-ல் ஆந்திரா பக்கம் ஒரு தலை உயருகிறது. பி.டி. ரணதிவே. 'கையைக் கட்டிக் கொண்டிருப்பதை விட, கையில்லாமல் இருக்கலாம். வாயை மூடிக் கொண்டிருப்பதை விட ஊமையாக இருக்கலாம். உங்கள் ரத்தம் கொதிக்கவில்லையா? உங்கள் நரம்பு புடைக்கவில்லையா?'

- இந்த ரீதியில் ஜனங்களை டரை விளீன் பண்ணுகிறார். ரஷ்யாவையும், சீனாவையும் உதாரணம் காட்டுகிறார்.

ரணதிவே ஒரு கம்யூனிஸ்ட். இடது, வலது பிர்வதற்கு முந்தின கம்யூனிஸ்ட். ரத்தம் தோய்ந்த அவரது வார்த்தைகளில் ஜனங்கள் குதித்தெழுகிறார்கள். விளைவு - தெலுங்கானாவில் உழைப்பை உறிஞ்சும் எழுபது நிலச்சுவான்தார்கள் கொல்லப்படுகின்றனர்.

62-ல் சீனா படையெடுக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி பிளக்கிறது: சி.பி.ஐ., சி.பி.எம். மேற்கு வங்காளம், கேரளா, திரிபுராவில் ஆட்சி அமைக்கும் அளவுக்கு சி.பி.எம். செல்வாக்குப் பெறுகிறது.

ஒரு பிரிவுக்கு இதில் திருப்தி இல்லை. ஆட்சியில் இருப்பவர்களை வோட்டுப் பொறுக்கிகள் என்று வர்ணித்தது.



* பல்வேறு டிசைன்களில் வெடிகுண்டுகள்...

'வோட்டில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை; வேட்டில்தான்!' என்று 'கவித்துவம் நிரம்பிய' பகிரங்கமான பிரகடனத்துடன் மேற்கு வங்காளத்திலுள்ள நக்ஸல்பாரி என்கிற இடத்தில் கானு சன்யால், சாரு மஜூம்தார் ஆகியோர் தலைமையில் கூட்டம் கூடி முடிவெடுக்கிறார்கள். தங்களை நக்ஸலைட்டுகள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறார்கள். மக்கள் யுத்தப் பிரிவு (PWG) என்கிற நாமகரணத்துடன் உருவான இவர்களின் தலையாய நோக்கம், சமூக விரோதி(?)களை ஒழிப்பது அல்லது அழிப்பது.

- இந்த இடத்தில்தான் வெடிகுண்டு கலாசாரம் ஆரம்பிக்கிறது.

ஆந்திரா வரைக்கும் வீசின காற்று தமிழ்நாட்டுப் பக்கமும் அடிக்க ஆரம்பிக்கிறது. அப்பு என்கிற கம்யூனிஸ்ட் - தீவிர கம்யூனிஸ்ட் (நக்ஸலைட் என்பதன் பய முறுத்தலில்லாத சொல்லாட்சி) இயக்கத்தை வேரூன்றி, உரமிட்டு, வளர்க்க ஆரம்பிக்கிறார்.

அதே சமயம், தென் ஆற்காடு பெண்ணாடம் பகுதியில் பிறிதொரு தலை முளைக்கிறது : வாத்தியார் கலியபெருமாள். (ஆயுள் தண்டனைக் கைதியான இத்தீவிரவாதி தற்சமயம் தண்டனை முடிந்து தம் கிராமத்திற்குச் சென்று அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.)

கலியபெருமாள் ஒரு காரியம் பண்ணினார். அண்ணாமலை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு பொறியியல் மாணவனைத் துணைக்குச் சேர்த்துக் கொண்டு, முதன் முறையாக, சொந்தமாக வெடிகுண்டு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

ஆப்பரேஷன் சக்ஸஸ்; நோயாளி அவுட் என்கிற பழமொழியை மெய்ப்பிக்கும்படி பொறியியல் மாணவர், தாம் தயாரித்த குண்டு வெடித்தே இறந்தார்.

தமிழ்நாட்டில் நடந்த முதல் வெடிகுண்டுச் சம்பவம் இது.

தொடர்ந்து அவ்வப்போது பிரச்னைகளின் தீவிரத்திற்கு ஏற்ப குண்டுகளின் தரம் நிர்ணயிக்கப்பட்டு, 75 முதல் நேற்றைய ஹிந்தி பிரசார சபா சம்பவம் வரை தமிழகத்தில் நடைபெற்று வரும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பலப்பல. ஆனாலும் கணக்கு வழக்கு இல்லாமல் நடக்கிறது என்று கூறி விட முடியாது. பஞ்சாப், ஆந்திரா போன்ற மாநிலங்களோடு ஒப்பிட்டால் நிச்சயமாக அரசியல் வாதிகள் பார்வையில் தமிழகம் 'அமைதிப் பூங்கா'தான்.


1975 - 84 வரையுள்ள ஆண்டுகளில் தமிழகத்தில், வால்டர் தேவாரம் தலைமை



* பிரபாகரன்



* கிட்டு



* சிவராசன்



* தனு




* தேவாரம்

குண்டு எப்படி வெடிக்கிறது?

பாஸ்பரஸ், டி.என்.டி., பென்டலைட் போன்ற வெடி பொருட்களால் நிரப்பப்பட்ட குப்பி அல்லது டப்பி. அதன் மேல் ஓர் எலக்ட்ரிக் டெட்ரனேட்டர். இது, வத்திக்குச்சி மாதிரி. இதன் தொழில், பற்றவைத்தல். வெளிப்புறத்தில் இரும்பு அல்லது பிளாஸ்டிக் 'சொக்காய்'. கன்னி வெடியானால் - இரண்டு ஒயர் கனெக்ஷன். ஒரு பாட்டரி செட் - மின் சப்ளைக்காக. ஒயர்களை இணைத்தால் சப்ளை கிடைக்கிறது. டெட்ரனேட்டர் பற்றுகிறது. வெடி பொருளை எரிக்கிறது. டமால். கை எறி குண்டுகள் உராய்வின் மூலம் வெடிக்கின்றன. ஆனால் அமைப்பு இதே.





வெடிகுண்டுகளை எப்படி செயலிழக்கச் செய்கிறார்கள்?

1. தகவல் கிடைத்ததும் சம்பந்தப்பட்ட இடத்தின் சுற்றுப்புறம் முழுக்க காலியாக்கி விடுவது. அதாவது ஒரு ஜீவராசி இல்லாமல்.

2. உடைமைகளுக்குச் சேதம் ஏற்படாமல் சுற்றி மணல் மூட்டைகள் அடுக்குதல்.

3. வெடிகுண்டை அலக்காக எடுத்துத் தண்ணீரில் போட்டு விடுவது.

4. டைம் பாமாக இருந்தால் ஒயர் இணைப்பைக் கண்டுபிடித்து 'கட்'. (முன்னாள் பிரதமர் வி. பி. சிங் சென்னை வந்த போது தலைமைச் செயலக வாசலில் குண்டு வைத்திருப்பதைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்தது நினைவிருக்கிறதா? அது இம் முறையில்தான்.)

விலான போலீசாரின் வேட்டையில் நக்ஸல் கும்பல் குறைந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். இப்போதும் நக்ஸலைட்டுகள் தமிழ்நாட்டில் இல்லாமல் போகவில்லை. ஆனால் அவர்கள் 'தனிமனிதக் கொலை' என்கிற சித்தாந்தத்தைக் கைவிட்டு விட்டு, பேனர் வைப்பது, பிட்நோட்டீஸ் வழங்குவது, திடீர் தெருக் கூட்டங்கள் நடத்துவது என்பதோடு தங்கள் கைங்கர்யத்தை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பிரச்னை அதன் பிறகு வேறு வகையில் தலைதூக்க ஆரம்பித்தது. இலங்கையிலிருந்து அகதிகளும், போராளிகளும் வெளியேற, இந்தியா அரவணைக்கிறது. தற்காப்புக்காக ஆயுதப் பயிற்சி அளிக்கிறது. ரூட் இங்கேதான் தடம் மாறுகிறது.

இங்கு ஆயுதப் பயிற்சி பெற்ற போராளிகள், லெபனான், லிபியா, சைப்ரஸ், தாய்லாந்து, சிங்கப்பூரிலிருந்து தளவாடங்களை வாங்குகிறார்கள். இந்தியாவின் பரிபூரண ஆசியுடன் இலங்கை சென்று மீண்டும் போராடுகிறார்கள். இலங்கை அரசுக்கு ஏக சேதம்.

தொடர்ந்து திம்பு பேச்சு வார்த்தை தோல்வியில் முடிகிறது. மீண்டும் போர். மீண்டும் சேதம். ஜெயவர்த்தனா - ராஜீவ் உடன்படிக்கை; அமைதிப்படை. இது போராளிகளுக்குப் பிடிக்கவில்லை. அன்று தொடங்கின எல்.டி.டி.ஈ.யின் இந்திய விரோதப் போக்குத்தான், ஆங்காங்கே நடந்த சிறு சிறு குண்டு வெடிப்பிலிருந்து ராஜீவ் மரணம் வரை - தமிழ்நாட்டில் நடைபெற்ற பல்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குக் காரணமாயிருக்கிறது.

ஒருவகையில் நக்ஸலைட்டுகளால் ஏற்பட்ட பாதிப்புகளை விட விடுதலைப் புலிகளின் கைங்கர்யம் - தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ரொம்ப அதிகம் என்றே சொல்ல வேண்டும். ஆரம்ப காலத்தில் அவ்வியக்கம், ஒரு விடுதலை இயக்கமாகச் சித்திரிக்கப்பட்ட காரணத்தால் - அதனால் ஏற்பட்ட அனுதாபத்தினால் எக்கச்சக்க ஆதரவு அவர்களுக்கு.

விவசாயிகளுக்குக் கிணறு தோண்ட, கல்லுடைப்பவர்களுக்கு மலை பிளக்க அவ்வப்போது மாவட்ட ஆட்சியர்களால் வெடி மருந்துப் பொருட்கள் வழங்கப்படும். இதில் தெரிந்தோ தெரியாமலோ ஒரு பகுதி விடுதலைப் புலிகள் வசம் போய்ச் சேர்ந்தது. சக்திவாய்ந்த டி.என்.டி., ஜெலட்டின், பெண்டலைட், பொட்டாஷியம் குளோரைடு, பிளாக்பௌடர் போன்றவை. இவையும் போதாமல் புலிகள் தாமே இவைகளைத் தயாரிக்கவும் ஆரம்பித்தார்கள். அவை IED எனப்படும் Improvised Explosive Devices.

தமிழ்நாட்டில் 1974 முதல் பல சந்தர்ப்பங்களில் வெடித்த குண்டுகள் இவை :

1. கிரனேட் - எறி குண்டு. (சினிமாவில் பார்த்திருக்கலாம். மொட்டைத் தலை வில்லன் வாயில் கடித்துத் தூர எறிவான்)

2. கண்ணி வெடி - நிலத்தடியில் புதைத்து வைப்பது. கை, கால் பட்டு அல்லது வாகனம் பட்டு அது 'டிஸ்டர்ப்' ஆனால் டமால்.

3. டிரான்ஸிஸ்டர் குண்டு - விளக்கம் தேவையில்லை. டிரான்ஸிஸ்டரில் வைப்பது. ஆன் பண்ணினால் சர்க்யூட் முழுமையடைந்து, ஆள் குளோஸ்.

4. டைம் பாம் - மீண்டும் சினிமா. கிளைமாக்ஸ்களில் ஹீரோயினைக் கட்டிப் போட்டு, பக்கத்தில் டிக்டிக் என்று சப்தம் பண்ணுவது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வெடிகுண்டுச் சம்பவங்களுக்குப் பெரும்பாலும் ஜாதிக் கலவரங்களும், வரப்புத் தகராறுகளுமே காரணமாக இருக்கின்றன.

தூத்துக்குடியில் இது அதிகம். நாட்டு வெடி குண்டுகள் பெருமளவு இங்கு அழிவை ஏற்படுத்தியிருக்கின்றன.

அத்தனை கலபமா, வெடி குண்டு கிடைப்பது?

தமிழ்நாட்டில் வெடிமருந்து தயாரிக்கும் நிறுவனம் காட்பாடியில் இருக்கிறது. ஜெலட்டின் குச்சிகள் இங்கு உருவாக்கப்படுகின்றன.

மற்றபடி பீகாரில் ஒரு நிறுவனம், மலை உடைப்பதற்கும் கிணறு வெட்டுவதற்கும் தேவையான வெடி மருந்துகளைத் தயாரிக்கிறது.

வெடி பொருள்கள் தேவைப்படுவோர், தங்கள் தேவைக்கான காரணத்துடன், தாசில் தார் கையொப்பத்துடன், மாவட்ட கலெக்டருக்கு அப்ளை பண்ணினால், அவர் தேவை தானா என ஆலோசித்து, தேவையெனில் தேவைக்கேற்ப டீலருக்குக் கடிதம் கொடுப்பார்.

இத்தனையையும் மீறி நாச வேலைக்கு இவை பயன்படுகிறதென்றால் அதற்குக் காரணம்?

சந்தேகம் இல்லாமல் நீங்கள் நினைப்பதுதான்!



முதல்வராகிறார் பவார்; ஆனாலும்...

●● பிரதமர் பதவி மீதே குறி வைக்கிறார்கள்!

- அடுத்த இதழில் சிறப்புக் கட்டுரை

வெளிப்படையாக, தயக்கமின்றி வன்முறை பற்றிப் பேசும், எழுதும் இயக்கங்களைத் தடைசெய்தால் இத்தகைய நாச வேலைகள் நடக்காமல் தடுக்கலாம் என்பது வாஸ்தவம். ஆனால் பிரச்னையின் வேர்களைத் தேடி நிவாரணம் அளிப்பது சிறந்ததல்லவா?

பொதுவாகப் பார்க்கப் போனால், இது போன்ற நாச வேலைகளில் ஈடுபடுகிறவர்கள் யார்?

அதிகபட்சம் விவசாயிகளும், வேலையில்லாத மாணவர்களும்.

கோவை, தென்னாற்காடு, வட ஆற்காடு போன்ற மாவட்டங்களில் நெல் போன்ற தானிய உற்பத்தி செய்யக் கூடிய விவசாய நிலங்களில், அதை விடுத்து அதிக சிரமமில்லாமல் நிறைய பணம் ஈட்டித் தரக்கூடிய வாழை, கரும்பு போன்றவற்றை நில சொந்தக்காரர்கள் பயிரிடுவதால் கூலி விவசாயிகளின் வேலை வாய்ப்பு பாதிக்கப்படுகிறது. அதனால் கலகம், புரட்சி, வெட்டு, குத்து, கொலை, வெடி, எக்செட்ரா.

நகர்ப்புறத்தைப் பொறுத்தவரை படித்தாலும் வேலையில்லை. படிக்காவிட்டாலும் வேலையில்லை. சோம்பித் திரிபவர்களை, சமூக விரோத சக்திகள் தம்பால் இழுத்துக் கொள்வது கலபமாக இருக்கிறது.

தவிர, நமது அரசியல்வாதிகள், வாயைத் திறந்தாலே உயிரைக் கொடுக்க, அல்லது எடுக்க மட்டுமே மக்களை அழைப்பார்கள். இந்தப் போக்கு மாற வேண்டும். ஏன், பண்பாட்டையும், கலாசாரத்தையும் கட்டிக் காக்க மக்களுக்கு அழைப்பு விடுத்தால் என்னவாம்?

- பா. ராகவன்

அட்டையில் நடிப்பு : பசுபதி


அட்டை வண்ணப்படம் : கோபிநாத்

மனைவி : ஏங்க... நம்ம பையனைப் 'புறம்போக்கு'ன்னு திட்டாதீங்கன்னு சொன்னேனே... கேட்டீங்களா...?

கணவன் : ஏன்டீ... என்ன ஆச்சு...?

மனைவி : பக்கத்து வீட்டு அரசியல் தலைவர் இவனையும் வளைச்சுப் போட்டுட்டாரு...!

- ராஜ்குமார்



முதலீட்டாளருக்கு முன்யோசனை தேவை!

முன்பு ஒரு நிறுவனம் பங்கு மார்க்கெட்டுக்கு மூலதனம் கோரி வருகிறது என்றால் அதனைக் கண்காணிக்க Controller of Capital Issues என்ற அமைப்பு இருந்தது. ஆனால் சென்ற ஆண்டு பட்ஜெட்டில் இந்த அமைப்பு ஒழிக்கப்பட்டு விட்டது. நிறுவனங்கள் Securities and Exchange Board of India என்ற அமைப்பினிடம் தங்கள் எண்ணத்தைத் தெரியப்படுத்தி விட்டுக் காரியத்தில் இறங்கலாம் என்றாகி விட்டது. இதே நேரத்தில் மக்களிடையே பங்கு மார்க்கெட்டில் புதிய பங்குகளை வாங்கினால் அவற்றின் மதிப்பு உயர, லாபம் கிடைக்கும் என்ற எண்ணம் பரவலாக ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பல நிறுவனங்கள் பத்து ரூபாய் பங்கை மிக அதிகமான விலைக்கு விநியோகித்து வருகின்றன. பிரீமியம் என்று இதனைச் சொல்வார்கள். பத்து ரூபாய் பங்குக்கு ரூ 90, ரூ 100 என்றெல்லாம் பிரீமியம் வைத்து விநியோகிக்கின்றன. இதனால் இவர்கள் ஐம்பது சதம் லாபப் பங்கீடு (டிவிடெண்ட்) அளித்தால் கூட வங்கி வட்டி கூடக் கட்டி வராது. பங்குகளை விற்றுத்தான் லாபம் காண முடியும். எனவே மிகுந்த முன்யோசனையுடன்தான் முதலீட்டாளர்கள் செயல்பட வேண்டும். அடுத்த சில வாரங்களில் சில நல்ல நிறுவனங்கள் புதிதாக மூலதனம் கோரி பங்கு மார்க்கெட்டுக்கு வர உள்ளன. இவற்றிலும் பிரீமியம் மிக அதிகமாக உள்ளதைக் கவனிக்கலாம்.

EID PARRY (INDIA) LTD

முருகப்பா குரூப்பைச் சேர்ந்தது. பீங்கான், சர்க்கரை, எலெக்ட்ரானிக்ஸ், உரங்கள் என்று பல துறைகளில் செயல்படுகிறது. மிகப் பிரபலமான இந்த நிறுவனம் நன்றாகவும் நடத்து வருகிறது. தற்போது விரிவாக்கம் கருதி பங்கு மார்க்கெட்டுக்கு வருகிறது. பகுதி அளவில் பங்குகளாக மாற்றிக் கொள்ளக்கூடிய கடன் பத்திரங்களை வழங்கவிருக்கிறது. ஒவ்வொரு டிபஞ்சர் கடன் பத்திரமும் ரூ 200 மதிப்புடையது. இதில் ரூ 100 பெறுமானமுள்ள பகுதி ஒரு பங்காக மாற்றப்படும். அதாவது பிரீமியம் ரூ 90 ஆகிறது. பங்காக மாற்றப்படாத பகுதிக்கு 15% வட்டி உண்டு. இன்று இந்த நிறுவனத்தின் பங்குகள் மார்க்கெட்டில் ரூ 190க்கு விலை போகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளலாம்.

GODREJ SOAPS LTD

காட்ரெஜ் என்றால் வீட்டுக்கு வீடு எல்லாருக்கும் தெரியும். சோப்புகள் தவிர, உணவு வகைகள், வனஸ்பதி, ஸ்டீல் அலமாரி, ஃபிரிஜ், டைப்ரைட்டர் என்று பலவும் தயாரிக்கிறது. வருடத்துக்கு 1500 கோடி பணம் புரள்கிறது. இந்த நிறுவனம் தங்கள் மூலதனத்தில் பொது மக்களின் பங்கையும் கோரி மார்க்கெட்டுக்கு வருகிறது. ஒரு பங்கின் விலை ரூ 140. பிரீமியம் ரூ 130! பிரீமியம் மிக அதிகம் என்றாலும் நிறுவனத்தின் சொத்துக்கள், கடந்த கால சாதனைகள், எதிர்காலத் திட்டங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு முடிவெடுக்கலாம்.

NAMASTE EXPORTS LTD

பெங்களூரில் உள்ள இந்த நிறுவனம் தோல் ஆடைகள் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் இதன் செயல்பாடு நன்றாகவே இருந்திருக்கிறது. தொழிலகத்தை விரிவாக்கவும் நவீனமாக்கவும் இந் நிறுவனம் திட்டமிட்டு பங்கு மார்க்கெட்டுக்கு வருகிறது. இந்த நிறுவனமும் பத்து ரூபாய் பங்கை ரூ 100க்கு விநியோகிக்கிறது. அதாவது பிரீமியம் ரூ 90! என்றாலும் இந்த நிறுவனத்தின் கடந்த கால சாதனைகள் நம்பிக்கை அளிப்பதாக இருப்பதால் கொஞ்சம் பசை உள்ளவர்கள் துணிந்து முதலீடு செய்ய முன்வரலாம்.

உங்கள் செல்வம்

- வி. கோபாலன்

எண் விளையாட்டு

பரிசு ரூ. 250

ரொம்ப சிம்பிள். ஆனால் பரிசு பெற மூளையைக் கொஞ்சம் கசக்கிக்கணும்! 7 (ஏழு) என்றதும் உலக மகா அதிசயங்கள் நினைவு வரும். ''7-அப்'' பானமும் ஞாபகம் வரும். இன்னும் என்னென்ன நினைவு வரும்? ஏழு என்ற எண் தொடர்புள்ள விஷயங்களாக இந்தப் பக்கத்தில் பட்டியலிடுங்கள். பட்டியல் நீளுகிறது என்றால் மட்டுமே தனித் தாளிலும் எழுதி இணையுங்கள். மிக அதிகமான அம்சங்களை அடித்தல் திருத்தல் இன்றிக் சுத்தமாக எழுதியவருக்கு ரூ 250/- பரிசு. விலாசம் எழுதி இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்பக் கடைசி தேதி 24.3.93. உறை மீது ''எண் விளையாட்டு - 1'' என்று குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

1. உலக மகா அதிசயங்கள்
2. '7-அப்' பானம்
3.
4.
5.
6.
7.
8.
9.
10.
11.
12.
13.
14.
15.
16.
17.
18.
19.
20.
21.
22.
23.
24.
25.
26.
27.
28.
29.
30.

பெயர் : ....

விலாசம் : ....

....

....

கணக்குக் காட்டாதவர்களின் கணக்குகள்!



[1989- ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட சிலர் தங்கள் தேர்தல் செலவுக் கணக்குகளைக் காட்டவில்லையாம். அதனால் அவர்கள் அடுத்த தேர்தலில் நிற்கக் கூடாதென்று தேர்தல் கமிஷன் தடைவிதித்திருக்கிறது. அவர்களில் சிலரை ஆபீஸ் பையன் பேட்டி கண்ட போது...]

''சார், நீங்க உங்க தேர்தல் செலவுக் கணக்கைக் காட்டலேன்னு சொல்றாங்களே...''

''சுத்தப் பொய், தம்பி! தேர்தல் நடக்கிறதுக்கு ஆறு மாசம் முந்தியே தேர்தல் செலவுகளை ஒழுங்கா எழுதி வச்சிருந்தவன் இந்தியாவிலேயே நான் ஒருத்தன்தான்.''

''அதெப்படிங்க தேர்தலுக்கு ஆறு மாசம் முந்தியே...''

''ஒண்ணும் பிரமாதமில்லே. இப்ப மாத நாவல்கள் எழுதறாங்களே, எப்படி? எல்லாத்துக்கும் கற்பனை வேணும். அவ்வளவுதான்.''

''பின்னே ஏன் கணக்குக் காட்டலேன்னு சொல்றாங்க?''

''அதும் பேருதான் கவர்மெண்ட்டு ஊழல். அவங்க ஆபீஸ்ல எந்த மூலையிலோ தூக்கிக் கடாசிட்டு, பழியை என் தலையிலே போடறாங்க.''

''நீங்க ஏன் சார் கணக்குக் கொடுக்கலே?''

''தம்பி, ஒரு கணக்கு லெட்ஜர் என்ன விலை இருக்கும்னு நினைக்கிறே? நூத்து முப்பத்திரண்டு ரூவாங்கறான்! என் கையிலே ஏது அத்தனை துட்டு? தோளிலே போட்டிருக்கேனே இந்தத் துண்டு, இதைத் தவிர மத்ததெல்லாம் எலெக்ஷனிலே போயிட்டுது. செலவுக் கணக்குக் காட்டுன்னு சொல்றவங்க, அதுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களை இலவசமாய் வழங்கணும். அப்பத்தான் நாடு உருப்படும்.''

''கணக்குக் காட்டலேன்னு உங்களை...''

''இரண்டு மாசம் முந்தி ரொம்பக் குளிரா இருந்தது இல்லே? அப்பப் பார்த்தா என் மாமியார் வரணும்?''

''அதனாலே?''

''குளிர் காய்கிறேன்னு சொல்லி ராவு பூரா கணக்குகளைக் கொளுத்திட்டுது. அந்தப் பொம்பளையையே நேரிலே தேர்தல் கமிஷன் ஆபீசுக்கு அழைச்சிட்டுப் போய்க் காட்டினேன். ஒப்புக்க மாட்டேனிட்டாங்க.''

''சார், உங்க கணக்கு...''

''தம்பி, உனக்கு மட்டும் ரகசியமாய்ச் சொல்றேன். எனக்கு ஒரு பெரிய வூடு. ரெண்டு சின்ன வூடு. தேர்தல் செலவுக்காக மூணு பேர் கையிலேயும் பணத்தை மூணாப் பிரிச்சுக் கொடுத்திருந்தேன். இப்பக் கணக்குக் கேட்டால் முதல்லே அவள்கிட்டே வாங்கிட்டு வான்னு இவள் சொல்றாள். இவள் கையிலே வாங்கிட்டு வான்னு அவள் சொல்றாள். ரெண்டு பேர் கையிலேயும் கணக்குக் கேட்டிட்டு அப்பாலே என்னைக் கேளுன்னு மூணாமவள் சொல்றாள். தம்பி, சின்ன வூடு வச்சிக்கவே கூடாது. அப்படியே வச்சிக்கிட்டாலும் ஒண்ணுக்கு மேலே கூடவே கூடாது.''

''ஐயா, நீங்க...''

''ஒண்ணும் கேட்காதே, தம்பி. மனசே வெறுத்துப் போயிருக்கிறேன்.''

''அடடா! ஏனுங்க?''

''பாரேன் பின்னே! இது காந்தி பிறந்த நாடுன்னு சொல்றாங்களே கண்டி, உண்மைக்கு இங்கே மதிப்புக் கிடையாது!''


''அப்படிங்களா?''

''ஆமாம். உண்மையான செலவைச் சொல்றேன், ஒப்புக்க மாட்டேங்கறாங்க.''

''உண்மையான செலவு என்னங்க?''

''ஒரு ரூபாய் பத்துக் காசு.''

– 'அவிட்டம்'


என்ன, பி.ஜே.பி.யோட கூட்டணி, மத்திய அமைச்சரவையில மூணு அ.தி.மு.க. அமைச்சருங்க அப்படி இப்படீன்னு ஏதோ பேசினீங்களாமே? ...
ஜெ.
ஸாரி, ஸாரி... ஸாரி மேடம்! நீங்கதான் பிரதமர், பி.ஜே.பிக்கு மூணு அமைச்சர் பதவி, அப்படீன்னு பேசியிருக்கேனும் ஏதோ வாய் தவறி... ஸாரி..ஸாரி... ஸாரி...
நெடுஞ் செழியன்
ம், நானும் கவனிச்சிக்கிட்டுதானுங்க இருக்கேன...
சேஷன்
தேர்தல் வெற்றி
தமிழக காங் கட்சி
போலீஸ்கார ஐயா, கொஞ்சம் கண்டுக்காம இருந்தீங்கன்னா அந்த கப்பை கிளப்பி வாங்கிடுவேன்! அப்பாலே, உங்களையும் கவனிச்சுக்குவேன்...
நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் (டூ) இல்லை...



கல்கி



1993
மார்ச் 14
மலர் : 51
இதழ் : 33
ஆங்கீரச
பங்குனி 1

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

பாரதம் உயர ஒரு பட்ஜெட்

ரயில்வே அமைச்சர் தமது உருட்டுக்கட்டை பட்ஜெட்டால் தாக்கியதில் ஏற்பட்ட ரணத்துக்கு மன்மோகன் சிங் களிம்பு தடவியிருக்கிறார். அவர் பொறுப்பு ஏற்றபோதே சொன்னார் : "அற்புதங்களை எதிர்பார்க்காதீர்கள். கடந்த பல ஆண்டுகளில் நேர்ந்துள்ள தவறுகளைச் சரிசெய்ய எனக்குச் சில ஆண்டுகளாவது தேவை." அதன்படி படிப்படியாகப் பொருளாதாரத்தைச் சீர்செய்து வருகிறார்.

பட்ஜெட்டில் முக்கிய குறையாகப் பலராலும் சுட்டிக்காட்டப்படுவது தனிநபர் வருமானவரியிலும் கம்பெனிகளின் வருமானவரியிலும் சலுகை ஏதும் காட்டப்படவில்லை; சேமிப்புக்கு ஊக்கம் தரப்படவில்லை என்பதே. சலுகை காட்டாது போனாலும் கூடுதல் வரி விதித்து வதைக்காமல் விட்டாரே, அதற்காகவே நன்றி செலுத்தலாம். செல்லையா கமிட்டி அறிக்கையை ஏற்றுக் கொண்டவர், இந்த விஷயத்தைக் கவனிக்காமல் போக மாட்டார். அடுத்த ஆண்டுக்காக அவர் காத்திருப்பதாக நம்பலாம். பட்ஜெட் தயாரிப்பது என்பது செப்பிடு வித்தையல்ல. எல்லாச் சலுகைகளையும் ஒரே சமயத்தில் அறிவித்து விட்டு வருவாய் போதாமல் அரக கைகளைப் பிசைந்து கொண்டு நிற்க முடியாது.

இந்த ஆண்டு முக்கியமான அம்சம் சுங்க வரிகளையும் உற்பத்தி வரிகளையும் கணிசமாகக் குறைத்திருப்பதுதான். இதனால் இங்கு உற்பத்தியாகும் பல பொருள்களின் விலைகள் குறைய, மக்களின் வாங்கும் ஆர்வம் அதிகரிக்க, உற்பத்தி பெருக வாய்ப்புண்டு. அந்த அளவில் தொழில் துறையின் வருவாய் கூடி உற்சாகம் பெறும். இறக்குமதி வரிகள் கணிசமாகக் குறைக்கப்பட்டிருப்பதால் புதிய தொழில்கள் தொடங்கவும் விரிவாக்கம் செய்யவும் இருக்கிற தொழில்களை இன்னும் செவ்வனே நடத்தவும் பெரும் வசதி. இதே நேரத்தில் உள்நாட்டுத் தயாரிப்புகள் அயல்நாட்டுத் தரத்துக்கு உயர்ந்தே ஆக வேண்டிய போட்டாபோட்டி நிர்ப்பந்தம். எல்லாமாகச் சேர்ந்து தொழில்வளம் பெருகவும் பொருளாதாரம் ஸ்திரப்படவும் உதவும்.

அயல்நாட்டிலிருந்து வரும் டாலர்களைப் பகுதி அளவில் மார்க்கெட் நிலவரப்படி மாற்றிக் கொள்ளலாம் என்றும் பகுதி அளவில் ரிஸர்வ் வங்கி நிர்ணயித்த விகிதத்தில் என்றும் இருந்த நிலை மாறி, முழுவதையுமே மார்க்கெட் நிலவரப்படி மாற்றிக் கொள்ளலாம் என்ற சலுகை, ஏற்றுமதியாளர் காட்டிலே மழை. இதனால் ஏற்றுமதி வர்த்தகத்துக்கு நிறையவே ஊக்கமளித்ததாகிறது. இனி தொழில் துறையும் ஏற்றுமதி வர்த்தகமும் தங்கள் பங்குக்கு நாட்டுப்பற்றோடு செயலாற்றி, நிதி அமைச்சர் வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரர்களாக நடந்து கொள்ள வேண்டியதுதான் பாக்கி. குறைகூற இடமின்றி இவர்களும் நடந்து கொண்டால் அடுத்த பட்ஜெட்டில் இன்னும் அதிகமான அரவணைப்பை எதிர்பார்க்கலாம்.


பட்ஜெட்டின் மிகப் பெரிய சாதனை என்று கருதத்தக்கது ஏராள வரிச் சலுகைகளை அளித்த பிறகும் துண்டு விழும் தொகை ரூ 4300 கோடி என கட்டுப்படுத்தியிருப்பதுதான். ஆண்டுக்கு ஆண்டு பற்றாக்குறையை இவ்வாறு குறைத்து வரும் நிதி அமைச்சர் பாராட்டுக்குரியவராகிறார். இதனால் பணப்புழக்கம் குறைய, ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது விலைவாசி உயரும் வேகம் தணியும். ஏற்கெனவே இதில் கணிசமான வெற்றி பெற்றுள்ளார் நிதி அமைச்சர்.

பற்றாக்குறை அதிகமில்லை என்றபோதிலும் திட்டச் செலவினத்துக்கும் பாதுகாப்புச் செலவுகளுக்கும் (ராணுவம்) தாராளமாகவே நிதி ஒதுக்கியிருக்கிறார். வரிகளைக் குறைத்தாலும் உற்பத்தியும் வியாபாரமும் சூடு பிடிக்க, வரி வசூல் அதிகரிக்கும் என்று நிதி அமைச்சர் எதிர்பார்ப்பதையே இது உணர்த்துகிறது.

பரிதாபத்துக்குரிய ஒரு விஷயம், அரசின் உற்பத்திக்கு உதவாத செலவினங்களை நிதி அமைச்சரால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது. அவமானப்பட வேண்டிய விஷயம், முன்னெப்போதையும் போலவே கல்வி அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது என்பது. கல்வியில் கவனம் செலுத்தாத அரசாங்கம் நாட்டை வேகமாக முன்னேற்ற முடியாது.

இதையெல்லாம் எதிர்காலத்திலாவது கவனித்து மன்மோகன் சிங் சரி செய்வார் என்று கருதலாம்தான். ஆனால் தொடர்ந்து நல்லது செய்ய அவரை எதிர்க்கட்சிகள் அனுமதிக்க வேண்டுமே! ஆட்சி நிலைத்தால் அல்லவா அவர் இன்று போல் நாளைக்கும் தமது ஆற்றலைக் காண்பிக்க முடியும்? ஆர்ப்பாட்ட அரசியல் நடத்தும் எதிர்க்கட்சிகள் யோசிக்கட்டும்.

லக்ஷ்மி கல்யாணம் வைபோகமே!



ஒரு நல்ல மனிதனின் அமைதியான வாழ்க்கையில் புகுந்து நிம்மதியைக் குலைக்கும் உறவினர்கள் இன்றைக்கும் உண்டு. ஆனால் ''லக்ஷ்மி கல்யாணம், வைபோகமே'' சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்திய நாடகம். அதனால் இதனை நன்கு அனுபவிக்க நாற்பதுகளில் இளைஞராக இருந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அன்றைய கும்பகோணத்தில் ஒரு பிராமணக் குடும்பச் சூழல் எப்படி இருந்தது என்று புரிந்து கொள்ள முடிவதும் இன்றைய தலைமுறைக்கு சுவாரஸ்யம்தான்.

சிரிக்க வைப்பது மட்டுமல்ல; சீரியஸாகத் தமக்கு நடிக்கவும் தெரியும் என்று நிரூபிக்கிறார் ஒய். ஜி. மகேந்திரா. பண்ணையார் சங்கரனாகத் தோன்றும் இவரது வாழ்வில் புகுந்து அதனைச் சின்னாபின்னப்படுத்தும் உறவினர்களாக லீலா, கப்புணி, ரெவில் ஆகிய மூவரும் சக்கைப் போடு போடுகிறார்கள். சூழ்ச்சியோடு காமெடி கலக்கும் போது இரண்டுமே இரட்டிப்பு சுவாரஸ்யம் பெறுகின்றன.

திருமணமே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்த சங்கரனை வற்புறுத்தி அவன் விரும்பிய ஒரு கனபாடிகளின் பெண்ணான லக்ஷ்மியை (வைஷ்ணவி) திருமணம் செய்து வைக்க உறவினர் மூவரும் உதவுகிறார்கள். மூன்று வருடங்களாகியும் லக்ஷ்மிக்கு ஒரு குழந்தை பிறக்காமற்போகவே, இன்னொரு திருமணம் செய்து கொள் என்று மறுபடி இவர்களே சங்கரனைத் தூண்டுகிறார்கள். இதைக் கேட்டதும் லக்ஷ்மி யாரிடமும் சொல்லாமல் தன் தகப்பனார் வீட்டுக்குத் திரும்புகிறாள். அவளை அழைத்து வரக் கிளம்பிய சங்கரனை இவர்கள் தடுக்கிறார்கள்.

இரண்டாம்தாரமாக வந்த சரஸ்வதி (நடிகை : லக்ஷ்மி) நல்ல பெண். அவள் ''அக்கா லக்ஷ்மி''யைப் பார்க்கத் துடிக்கிறாள். ''எனக்கும் குழந்தை இல்லையென்றால் இன்னொருத்தியைக் கலியாணம் செய்து கொள்வீர்களா!'' என்று கேட்கிறாள். தன் தவறை உணர்ந்த சங்கரன், சரஸ்வதியை அழைத்துக் கொண்டு, லக்ஷ்மியின் வீட்டிற்குச் சென்று அவளை அழைத்து வருகிறான். அவள் வந்த அதிர்ஷ்டம், சரஸ்வதிக்குக் குழந்தை பிறக்கிறது. அக் குழந்தையை முழுக்க, முழுக்க, லக்ஷ்மிதான் வளர்க்கிறாள்.

'கதையை இத்துடன் சுபமாக முடித்திருக்கலாம். ஆனால் நாடகம் மேலே செல்லுகிறது. குழந்தைக்கு முடி இறக்குவதற்காக, எல்லாரும் சுவாமிமலை செல்கிறார்கள். சங்கரனும், சரஸ்வதியும் சென்ற வண்டி விபத்தில் மாட்டிக் கொள்ள, அவர்கள் இறக்கிறார்கள். இதைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த மூவர் லக்ஷ்மியை வீட்டை விட்டுத் துரத்தப் பார்க்கிறார்கள். அவள் மறுக்க, அவளைத் துகிலுரியப் பார்க்கிறார்கள். (இது அவசியமா?)

லக்ஷ்மி வீராவேசத்துடன் பேசுகிறாள். சொத்து போனாலும் பரவாயில்லை; குழந்தையை விட முடியாது என்கிறாள். கதை சற்று தொய்யும் இந்த இடத்தில், ஆரம்பத்திலிருந்து சூத்ரதாரி போல, அடிக்கடி வந்து போகும் ஏ.ஆர்.எஸ். தோன்றி, ''லக்ஷ்மியின் கையில் உள்ள குழந்தை நான்தான்'' என்று சொல்லி, கதையைத் தூக்கி நிறுத்த முயற்சி செய்கிறார்.

வைஷ்ணவியும், லக்ஷ்மியும் போட்டி போட்டுக் கொண்டு உணர்ச்சிகளைக் கொட்ட வாய்ப்பளிக்கும் சம்பவங்கள்.

நாடக ஆசிரியர் வெண்ணிற ஆடை மூர்த்தி டீவி கவர்ச்சியை வென்று ரசிகர்களை ஈர்க்கும் சக்தி பெற்றிருக்கிறார். கொஞ்சம் நிகழ்காலத்துக்கு வந்து கதையை எங்கே முடிக்கணும் என்றும் புரிந்து கொண்டு விட்டால் பளிச்சிடும் வெண்மைதான்.

– நாடோடி

அன்புள்ள அலமு அத்தை,

எக்ஸாம், ஸ்கூல் எல்லாம் இல்லாம வெறும் லீவ் மட்டுமே இருந்தா எப்படி இருக்கும்னு பப்லுவும் நானும் யோசிச்சுப் பார்த்தோம்... அப்படியிருந்தா ஸ்கூல் சூப்ரெண்ட்லையெல்லாம் பார்க்காமலே இருக்கணும். அப்புறம் டிராயிங் கிளாஸ்ல ஜவஹர் டீச்சர் வட்டத்தை எப்படி குருவியா வரையலாம்னு காட்டுறதைத் தெரிஞ்சுக்க முடியாதே! இன்னும் மத்த கிளாஸ்லயெல்லாம் புதுப்புது விஷயங்களைக் கத்துக்க முடியாதே!

''நம்ப எப்பவும் வீட்லயே இருந்தா, பாவம் அம்மா! நிறைய பட்சணம் பண்ணிண்டே இருக்கணும்!''னு பப்லு சொல்றா...

எக்ஸாமுக்குப் பயந்துக்கிட்டு யாருமே ஸ்கூலுக்குப் போகாம இருக்கறதில்லை. நிறைய பேருக்கு வேற விதவிதமான பயங்கள் இருக்கே!

சில பேருக்கு நாயைப் பார்த்தா பயம்.


'சி' செக்ஷன் பாலாஜிக்கு ஓணானைக் கண்டால் பயம்.

பப்லுவுக்கு இருட்டு, கரப்பான்பூச்சி - ரெண்டும் பயம். (எனக்கு இருட்டுன்னா அவ்வளவா பயம் கிடையாது. இருட்டு ரூமுக்குள்ளே ஓடிப் போய் சீக்கிரமா லைட்டைப் போட்டுடுவேன்) பக்கத்து வீட்டு சுஜி பாப்பாவுக்குப் 'பூச்சாண்டி'னு சொன்னாலே பயம். அது விஷமம் பண்ணினா அதோட அம்மா 'பூச்சாண்டி வருது'ன்னு பயமுறுத்துவாங்க. உடனே அது விஷமத்தை விட்டுட்டு அம்மாகிட்டே ஓடிப் போயிடும்.

இப்படி பயப்படுத்தக் கூடாதுன்னு அப்பா சொல்றார். பூச்சாண்டின்னு எதுவுமே கிடையாது. அப்படியிருக்கும் போது பயமுறுத்தினா புதுப்புது பயமெல்லாம் பாப்பாவுக்கு வருமாம்... பயந்தாங்குளி பாப்பாவா ஆயிடுமாம்.

பெரியவங்களுக்குக் கூட விதவிதமான பயங்கள் இருக்கலாம். 'Phobia' ன்னு இதைச் சொல்லுவாங்களாம். உயரத்துல போனால் சில பேருக்குப் பயம்; சிலருக்குக் கதவுகளைச் சாத்திட்டா பயம்; இன்னும் சில பேருக்குக் கூட்டத்துக்கு நடுவுல இருந்தால் பயமாம்; வேற சில பேருக்குத் தண்ணியைக் கண்டால் பயமாம்! - அப்பா இதைச் சொன்னப்போ எனக்கு ரொம்ப ஆச்சரியமாயிருந்தது. எங்க பயமெல்லாம் ரொம்ப சின்ன பயம்னு தோணிப் போச்சு!

அன்புடன்,
அருண்



குறைகள்

எடுத்த எடுப்பி லேயே சொல்லி விட வேண்டிய விஷயம் - படப்பிடிப்பும் இதர தொழில்நுட்ப சமா சாரங்களும் படத்தின் கறுகறுப்புக்குப் பெரிதும் காரணமாக அமைந்திருப்பது.

அடுத்து கண்களை நிறைக்கும் அம்சம் - இமயத்தின் பகைமையும், பனிக்குன்றங்களும், நேபாள நகரங்களின் கட்டடக் கலைப் பாங்கும்.

படத்தின் உச்ச கட்டத்துக்குப் படபடப் பைக் கூட்டுவது - குருடாகிப் போன மோகன்லால் செவிப் புலனைக் கூர்மை யாக்கிக் கொள்ளவும், தாக்குதலையும் எதிர்த் தாக்குதலையும் சமாளித்து மோதல்களில் வெற்றி பெறவும் மேற்கொள்ளும் பயிற்சிகள். (ஜாக்கிசான் படங்களின் சாயல்?)

சிறுவன் சித்தார்த்தாவுடன் நிகழும் சந்திப்பைத் தொடர்ந்து அவனிடம் மோகன்லால் படிப்படியாக நெருக் கம் கொண்டு பாசவலையில் கட்டுண்டு போகும் கட்டங்கள் தொண் டைக்குள் வழுக்கிச் செல்லும் ஜீராவில் ஊறிய நயமான ஜாமூன்.

இரண்டே பாடல்கள்... அவற்றில் ஒன்று, 'ஓங்காரி நீலி'. பற்களில் அரை படும் அட்டகாச நெய் முறுக்கு.

புரிந்து கொள்ள முடியாத விவகாரம் : தேர்ந்தெடுக்கப்படும் லாமார் சிறுவனை உயிர்ப்பலி கொடுத்து அதீத சக்தி பெறுவதற்கான காரண காரியங்கள். ஃப்ரூட் ஸாலடில் பாகற்காய்த் துண்டங்கள்.

அமெச்சூர்த்தனத்துக்கு உதாரணம் - நகைச்சுவைக்காகத் திணிக்கப்பட்டுள்ள கப்பண்ணா பாத்திரப் படைப்பு.

அதிகம் வேலையில்லாத கதாநாயகி. எனவே, மதுபாலாவிடம் இதற்கு மேல் எதிர்பார்த்தால் அது அவர் தவறு இல்லை.

- சி.ஆர்.கே.



அட, அப்படியா!

இருபதாவது மாடியிலிருந்து விழுந்த பூனை!

!! இருபதாவது மாடியிலிருந்து கீழே விழுந்த ஒரு பூனை இடுப்பு எலும்பு முறிவோடு உயிர் தப்பியது. இது நடந்தது 1973 ஆம் ஆண்டு - மாண்ட்ரியலில்.

!! நல்ல பாம்பின் விஷம் கீரியைப் பாதிக்காது என்பது தவறான நம்பிக்கை. கீரி மிக வேகமாக நகர்வதால் கடிபடாமல் தன்னைக் காத்துக் கொண்டு பாம்பைத் தோற்கடிக்கும் ஆற்றல் அதற்கு இருக்கிறது.

!! நாய் சிநேகப் பான்மையுடன் வாலாட்டுவது தெரியும். ஓநாய்கள் சந்திக்கும் போது ஒரு ஓநாய் மற்றொன்றின் மூக்கைத் தன் வாயால் தடவிக் கொடுக்கும். பூனைகள் ஒன்றையொன்று முகர்ந்து வரவேற்கும். குரங்குகள் மற்ற நேரங்களில் எழுப்பாத ஒரு பிரத்யேக ஒலியை, பிற குரங்குகளைப் புதிதாகச் சந்திக்கையில் எழுப்பி "ஹலோ" சொல்கின்றன.

!! 'Gila Monster' என்பது ராட்சச வடிவம் கொண்டது அல்ல; மெக்ஸிகோவிலும் தென்மேற்கு அமெரிக்காவிலும் காணப்படும் ஒருவித பல்லியே. 'hee la' என்று இதன் பெயரை உச்சரிக்க வேண்டும்.



!! கொரில்லா குரங்கு பார்க்க பயங்கரமாக இருக்கிறதே யொழிய உணவுப் பழக்கத்தில் அது சுத்த சைவம் தான்.

!! மிக உயரமான விலங்கு ஒட்டைச் சிவிங்கி. மிக அதிக ரத்த அழுத்தம் உள்ள மிருகமும் இதுதான்.

!! நீந்தத் தெரியாத ஒரே விலங்கு ஒட்டகம்!

!! பூனையின் மீசை உணர் கருவியாகப் பயன்பட்டு, வழி கண்டுபிடிக்க அதற்கு உதவுகிறது.

!! Spitting Cobra என்ற ஆப்பிரிக்க பாம்பு 10-12 அடி தூரம் வரை விஷத்தைப் பீய்ச்சி அடிக்கவல்லது. உணவாகப் போகும் விலங்கை இம் முறையில் குருடாக்கி விட்டு, பின் சாப்பிடும்!

!! புதிதாகப் பிறந்த கங்காருக் குட்டி ஒரு அங்குல நீளமே இருக்கும்.

!! ஜெர்போவா என்ற ஆப்பிரிக்க விலங்கு எலியைப் போல் காட்சியளிக்கும். இது தன் தலையைத் திருப்பாமலேயே பின்பக்கம் பார்க்கவல்லது. இதன் கண் பார்வை 360 டிகிரிக்குச் சுழலுவதால் இது சாத்தியமாகிறது. எலி அளவே இருந்தாலும் பத்தடி தூரம் வரை குதிக்கவல்லது இந்த விலங்கு.

!! மனித குலத்தின் மிகப் பழைய, விசுவாசமான நண்பன் நாய்தான். எகிப்தியர்கள் 8000 ஆண்டுகளுக்கு முன்னரே வேட்டையாட நாய்களைப் பழக்கியிருந்தார்கள். கற்கால மனிதன் கூட அவற்றை வேட்டைக்குப் பயன்படுத்தியிருக்கலாம். நாய்களின் மூதாதையர்கள் ஆசியா கண்டத்து ஓநாய்களாக இருக்கக் கூடும் என்று அனுமானிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு :
உதய்லால்

உங்கள் சின்னஞ்சிறு செல்விக்கு மற்றும் உங்கள் எதிர்கால மருமகனுக்கு இப்போது ஒரு தனிச்சிறப்பான பாதுகாப்புத் திட்டத்தை எல்ஐசி வழங்குகிறது.



ஜீவன் சுகன்யா

20 வயது வரை ப்ரீமியம் செலுத்தி
50 வயது வரை இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பைப் பெறுதல்.

ஒரு வயதிலிருந்து 12 வயது வரையுள்ள பெண் குழந்தைகளுக்கென இந்த தனிச்சிறப்பான இன்ஷ்யூரன்ஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி இன்ஷ்யூரன்ஸ் செய்த பெண் தன் 20 வது வயதில் இன்ஷ்யூர் செய்யப்பட்ட முழுத் தொகையைப் பெறுவதோடல்லாமல், தன்னுடைய 50 வது வயது வரை இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பையும் பெறுகிறாள்.

- திருமணம் செய்து கொண்டதும் கூடுதல் கட்டணமின்றி இந்த பாதுகாப்பு கணவருக்கும் நீடிக்கப்படுகிறது.
- 20 வயது வரையே ப்ரீமியம் தொகை செலுத்த வேண்டும்.
- முழுக்காலவரைக்கு உரித்தான போனஸ் தொகையை அவள் 50 வயதை அடைந்ததும் கொடுக்கப்படும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள எல்ஐசி அலுவலகத்தையோ அல்லது எல்ஐசி முகவரையோ அணுகவும்.

மாயக் குதிரை

4

சூர்யா பலவீனமாகக் கண் விழித்து, "டாக்டர்! ஐ ஃபீல் டிப்ரஸ்ட்" என்றான்.

நிலகா அவனருகில் கவலையாக நின்றபடி, "நேத்து நைட் ரெண்டு மணி வரைக்கும் தூங்கலை டாக்டர். அதுக்கப்புறம் டிரிங்க் வேற..." என்றாள்.

அமர்நாத் அவனுடைய பல்ஸ் ரேட் பிடித்துப் பார்த்தார். கண்களை கீழ்ப்புறம் விலக்கிப் பார்த்தார். ஸ்டெத்தாஸ் கோப்பில் இருதயத்துடிப்பு மான 'டிக் டிக்'. தெர்மோமீட்டரை செலுத்திப் பார்த்ததில் நூறு.

"ஃபீவர்" என்றார். நாக்கை நீட்டச் சொன்னார்.

"காலையில என்ன சாப்பிட்டீங்க சூர்யா?"

"சப்பாத்தி, தால், காஃபி."

"ஷூட்டிங் போது எப்படி?"

"எதுவும் சாப்பிட மாட்டேன். எப்பவாவது வெறும் பால் மட்டும்" என்றான். முகத்தை உயர்த்தி அயர்ச்சியாக 'ப்ஹா' என்று மூச்சு விட்டான். முகத்தில் வலி தெரிந்தது.

"உடம்பு வலி இருக்கா?"

"ம்."

"தலைவலி?"

"ஆமாம் டாக்டர். அப்புறம் முதுகு ஜாயிண்ட்ல வலி இருக்கு. ஓ, நோ! ஐ நீட் ஸ்லீப்" என்றான்.

"கண்ணை மூடும் போது வலி இருக்கா?"

"ஆமாம்."

"பசி இருக்கா?"

"ம்ஹூம். இல்லை."

"வாமிட்டிங்?"

"இப்பத்தான் வாந்தி எடுத்தார் டாக்டர்."

"தூக்கம் வரலை?"

"ஐ வெயிட், ஐ நீட் இட் டெஸ்பரேட்லி."

"ஓ. கே. ஓ.கே. ஸிம்பிள் வைரஸ் ஃபீவர். ஒரு ஸெடேஷன் இன்ஜெக்ஷன் போடறேன். நல்லா தூக்கம் வரும். வாட் யு நீட் இஸ் ரெஸ்ட். மிஸஸ் சூர்யா! ஒரு சில டாப்லெட்ஸ்லேயே சரியாயிடும். நத்திங் டு வொர்ரி. நான் சொல்ற 'டயட்' மட்டும் கொடுங்க. அவுட்டோர் ஷூட்டிங்ல இன்ஃபெக்ட் ஆகி இருக்கும். யாரும் 'டிஸ்டர்ப்' பண்ணாம பாத்துக்குங்க. சூர்யா, கையைக் காமிங்க..."

ஃபெனோபார்பிடோன் இன்ஜெக்ஷனைப் போட்டார். கையிலிருந்த தழும்பைக் கவனித்து, "என்ன இது?"

"ஷூட்டிங்ல லேசா கீறிடிச்சு."

"ஏ.டி.எஸ். போட்டீங்களா?"

"இல்லை, டாக்டர். அதான் ஆறிப் போச்சே?"

"ஸிம்ஸ் டு ஹாவ் ஹீல்ட். சூர்யா! ஹார்ஸ் ரைடிங் எப்படி இருக்கு?"

"இருக்கு டாக்டர்" என்றான் பலவீனமாக.

"முதல்ல வாங்கின குதிரை செத்துப் போச்சு" என்றாள் நிலகா.

"அப்படியா?"

"இப்ப 'ப்ரவுனி'ன்னு ஒண்ணு இருக்கு. அதிகாலைப் பனியில ஓட்டம். அதான் இப்படி ஆகுது..." என்றாள் நிலகா.

"ஓக். அவருக்குத் தூக்கம் வருது. வாங்க போகலாம். சூர்யா, நல்லா தூங்குங்க" டாக்டர் அவனைத் தட்டிக் கொடுத்தார்.

சூர்யா பதில் சொல்லாமல் திரும்பிப் படுத்துக் கண்களை மூடிக் கொண்டான். தலைவலி, உடல்வலி, ஜுரம், தொண்டை எரிச்சல் எல்லாம் ஸெடேஷன் மருந்து உபயத்தில் தாற்காலிகமாக விலகியது, நரகத்திலிருந்து விடுபட்டது போல் தோன்றியது.

மயக்கம் கலந்த கனவில் பிளாக்கி குதிரை ஆக்ரோஷமாக ஓடி வந்தது. பிடறியைச் சிலிர்த்து, வாயில் ஒழுகும் பச்சை நுரையுடன், மூச்சு வாங்க, கால்களைத் தூக்கி, வெறியுடன் கனைத்தது.

'சூர்யா! வாயேன்! என் மேல் ஏறிக் கொள்ளேன்!'

கிருஷ்ணா டாவின்ஸி



திலகா கவலையாக டாக்டர் அருகில் சென்று, ''டாக்டர்! ஜுரமா அது?'' என்றாள்.

''பயப்படாதீங்க. சாதாரண பிரேக் போன் ஃபீவர். கொசுவினால வரும். இம்யூன் ஸிஸ்டத்தைக் கொஞ்சம் பாதிக்கும். அவ்வளவுதான். 'கோடின்' கொடுத்திருக்கேன். தூங்கி எழுந்தாச் சரியாயிடும். அதிகமாப் போனா, நாளை காலை வரை. ராத்திரிக்கு இந்த மாத்திரையைக் கொடுங்க. ஸ்டிரிக்ட்லி நோ ஆல்கஹால்.''

''வேற ஒண்ணுமில்லையே டாக்டர்?''

''நத்திங்'' என்றவர் சிரித்தார்.

மறுநாள் காலை பத்து மணிக்கு ஆர். எம். ஸ்டூடியோவின் எட்டாவது ஃப்ளோர் கறுகறுப்பாகக் காத்திருந்தது. மின்சார டெக்னீஷியன்கள் பாம்புச் சுருள் ஒயர்களுடன் மேலே சவுக்குச் சட்டங்களில் விளக்குகளை அமைத்துக் கொண்டிருந்தார்கள். தாடிக்கார காமிராக்காரர் மீட்டர் பார்த்துக் கொண்டிருந்தார். சோஃபா ஸெட்டுக்கள் தூசி தட்டப்பட்டு, டிராலி தள்ளிப் பார்க்கப்பட்டு, புரொடக்ஷன் மானேஜர் தேனியாகச் சுற்றி ஒவ்வொன்றாய்ப் பார்வையிட, சரியாகப் பத்து பத்துக்கு ஹீரோயின் சுதா வந்து விட்டாள். மேக்கப் செய்து கொண்டாள்.

எல்லாம்... எல்லாம்... தயார்.

''சூர்யா ஏன் வரலை இன்னும்?''

''டேய், செல்வா! ஃபோன் பண்ணிக் கேளுடா!''

அவன் கேட்பதற்கு முன் செய்தி வந்தது.

''சூர்யாவிற்கு உடம்பு சரியில்லை. இன்று ஷூட்டிங்கிற்கு வர மாட்டார்.''

''என்னய்யா ஆச்சு?''

''ஜுரமாம்.''

சூர்யாவைப் பார்க்க யாரையும் அனுமதிக்கவில்லை. விசாரித்தவர்களுக்கெல்லாம் பி.ஏ. சுந்தரத்திடமிருந்து வந்த யூனிஃபார்ம் பதில்.

''ஜுரம். வேற ஒண்ணுமில்லை. போங்க!''

சூர்யாவின் எதிரே இரண்டு டாக்டர்கள் இருந்தார்கள். கொஞ்சம் வயதானவர்கள். அவர்களின் முன் வழுக்கையிலும் கண்களின் கூர்மையிலும் அறிவு தெரிந்தது. சிவப்பாக இருந்தார்கள். ஒருவரின் பெயர் டாக்டர் விஜயன். மற்றொருவர் டாக்டர் அமானுல்லா.

படுக்கையில் சூர்யா கிழித்துப் போட்டது போல் படுத்திருந்தான். ஹெவி ஸெடேஷன் கொடுத்திருந்ததால் செயற்கை மயக்கத்தில் கிடந்தான்.

டாக்டர் விஜயனும் டாக்டர் அமானுல்லாவும் அமர்ந்து கொண்டார்கள்.

அமானுல்லா தம் தொண்டையைக் கனைத்து, ''வாட் டு யு திங்க் டாக்டர்?'' என்றார்.

''அன்டூலண்ட் ஃபீவர்.''

''மஸ்ட் பி டெங்கு.''

''அது ப்ளட் டெஸ்ட்ல தெரிஞ்சிடும்.''

''ஏற்கெனவே அமர்நாத் பாத்தாச்சு. ஸிம்ப்டம்ஸ் எல்லாம் ஆர்போ மாதிரிதான் இருக்கு.''

''ஐ ஸீ. நத்திங் டு வொர்ரி.''

திலகா அவர்கள் எதிரே வந்து கவலையாக அமர்ந்து கொண்டாள். அவள் கண்களில் சோர்வும், பயமும் தெரிந்தன.

''டாக்டர்! ஒண்ணும் பயமில்லையே?''

டாக்டர் அமானுல்லா சிரித்தார். ''என்னம்மா நீங்க? படிச்சவங்க நீங்க. இப்படி பயப்படறீங்களே? சாதாரண காய்ச்சல் இது.''

''இல்லை டாக்டர். நேத்து ராத்திரி அவரு துடிச்சதை நீங்க பாத்திருக்கணும். தலை ஓரத்தைப் பிடிச்சுக்கிட்டு உடம்பெல்லாம் வேர்வை. எதுவும் சாப்பிடலை. கம்பல் பண்ணிப் பால் குடுத்தேன். உடனே வாந்தி. உடம்பு அனலாக் கொதிக்குது.''

''அப்படித்தாம்மா இருக்கும். அக்யூட் டிப்ரஷன்னு சொல்வோம். தூக்கம் வராது. தலைவலி இருக்கும். மருந்து கொடுத்தாச்சு... இனிமேல் பயப்பட வேண்டாம். ரெண்டு நாள் ரெஸ்ட்ல சரியாயிடும்...''



- தே. ராஜாசிங் ஜெயக்குமார்

அவர்கள் எழுந்தார்கள். இலகா நன்றி சொல்லி விடை கொடுத்தாள்.

காரில் செல்லும் போது டாக்டர் விஜயன் அமானுல்லாவைப் பார்த்து, ''டாக்டர்! சூர்யா உடம்புலே 'ராஷ்' எதுவும் இல்லையே?'' என்றார்.

''ராஷ் இருக்கணும்னு அவசியமில்லை.''

''சாதாரண ஜுரத்துக்கு ரொம்ப கலாட்டா பண்றாங்க.''

''ஹி இஸ் எ கிரேட் ஆக்டர்'' என்றார்.

அன்று மாலை சூர்யாவின் ப்ளட் ரிசல்ட் வந்தது. அமானுல்லா புருவத்தை நெரித்தார். ''டெங்கு ஜுரத்திற்கு நெகடிவ்''. அப்படியென்றால் அது வேறு என்ன?

டெலிஃபோன் மணி அடித்தது. இலகாவின் குரல் அச்சமாக ஒலித்தது. ''டாக்டர்! ப்ளீஸ்! உடனே வாங்க!''

''என்னம்மா, என்ன ஆச்சு?''

''பயமாயிருக்கு டாக்டர்! வலியால துடிக்கிறாரு. மூச்சு முட்டுது. கத்தறாரு. உடம்பு தூக்கிப் போடுது. பயமாயிருக்கு டாக்டர்! எதையும் சாப்பிட மாட்டேங்கிறாரு.''

''வர்றேன், உடனே, வர்றேன்.''

சூர்யாவைப் பார்ப்பதற்கே அவருக்கு அச்சமாக இருந்தது. படுக்கையில் ஒழுங்கின்றிப் படுத்துக் கால்களை உதறிக் கொண்டிருந்தான். முகம் பயத்தால் வெளிறிப் போயிருந்தது. உடம்பு தூக்கித் தூக்கிப் போட, இரண்டு வேலைக்காரர்கள் பயந்தபடியே அவன் கைகளைப் பிடித்து அடக்கிக் கொண்டிருந்தார்கள். அவன் ''விடு! விடு'' என்று கத்திக் கொண்டிருந்தான். தொண்டை துருப்பிடித்தது போல் கமற, வாயோரம் எச்சில் வழிந்தது.

''மைகாட்! சூர்யா!'' என்று அருகில் சென்றார்.

சூர்யா திரும்பி, ''டாக்டர்! வா! என் வாச்சு எவக்குன்னு பாரு!'' என்றான் குழறலாக.

அவன் வார்த்தைகளுக்கிடையே புஸ் புஸ்ஸென்று மூச்சு விட்டான். கண்கள் சிவப்பாக, தொண்டை வறண்டவன் போல்... சூர்யாவா இது?

''சூர்யா! கொஞ்சம் தண்ணி குடிங்க!''

''நோ!'' என்று கத்தினான்.

அப்போது டாக்டர் விஜயனும் உள்ளே நுழைந்து சூர்யாவின் அலங்கோலத்தைப் பார்த்துத் திடுக்கிட்டார்.

அமானுல்லா அருகே சென்று தோளைத் தொட்டு, ''சூர்யா! காம் யுவர் செல்ஃப். சொல்லுங்க! என்ன பண்ணுது உடம்புக்கு?''

சூர்யா வெறிறிய கண்களால் அவரை வெறித்து, ''டாக்டர்! உடம்பை நெருப்புல போட்டா மாதிரி இருக்கு... வலி!... கையெல்லாம் வலி. தொண்டை எரியுது.''

''ப்ளீஸ், ஹாவ் ஸம் வாட்டர்'' என்றார் மறுபடி.

''வேண்டாம்! வேண்டாம்! எதுவும் வேண்டாம்! ஐயோ! எதுவும் கொடுக்காதீங்க!''

அமானுல்லா விஜயனைப் பார்த்து, ''ஹி இஸ் நெகடிவ் ஃபார் டெங்கு'' என்றார்.


''தென், வாட் இஸ் இட்?''

''ஓக்.''

சூர்யாவின் உடம்பு விலுக்கென்று தூக்கிப் போட்டது. மல்லாந்து படுத்து, முகத்தைப் பலவீனமாகச் சாய்த்து, ''ஐயோ!... அம்மா!...'' என்றான்.

இலகா அருகே நின்று விசித்துக் கொண்டிருக்க, சூர்யா கோபமாகத் திரும்பி, ''ஏய்! அழாதே!'' என்றான். அருகிலிருந்த தலையணையை எடுத்து வெறியுடன் அவள் மேல் எறிந்தான்.

''ஐயோ! என்னாச்சு இவருக்கு?''



''போடி! போங்க எல்லாரும்?''

அமானுல்லா அவனுடைய கண்கள் சில வினாடிகள் கோணலாக நிலைத்து விலகியதைக் கவனித்தார். பிறகு விஜயனிடம் திரும்பி, ''இஸ் மஸ்ட் பி ஸீரியஸ். க்ளோர்ப்ரோமெஸின் இஸ் நெசசரி'' என்றார். அவன் அருகில் சென்றார்.

''சூர்யா! ஒரு நிமிஷம்!''

''வேண்டாம்! வராதே!''

''விஜயன், கம். சூர்யா! ஜஸ்ட், ஒன் செகண்ட், ஸிம்பிள். உங்களுக்கு ஒண்ணுமில்லை. இதோ, இந்த ஊசியில எல்லாம் சரியாயிடும் பாருங்க.'' அவனை லாவகமாக அணைத்து, ஆன்ட்டிஸ்பாஸ்மாடிக் ஊசியைப் போட்டார். பிறகு ஒரு ஸெடேஷன். சூர்யா சோர்வாகப் படுத்துக் கொண்டான்.

இலகா டாக்டர் அமானுல்லாவின் முகத்தைப் பார்த்தாள். அதில் மெல்லிய அதிர்ச்சியைக் கவனித்தாள்.

(தொடரும்)

உற்பத்தி மேலாளர் உள்ளே வந்து தலையைச் சொறிந்து கொண்டு நின்றார்.

''என்னய்யா? ஏதாவது பிராப்ளமா?'' கேட்டேன்.

''ஒண்ணுமில்லே சார்; இப்போ கடைசியா போட்ட 'லாட்' முந்நூறு 'பீஸ்'ஸையும் 'குவாலிட்டி கண்ட்ரோல்' ஆளு ரிஜக்ட் பண்ணிடுவேன்னு சொல்றான் சார்...''

''ஏன்யா இப்படி எழவெடுக்கிறீங்க? உற்பத்தியிலே என்ன கோளாறு பண்ணித் தொலைச்சீங்க?''

''ஹீட் டிரீட்மெண்ட்டிலே 'ஹார்டுனெஸ்' கம்மியாயிடுச்சு சார். கவனிக்காம மீதி எல்லா ஆப்பரேஷனும் பண்ணி 'ஃபினிஷ்' பண்ணிட்டோம்; கடைசி கட்ட இன்ஸ்பெக்ஷன் போது கண்டுபிடிச்சிட்டான்...''

''முன்னே மாதிரி குவாலிட்டி கண்ட்ரோல் ஆசாமியை தாஜா பண்ணி பாஸ் பண்ண இப்போ முடியாதேய்யா? புதுசா வந்திருக்கிற தரக் கட்டுப்பாட்டு மானேஜர் சிவதாண்டவம் ஆடுவானேய்யா? பார்த்து ஒழுங்கா உற்பத்தி பண்ணித் தொலைக்கக் கூடாதா?''

''இது ஒண்ணும் பெரிய மிஸ்டேக் ஆயிடாது சார்; 'அசெம்பிளி'யிலே பிராப்ளமே வராது சார்; நீங்க மட்டும் கொஞ்சம்



குவாலிடி கன்ட்ரோல்


ராமசேஷன்கிட்டே பேசி கன்ஸெஷன் ரிப்போர்ட்டிலே கையெழுத்து வாங்கிக் கொடுத்திடுங்க சார்...''

''குட்மார்னிங் சார்! எப்படி இருக்கீங்க? வீடெல்லாம் வசதியா இருக்கா? குடும்பத்தைக் கூட்டி வந்துட்டீங்களா?'' - தரக்கட்டுப்பாட்டு மானேஜர் ராமசேஷவின் குளுகுளு அறையில் அவருக்குச் சோப்புப் போடும் விதத்தில் பேச்சுக் கொடுத்தேன்.

ராமசேஷன் என் கையில் இருந்த சிவப்புக் கலர் படிவத்தைக் கவனித்து விட்டார். முகம் கடுவன் பூனையானது. ''உம்.. உம்'' என்று என் விசாரிப்புகளுக்கு அலட்சியமாய்த் தலையை ஆட்டினார். பிறகு, ''என்ன விஷயம், சொல்லுங்க?'' என்றார் அதட்டலாக.

தட்டுத் தடுமாறி பிரச்னையை விளக்கிவிட்டு, 'குவாலிடி கன்ஸெஷன்' படிவத்தைப் பவ்யமாக அவர் முன் நீட்டினேன்.

''ஏன் மிஸ்டர் சாமிநாதன், தெரியாமத்தான் கேட்கிறேன்; மாசம் ஏழாயிரம் ரூபா சம்பளம் கொடுத்து என்னைக் கூட்டிக் கொண்டு வந்து இங்கே எதுக்கு உட்கார வெச்சிருக்காங்க? நீங்க என்ன மாதிரி குப்பையை உற்பத்தி செய்தாலும், 'ஓக்கே ஓக்கே'ன்னு சொல்லி பாஸ் பண்றதுக்காகவா? இப்படிப்பட்ட சாமான்களை உற்பத்தி பண்ணி வித்தால் வாங்கி உபயோகிக்கிறவன் திண்டாட மாட்டான்? நம்மளைத் திட்ட மாட்டான்? நாளைக்குத் திரும்ப நம்ம சாமானை எப்படி நம்பி வாங்குவான்? சேச்சே, ஐ காண்ட் கிவ் எனி கன்ஸெஷன் ஆன் குவாலிட்டி...''



நான் கெஞ்சினேன். இந்தச் சிறிய தவறால் ஒன்றும் குடிமுழுகி விடாது என்று 'டெக்னிக்கல்' ஆக வாதாடினேன். மனிதர் பிடிவாதமாய் இருந்தார்.

''ஸார், இந்த அல்பக் காரணத்துக்காக 'ரிஜெக்ட்' பண்ணாதீங்க. நம்ம சொந்தக் குழந்தைங்களை ஒவ்வொரு ஸ்டேஜா வளர்த்து ஆளாக்கிற மாதிரி, கடைசி ஸ்டேஜ் வரைக்கும் வந்திருக்கோம்; இப்பப் போய்த் தள்ளிடாதீங்க...'' என்று உணர்ச்சி கரமாகப் பேசினேன்; கண்களில் கண்ணீர் வராததுதான் குறை!

''அப்படி வாங்க; உங்க பையனிடம் தரக்குறைவான விஷயம் இருந்துதுன்னா 'நம்ம பையன்தானே, போனாப் போவுது'ன்னு விட்டுடுவீங்களா? ஸ்கூலிலே படிக்கிற பையன் எல்லா சப்ஜெக்டிலேயும் நல்ல மார்க்கு, ஆனா கணக்குப் பாடத்திலே மட்டும் கோட்டை விட்டுட்டான்னா, 'பரவாயில்லே, பாஸ் போட்டுடுங்க'ன்னு வாத்தியார்கிட்டே போய்ச் சொல்ல முடியுமா? சொல்லுங்க சுவாமிநாதன்...''

மனிதர் ஏறிக் கொண்டே போனார். அடுத்த அரை மணி நேரம், அவர் பழம்புராணம், முன்பு வேலை பார்த்த கம்பெனியில் உற்பத்திப் பொறியியலாளர்களின் கண்களில் விரலை விட்டு ஆட்டிய சாதனைகள், 'தரமே தாரக மந்திரம்' என்று பத்திரிகைகளில் கட்டுரை எழுதியது, இன்ன பிற கதைகளையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டேன். ஆயினும் அவர் கையெழுத்துப் போடவில்லை!

இப்போதெல்லாம் முன்பை விட ஜாக்கிரதையாகத்தான் உற்பத்தி நடக்கிறது. இருந்தாலும் எப்போதாவது ஓரிரு தரம் சிறு சிறு தவறு நடப்பதும் ராமசேஷனிடம் போய்ப் பல்லிளிப்பதும் சில சமயங்களில் வெறுமனே திரும்பி வருவதும் இருக்கத்

''சாந்தீபிகா''

நான் செய்தன. அவ்வப்போது போய்ப் பேச்சுக் கேட்பதால் மனிதர் முன்பை விடக் கொஞ்சம் நட்பாக மாறியிருந்தார்.

அன்று ராமசேஷன் என்னைத் தேடி என் அறைக்கு வந்திருந்தார்.

''என்ன சார் இது, உலக அதிசயம்! நீங்களெல்லாம் இந்த அற்பனைத் தேடி வரலாமா? கூப்பிட்டிருந்தா நானே வந்திருப்பேனே!'' என்றேன்.

''அஃபீஷியலா இருந்தா வர மாட்டேன்தான். இது பர்ஸனல் ஆர்சே! என் பொண்ணு கடைக்குட்டிக்குப் பத்து வயது ஆகிறது. ரெண்டு வருஷமா பரதநாட்டியம் கத்துக்கிறா. அரங்கேற்றம் பண்ணிடலாம்னு டான்ஸ் மாஸ்டர் சொல்றார்; என் மனைவியும் ரொம்ப ஆசைப்படறா. 'ராம சங்கீத சபா'வின் செகரட்ரி ஒங்க நெருங்கின சொந்தம்னு கேள்விப்பட்டேன்; நீங்க கொஞ்சம் சொல்லி ஏற்பாடு பண்ண முடியுமா? ராம சங்கீத சபாவிலே அரங்கேற்றம் பண்ணாலே அது ஒரு தகுதி மாதிரின்னு என் வொய்ஃப் சொல்றா....''

''கவலையை விடுங்க,'' என்றேன்.

''தேங்க் யூ, தேங்க் யூ! ஆனா ஒரு விஷயம் சாமினாதன். இது பியூர்லி பர்ஸனல். இந்த உதவியையும் அஃபீஷியல் ரிலேஷன்ஷிப்பையும் மிக்ஸ் பண்ண முடியாதுங்கிறதை ஞாபகம் வெச்சுக்குங்க...'' என்றார் மிடுக்காக.

'இந்த அல்பச் சவாடால்தானே வேணாங்கிறது' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாலும், ''சேச்சே, உங்களைப் பத்தி எனக்குத் தெரியாதா சார்; நீங்க 'ஒரி' பண்ணிக்காதீங்க, நான் ஏற்பாடு பண்றேன்,'' என்று கை குலுக்கினேன்.

உற்பத்தி மேலாளர் உள்ளே வந்து தலையைச் சொரிந்து கொண்டு நின்றார்.

''என்னய்யா? ஏதாவது பிராப்ளமா?'' என்று கேட்டேன்.

''ஒண்ணுமில்லே சார், இப்போ கடைசியாப் போட்ட நாலுநு 'பீஸ்'லே ஃபினிஷ் சரியில்லேன்னு குவாலிட்டி கண்ட்ரோல் இன்ஸ்பெக்டர் ரிஜெக்ட் பண்ணுவேன்னு சொல்றான் சார்...''

''கவலைப்படாதீங்க; கன்ஸெஷன் ஃபாரத்தை எடுத்துக்கிட்டுப் போய் ராமசேஷன்கிட்டே நீட்டி, நான் சொன்னேன்னு சொல்லு; கையெழுத்துப் போடுவார்...'' என்றேன் மிதப்பாக.

நம்ப முடியாமல் போய்த் திரும்பியவருக்கு வாயெல்லாம் பல்!

''என்ன மாயம் சார் பண்ணீங்க?'' என்று ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தார்.

எனக்குத் தெரியும். குவாலிட்டி பிரச்னை ராமசேஷன் மகளின் நடன அரங்கேற்றத்துக்கு இல்லாத போது, இங்கேயும் இருக்க முடியாது என்று.

சார்மினார் சானல் :

இந்த முறை ஆந்திர சட்டசபைக் கூட்டம் ஆரம்பிக்கு முன்பே கட்சிகளின் உரசல் ஏற்பட்டு விட்டது. அசெம்பிளி கட்டடத்திற்குச் சுண்ணம் அடிக்கும் காண்ட்ராக்டர், சுற்றியுள்ள மரங்களிலும் தம் கைவண்ணம் காண்பித்தார். மூவர்ணங்களைத் தருக்களில் ஏற்றினார். தெலுங்கு தேசக் கட்சிக்காரர்களுக்குக் கோபம் வந்து விட்டது. காண்ட்ராக்டர் செயலுக்கு 'அரசியல் வர்ணம்' பூசிக் கண்டித்தனர். அழிக்காவிடில் தெலுங்கு தேசக் கட்சியின் 'மஞ்சள்' பூசுவதாகச் சவால் விட்டனர். சபாநாயகர் வெள்ளை அடிப்பதாக உறுதி தந்து, விவகாரத்திற்கு 'வெள்ளை'க் கொடி காட்டினார்.

இப்படி வர்ணச் சண்டை முடிந்தாலும் சட்டசபை தொடங்கியதும் சாராயச் சண்டை ஆரம்பமானது!

திருகி விடப்பட்ட ஆட்டுக்கடா மீசையுடன் காணப்படுபவர் கலால் அமைச்சர் பாபி ராஜு. அவர் ஒட்டுமொத்தமாக 24 சாராயத் தொழிற்சாலைகளுக்கு ஒரே மூச்சில் ஜனவரியில் அனுமதிக் கையெழுத்திட்டார். (இந்தியா முழுவதுமே 145 சாராயத் தொழிற்சாலைகள்தாம் உள்ளன. அவற்றுக்கு வேண்டிய கரும்பாலைக் கழிவுப் பொருளுக்கு (MOLASSES) ஏற்கெனவே பற்றாக்குறை.)

தெலுங்கு தேசக் கட்சி, சட்டசபையில் கோதாவில் இறங்கியது. 48 கோடி ஊழல் (Kick-back) எனச் சாடியது. 'நான் நிரபராதி. மதுவிலக்கு வர நேர்ந்தால் நிதி நஷ்டஈடு செய்யத்தான் இந்த முன்யோசனை' என்று ராஜு தனது 'தீர்க்க தரிசனத்தை' வெளியிட்டார்.

லைசென்ஸ் பெற்றவர் ஜாபிதாவில் முதன் மந்திரி புதல்வர் பிரகாஷ் ரெட்டி, மற்றும் இரு அமைச்சர்களின் உறவினர் உள்ளனர். (1990-ல் மத்திய அரசு அனுமதி அளித்த ஆறு தொழிற்சாலைகளில் வாணி ஷுகர்ஸ் ஒன்று; அதன் டைரக்டர் பிவி பிரபாகர் ராவ் - பிரதமர் புதல்வர்.)

இந்தக் கோப்பு முதன் மந்திரியிடம் போகவே இல்லை.

'எனக்குச் சட்டசபை விவாதம் மூலம் தான் விஷயமே தெரியும்' என்று விஜய பாஸ்கர ரெட்டி - அதாவது முதல் மந்திரி - தனது 'அறியாமை'யை வெளியிட்டார். பிறகு, 'லைசென்ஸ் ஆர்டரை ஒத்தி வைக்கிறேன்' என்று சட்டசபைக்கு வெளியே அறிவித்தார். 'அதெப்படி சட்டசபையில் அறிவிக்காமல் வெளியே அறிக்கை?' என உரிமைப் பிரச்னை எழுப்பினார், ராமராவ்.

விவாதத்தின் போது, ராஜு தமது மறுதளிப்பில் என்.டி.ஆர்., அவரது மாப்பிள்ளை சந்திரபாபு ஆகியோர் மீது வீசிய 'வசவு இலக்கியம்' நாகரிக எல்லையைக் கடந்தது. சபாநாயகர் அவற்றை நீக்கம் செய்தார். ஆயினும் சபையில் சூறாவளி.



✱ கண்டசாலா

சட்டமன்ற நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தனர் என்று தெலுங்கு தேச அங்கத்தினர்கள் 54 பேரை ஒரு வாரம் சட்டசபை நீக்கம் செய்தார், சபாநாயகர். இதற்கிடையில் அமைச்சர் பாபிராஜு ராஜிநாமாவும் செய்து விட்டார். இப்போது 'முதல்வருக்கு விஷயம் தெரியாமல் இருக்குமா? பாபி

குற்றச்சாட்டு: "48 கோடி ஊழல்!"

ராஜு பலிகடாவா? பணம் கைமாறாமல் இருந்திருக்குமா?' என்று பல கேள்விகள் கேட்கப்படுகின்றன. இதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆஞ்சநேயலு விசாரணைக் கமிஷன் தான் முடிவு சொல்ல வேண்டும்.



✱ பாபி ராஜு

மறைந்த அமுத இசைக் கலைஞர் கண்டசாலாவுக்கு ஹைதராபாத்தில் ஒரு விழா எடுத்தார் பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமண்யம். கண்டசாலா சிலைத் திறப்பு விழாவிற்கு இசைக் குயில் லதா மங்கேஷ்கரும் வந்திருந்தார்.

பாடகர் பாலு சும்மா இருக்கக் கூடாதோ? ஆந்திர முதல்வருடன், முன்னாள் முதல்வர் சிம்மக் குரலோன் ராமராவையும் அழைத்து கூட்டத்தை ராக மாலிகை ஆக்கினார். 'இதி சமயமுரா' என்று என்.டி.ஆர். ஆந்திர அரசின் மதுக் கொள்கை பற்றி நிரவல் செய்தார். கூட்டம் பொறுமை இழந்தது. 'ராஜீவ் ஜிந்தாபாத்!' என்று தொண்டர்கள் கோரஸ் பாடினர்.

'நான் சொல்லித்தான் கண்டசாலா மதுவிலக்குப் பாடல்கள் பாடினார்' என்று முத்தாய்ப்பு வைத்தார் ராமராவ். கடைசியில் எஸ்.பி. பாலசுப்ரமண்யம் விஜய பாஸ்கர ரெட்டியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதாயிற்று.

- சுபஸ்ரீ

21

பாப்கார்ன் கனவுகள்

ம.வே.சிவகுமார்

பாறைகளில் ஈரம் கசிந்த மலைப் பாதை. அசந்தால் திருப்பங்களில் மோட்சம் தெரிகிறது. நெடிய மரங்கள் தெருவில் இறங்கக் காத்திருக்கின்றன. ஷூட்டிங் வேன் ஹாரன் அடித்துக் கொண்டு விரைகிறது. இடைக்கிறதைப் பற்றிக் கொண்டு, கொடிகள் படர்ந்த காடு. மடியில் குட்டி வைத்து, குரங்கு தாவிப் போகிறது. கீழே பள்ளத்தாக்கில் பறவை வட்டமடிக்கிறது. படிகளில் காவியும் வெள்ளையும் பூசிய மலைக் கோவில். மூச்சுக் காற்றின் பசுமையில் கற்பூரம் கலக்கிறது. பாதை மேலும் வளைந்து, காட்சிகள் மாறி, கானகத்தினிடையே மலைகள் சூழ்ந்த பரந்த நீர்ப்பரப்பையொட்டி வேன் நிற்கிறது. தோள் பட்டையில் கண்ணாடி சரிசெய்து லக்ஷ்மி நாராயணன் இறங்குகிறான்.

தளப் தளப் என்று கரையோரம் நீரலைகள் மோதிச் சப்தமிடும் பின்னணியில், அன்னம் போல் அலங்கரிக்கப்பட்ட படகு காற்றில் மெல்லத் திரும்புகிறது. உதிரி நடிகர்கள் எவர்சில்வர் கேடயங்களில் டிபன் வாங்கி, உட்கார இடம் தேடிக் கொண்டிருக்கிறார்கள். காரிலிருந்து கதாநாயகி இறங்கக் கதாநாயகன் கைகொடுக்கிறான். மறைவில் சட்டை கழற்றி, அவன் கையில் பிளாஸ்டிக் பூ சுற்றுகிறார்கள். கச்சையில் கொச்சையாக அதே போல் பூ சுற்றிக் கதாநாயகி வருகிறாள். பக்கத்தில் பாய்மரக் கப்பல் தயாராகிறது. மண்டையோடும் எலும்புகளும் வரைந்த கொள்ளையர் கப்பல்.

தொலைநோக்கியில் மேல்தளத்தில் நின்று, தூரத்தில் கதாநாயகன், நாயகி இடையை வளைப்பதை முதலில் பார்த்துத் தலைவனிடம் சொல்ல வேண்டும். எப்படியாவது வில்லன் குருப்பில் ஒருவனாக இந்த முறை கமிட் செய்து விட்டால் பிற்பாடு படம் நெடுக அவன் வருகிற மாதிரியிருக்கும். அசோசியேட் டைரக்டர் சொற்படி ஒற்றைக் கண்ணில் பட்டை கட்டி லக்ஷ்மிநாராயணனுக்குக் கொள்ளைக்காரன் மேக்கப் போடப்படுகிறது. ஒவ்வொருவராய் நாற்காலியில் உதிரி நடிகர்கள் கொள்ளைக்காரர்கள் ஆகிறார்கள்.

மதியம் சாப்பாட்டு நேரம் வரை பாய்மரக் கப்பல் முழுவதுமாய்த் தயாராகவில்லை. அன்னப் படகில் கதாநாயகனும், நாயகியும் சம்பந்தப்பட்ட க்ளோசப் காட்சிகள் படமாகிக் கொண்டிருக்கின்றன. இடுப்பில் வாள் வைத்த கொள்ளையர் உடையில் எங்கும் உட்காருவது கஷ்டமாயிருக்கிறது. வாளை மடியில் வைத்து மரத்தடியில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்து கொள்கிறான். காற்று நீர்ப்பரப்பில் குளிர்ந்து சிலுசிலுக்கிறது. தன்னையறியாமல் லக்ஷ்மி நாராயணன் தூங்கியிருக்க வேண்டும்.

மலைகளின் பின்னே சூரியன் மறைகிற மாலை வேளையில் அவன் விழித்த போது, அந்த அடர்ந்த கானகத்தினுள்ளே அவனைத் தவிர யாருமில்லை. யூனிட் மொத்தமும் வேலை முடிந்து பேக்கப் சொல்லி, வேன்களும் கார்களும் நின்ற இடத்தில் தடங்களே மிஞ்சுகின்றன. மாலை டிபன் முடிந்து காகிதத் தட்டுகள் சூழலில் இறைந்திருக்கின்றன. காப்பி தம்ளரை பிடித்துக் கொண்டு மேலே நடக்கிறான். தொலைவில் எங்கேயோ லாரி போகிறது. யாருக்காவது கேட்கட்டும் என்று லக்ஷ்மிநாராயணன் உரக்கக் கத்துகிறான். குரல், மலைகளில் பட்டு எதிரொலிக்கிறது. அன்னப் படகு காற்றில் மௌனமாய் அசைகிறது.

சீக்கிரமே இருட்டி விடுகிறது. ஒரு திரைப்படமாய் உலகம் மறைந்து விட்டது. பார்ப்பதற்கு இருட்டைத் தவிர வேறு எதுவும் எதிரே இல்லை. அவ்வப்போது உயரே கிளைகளில் பறவைகள் சடசடக்கிற சப்தம். கொள்ளையர் உடையில் லக்ஷ்மி நாராயணன் கையில் வாள் வைத்துக் காட்டின் நடுவே தனியனாய்ப் பயந்து நிற்கிறான். புதர்களில் சலசலத்து நரிகள் ஊளையிடுகின்றன. இருளில் இருள் நகர்ந்து யானைக் கூட்டம் நீர்ப்பரப்பில் தண்ணீர் குடிக்கிறது. காலடியில் மலைப் பாம்பு ஊர்வது தெரியாமல் லக்ஷ்மிநாராயணன் நிற்கிறான். காட்டுவாசிகள் அவனைத் தூக்கிப் போய் கீழே நெருப்பு மூட்டிய தவலையில் வைக்கிறார்கள். 'தும்பா தும்பா' என்று மேள ஒலியில் அவனைச் சுற்றி ஆடுகிறார்கள்.

அவன் தூங்கிக் கொண்டிருக்கிறான்.

சிறிய கம்பளி மூட்டை போல் ஒரு கரடி அவனை மோந்து பார்க்கிறது. தூக்கத்தில் கடவுள் பூ காட்டியதில் லக்ஷ்மிநாராயணன் சிரிக்கிறான். நகங்கள் நீண்ட முன்னங் காலைக் கரடி அவன் மார்பில் அழுத்துகிறது. அவன் இருட்டில் முட்களைப் பற்றிய கவலைகள் முடியாமல் ஓடிக் கொண்டிருக்கிறான். மரத்தின் அந்தப் பக்கம் நின்று கரடி அவன் கையைப் பற்றிக் கொள்கிறது. லக்ஷ்மிநாராயணனும் கரடியும் மரத்தைச் சுற்றுகிறார்கள். ஒவ்வொரு சுற்று முடியும் போதும் மரத்தடியில் நிலவொளியில் தகதகத்து ஒரு நாணயம் விழுகிறது.

எத்தனை சோர்வுற்றபோதிலும் கரடியின் கைகளை விட்டு விடுவதற்கில்லை. கீழே சிதறியிருக்கும் காசையும் எடுப்பதற்கில்லை. மணிக்கணக்கில் சுற்றியதில் மரத்தைச் சுற்றி ஒரு பள்ளமே உருவாகி விடுகிறது. கரடியும், லக்ஷ்மிநாராயணனும் சோர்ந்து விழுகிறார்கள். கனவில் உடல் வியர்த்து லக்ஷ்மிநாராயணன் திடுக்கிட்டு விழிக்கிறான். வில்லிவாக்கம் வீடு. தூளியில் இரண்டாம் குழந்தைக்கு விஜயலக்ஷ்மி பால் கரைத்து, அறைக்குள் நுழைகிறாள்.


ஆளுயரக் கண்ணாடி முன் அலங்காரங்கள் முடிந்து லக்ஷ்மிநாராயணன் அலுவலகத்துக்குப் புறப்பட்டுப் போகிறான். பிரசவம் நடந்து பச்சை உடம்பில் விஜயலக்ஷ்மி இன்னமும் வேலையில் சேரவில்லை. எதேச்சையாய் மாமனாரும் வந்திருக்கிறார். தபாலில் லக்ஷ்மி நாராயணன் பெயருக்கு ஒரு கார்டு வருகிறது. குறிப்பிட்ட தேதிக்குள் வட்டியுடன் தொகை பதினைந்தாயிரம் செலுத்தாவிடில் மறு நோட்டீஸ் இல்லாமல் அவன் அடகு வைத்த நகைகள் அவனுடைய சொந்த இலாப நஷ்டத்தில் ஏலம் மூலமாய் விற்று விடப்படும். விற்ற தொகை மேற்பட்டால் மீதித் தொகை கடன் வாங்கிய நபருக்குக் கொடுத்து விடப்படும். குறைவு பட்டால் வட்டியுடன் வசூல் செய்யப்படும். ஏலம் ஏற்பாடு இதர செலவுகள் கடன் வாங்கிய நபரைச் சார்ந்தது. இது விஷயத்தில் இதுவே கடைசி நோட்டீஸ் என்று அறியவும். தெருக் கதவில் மாமனார் கார்டை ஒருதரம் திருப்பிப் பார்க்கிறார். அதில் அப்போதும் லக்ஷ்மிநாராயணன் பெயர்தான் இருக்கிறது.

''விஜயலக்ஷ்மி...''

தூளியில் குழந்தையைக் கொஞ்சி விட்டு விஜயலக்ஷ்மி சிரித்துக் கொண்டே திரும்புகிறாள்.

''என்னப்பா?''

தபால்கார்டு கை மாறுகிறது. சிரித்த முகம் சிந்தனை வயப்பட்டு எதுவும் பேசாமல் அலமாரிக்குப் போகிறது. கொதிப்பில் மாமனார் பின்தொடர்கிறார். ''இப்படி எல்லாவற்றுக்கும் மௌனமாய் இருந்தால் என்ன அர்த்தம்? இதற்கெல்லாம் முடிவுதான் என்ன? யாருக்கு அடுக்கும் இந்த அராஜகம்? அகலக்கால் இன்னும் எத்தனை நாள்? நாம் ராஜ்கபூரின் பிள்ளையா?



டாட்டா, பிர்லாவின் பேரனா? ஆசைக்கு ஒரு அளவு வேண்டாமா? இந்த ஜீவினா வாழ்க்கை ஒரு நடுவாந்திரக் குடும்பத் துக்குத் தாங்குமா? இது உன் நகை இல் லையா? இதை சேட்டு கடையில் அவன் வைத்ததாவது உனக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

தெளிந்த குரலில் விஜயலக்ஷ்மி தொடர் கிறாள். அவர் கேட்ட போது பாவமாய் இருந்தது. நகைகளை அவள்தான் கொடுத் தாள். வட்டியெல்லாம் ஒழுங்காய்க் கட்டிக் கொண்டிருப்பதாய்த்தான் சொன்னார். விவரம் அவர் வந்த பிறகுதான் கேட்க வேண்டும். இது அவர்கள் விஷயம். கண வனிடம் மேற்கொண்டு அவள் பேசிக் கொள்வாள். தயவு செய்து அவர் இதில் தலையிட வேண்டாம்.

''அது எப்படி முடியும்?''

வேகமாய் மாமனார் முன்னால் வரு கிறார். அடகு வைக்கப்பட்டிருப்பது அவரு டைய உழைப்பில்லையா? அவர் ஆசையில் திட்டமிட்ட அவர் மகளின் எதிர்காலமில் லையா? கேட்பதற்கு உரிமை இல்லையா? கசாப்புக் கடையில் ஆடு விற்றவன் மாதிரி இருந்து விட முடியுமா? இது மானக்கேடு இல்லையா? கண் முன்னே காண்பதற்குக் கலங்காதா? இது என்ன ஊரார் விஷயமா? யார் எக்கேடு கெட்டால் என்ன என்று இருக்க முடியுமா? வரட்டும். இன்றைக்கு எல்லாவற்றையும் பேசி விட வேண்டியது தான். கோவணம் கட்டியவன் தலையில் கிரீடம் வைத்தாற்போல் அவனும் அவனு டைய டிரஸ்ஸும். வரட்டும். இன்றைக்கு எல்லாவற்றையும் பேசி விடலாம்.

முன்னறையில் கறுவிக் கொண்டு மாம னார் நிற்கிறார்.

''அப்பா.''

விஜயலக்ஷ்மி கையெடுத்துக் கும்பிடுகி றாள். தயவு செய்து அவரை எதுவும் கேட்க வேண்டாம். வெறும் அனாவசிய மனக் கசப்பில்தான் அது முடியும். அவள் தலை யெழுத்துப் போல் ஆகி விட்டுப் போகிறது. அவள் கணவர் நல்லவர்தான். சற்று பெரிய தாய் ஆசைப்பட்டு விட்டார். தெருவோடு போகிற யானைக்கு அழுகிற குழந்தை மாதிரி. மற்றபடி அவர் குடிக்கவில்லை. சீட்டாடவில்லை. ஒவ்வொருத்தர் மாதிரி ரேஸுக்குப் போகவில்லை. ஒரு லட்சி யத்தை நம்பி விட்டார். பிடிவாதமாய்த் தொடர்ந்து முயற்சி செய்கிறார். நாளையே அவர் வெற்றி பெற்று நூறு பவுனில் தொங்கத் தொங்க செய்து போட்டால் அதை அவள்தான் அணிந்து கொள்ளப் போகிறாள். மகிழ்ச்சி என்பது இதில் எல் லாம் இல்லை. வாழ்க்கையில் அவள் எதை யும் எதிர்பார்க்கவில்லை. அவளுடைய கணவர் அன்புடன் இருக்கிறார். அது ஒன்றே அவளுக்குப் போதும். அவர் பொறுப்புள்ளவர். பானையைத் திறந்தால் அரிசியும் கூடையைத் திறந்தால் காய்கறி யும் அந்த வீட்டில் எப்போதும் இருக்கிறது. எனவே, நகை விஷயத்தை அவள் பார்த்துக் கொள்வாள். லக்ஷ்மிநாராயணனிடம் அவ ளுக்கு நம்பிக்கை இருக்கிறது. இது விஷ யம் அவரை எதுவும் நீங்கள் கேட்க வேண் டாம். வார்த்தைகள் முற்றிப் பெரும் சண்டையில்தான் அது முடியும்.

தெருக் கதவு சைக்கிள் மோதித் திறக் கிறது. வரவேற்பறையில் மாமனார் ஒரு நிர் மானத்தோடு உட்கார்ந்திருக்கிறார். லக்ஷ்மி நாராயணன் சிரித்துக் கொண்டே மூத்த வனை இறக்கி விட்டு, கையில் சாக்லேட் கொடுத்து அனுப்புகிறான்.

''வேண்டாம்.''

நாற்காலியில் மாமனார் முகம் திருப் பிக் கொள்கிறார். விஜயலக்ஷ்மி அவரைப் பார்வையில் எச்சரித்து சமையலறைக்கு நகர்கிறாள். கொல்லைப்புறத்தில் சில் லென்ற தண்ணீர் முகத்தில் பட்டதும் உற்சா கத்தில் லக்ஷ்மிநாராயணன் அடித் தொண் டையில் பாடல் பிறக்கிறது.

''சித்திரம் பேசுதடி. எந்தன் சிந்தை மயங்குதடி...''

குளியலறைக் கண்ணாடி முன் மோவாய் அசைகிறது.

''முத்துச் சரங்களைப் போல்...''

சமையலறை அடுப்பின் முன் விஜய லக்ஷ்மி நெளிந்து கொள்கிறாள். லக்ஷ்மி நாராயணன் பாடிக் கொண்டே வரவேற் பறை மாமனார் முன் வருகிறான்.

''என் மனம் நீ அறிவாய். உந்தன் என் ணமும் நானறிவேன். இன்னமும் ஊமை யைப் போல் மௌனம் ஏனடி தேன் மொழியே?''

மாமனாரின் உதடுகளை விரல்களில் செல்லமாய்க் குவித்து விட்டுப் பாடிக் கொண்டே லக்ஷ்மிநாராயணன் வாசலுக்குப் போகிறான். ஒரு விமர்சனம் போல் காது களில் இதுவரை வைத்திருந்த பஞ்சை எடுத்து மாமனார் ஜன்னலுக்கு வெளியே எறிகிறார்.

வேறு வழியில் தகப்பனாரை அனுப்பி விட்டு விஜயலக்ஷ்மி வாசலுக்கு வருகிறாள்.

''தமிழனுக்கு லெட்டர் ஏதாவது உண்டா?''

லக்ஷ்மிநாராயணன் சிரித்துக் கொண்டே கேட்கிறான். வரவேற்பறை அல மாரியிலிருந்து தபால் கார்டு அவன் முன் வார்த்தைகளின்றி வந்து சேர்கிறது. வாசல் இருட்டில் லக்ஷ்மிநாராயணன் நெடுநேரம் அசைவின்றிக் கிடக்கிறான்.

''விஜயலக்ஷ்மி...''

''உம்...''

''நகையைப் பத்தி கவலைப்படாதே. எப்படியாவது சமாளிக்கறேன்.''

''உள்ளுக்குள்ள உட்கார விடாம என்னவோ ஒண்ணு என்னைச் செய்யி செய்யின்னு தூண்டிக்கிட்டேயிருந்தது. அது இதுக்குத்தான் போலிருக்கு.''

இருவில் கண்கள் பளபளக்க விஜயலக்ஷ்மி பார்த்துக் கொண்டிருக்கிறாள். உள்ளறையில் குழந்தை விழித்துத் தூளி நெளிகிறது. விஜயலக்ஷ்மியைக் கையமர்த்தி லக்ஷ்மிநாராயணன் மெல்ல நடந்து தூளியை ஆட்டுகிறான்.

''நான் பிறந்த காரணத்தை நானே அறியுமுன்னே நீயும் வந்து ஏன் பிறந்தாய்ச் செல்வ மகனே?''

லிங்கிச் செட்டித் தெரு ஃபைனான்ஸ் கம்பெனியில் விநாயகம் செட்டியார் உதடு பிதுக்குகிறார். அவனளவு சம்பளம் உள்ள யாருக்கும் அவர் இவ்வளவு கடன் தந்த தில்லை. ஒரு லட்சியம் என்ற பெயரில் கேட்கிறபடியால் வட்டி வீதங்களில் கூட அவ்வப்போது விட்டுக் கொடுத்திருக்கிறார். அவ்வளவுதான் செய்ய முடியும். தொழில் முறையில் அதுவே அவருக்கு அதிகம்.

பல்வேறு நண்பர்களும் கைவிட்டு விடுகிறார்கள். அசோக் நகரில் வரச் சொன்ன தூரத்து உறவினர், வீட்டில் இருந்து கொண்டே இல்லை என்று சொல்லி விடுகிறார். சுரேஷ் பாபுவைக் காரணம் காட்டி கேவலம் ஒரு கையெழுத்துப் போட ஆள் இல்லை. அவன் அவசரத்துக்கு உலகமே கைவிரித்திருக்கிறது. அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்று, தன்னைப் பற்றிய கர்வங்கள் வெறும் பதினைந்தாயிரம் ரூபாயில் தகர்ந்து போனதில் கலங்கி, இன்னமும் ஏலத்துக்கு இரண்டு நாட்களே என்ற சூழ்நிலையில், தயங்கித் தயங்கி சமையலறையில் மனைவியிடம் லக்ஷ்மிநாராயணன் இயலாமையில் குரல் உடைந்து கரகரக்கிறான்.

''உங்கப்பாகிட்டே வேணும்னா கேட்டுப் பார்க்கட்டுமா?''

(தொடரும்)



* அனிதா, குப்புசாமி

கி
இசைய
கல்யாண

புஷ்பவனம் குப்புசாமி - அனிதா தம்பதியின் கிராமப்புறப் பாடல்களை அடிக்கடி டெலிவிஷனில் கேட்டிருப்பீர்கள். இவர்களுக்கு எப்படி கிராம இசையின் மீது ஆர்வம் பிறந்தது? வேதாரண்யம் வட்டாரத்திலுள்ள ஒரு சிறு கிராமமான புஷ்பவனத்தைச் சேர்ந்த குப்புசாமியையும் மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த - இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட அனிதாவையும் எப்படி இந்த கிராம இசை தம்பதியாக்கியது? அவர்களையே சந்தித்து கேட்டோம்.

''நான் தஞ்சை சரபோஜி கல்லூரியில் பி.எஸ்ஸி., கணிதம்தான் படித்தேன். மூன்றாமாண்டு இறுதியில் கல்லூரியில் விழா நடந்த போது, என் சக நண்பர்கள் என்னைக் கட்டாயமாக மேடைக்குத் தூக்கிச் சென்று பாடித்தான் ஆக வேண்டும் என்று சொல்லி விட்டார்கள். வேறு வழியின்றி நானும் ஏதோ பாடினேன். 'மேடையில் பாடுவதற்கெல்லாம் சங்கீத ஞானம் வேண்டாமா? அது உனக்குச் சுத்தமாகவே கிடையாது' என்று சிலர் விமர்சனம் செய்ய எனக்கு என்னவோ போலாகி விட்டது. நமக்கு ஏன் சங்கீதம் வராது என்று எனக்குள்ளேயே ஒரு கேள்வி.

''எப்படியாவது சங்கீதம் கற்றுக் கொண்டு விட வேண்டும் என்கிற ஆர்வத்துடன் ஒரு பாட்டு வாத்தியாரை அணுகினேன். அவரும் எனக்குச் சங்கீதம் வராது என்று சொல்லி விட்டார். நானும் தளர்ந்து போய் விடாமல் வேறொருவரை அணுகினேன். அவரும் அப்படியே சொல்ல, எனக்கு இசையைக் கற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்கிற வைராக்கியமே வந்து விட்டது.

''பி.எஸ்ஸி., படிப்பு முடிந்ததும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து இசை பயில ஆசைப்பட்டேன். அதற்கு என் தந்தை சம்மதம் தரவில்லை. காரணம், சங்கீதம் படித்தால் பையன் எப்படி ஒரு வேலைக்குப் போக முடியும் என்கிற கவலைதான். அதோடு இதுவரை படித்த பி.எஸ்ஸி., படிப்பும் வீணாகிறதே என்கிற எண்ணம். அதனால் நான் சங்கீதம் படிப்பதற்குத் தம்மால் பணம் தர முடியாது என்று சொல்லி விட்டார்.

''என்ன செய்வது என்று யோசித்தேன். எங்கள் கிராமத்திலுள்ள பெரியவர்களை ஒன்றுசேர்த்து, பஞ்சாயத்து மாதிரி ஒன்றைக் கூட்டினேன். எனது ஆர்வத்தை அவர்கள் மூலமாக என் தந்தையிடம் எடுத்துச் சொல்ல வைத்தேன். அப்போதும் என் தந்தை ஒப்புக் கொள்ளவில்லை. இருக்கிற நிலத்தில் எனக்குப் பங்கேதும் தேவையில்லை. எல்லாவற்றையும் என் தம்பி தங்கைகளுக்கே கொடுத்து விடுங்கள். என் பங்காக நான் இசை படிக்கப் பணம் தந்து உதவுங்கள் என்று ஒருவழியாக என் தந்தையிடம் சம்மதம் பெற்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசையில் டிப்ளமோ படிக்கச் சேர்ந்தேன்.

''பிறகு அதையும் விட்டு விட்டுச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இசையில் பட்டம் படிக்கச் சேர்ந்தேன். பிறகு இசையிலேயே எம்.ஏ. படித்தேன். சாஸ்திரீய சங்கீதத்தை முறையாகப் பயின்ற போது, கிராம இசைக்கும் சாஸ்திரீய இசைக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பது தெரிந்தது. தியாகராஜர் இராமனுக்குப்



...பிறந்த
...க் கதை!

பாடிய தாலாட்டு ராகத்திற்கும் கிராமத்துத் தாய்மார்கள் பாடும் தாலாட்டுப் பாடல்களுக்கும் அடிப்படை இசை ஒன்றாக இருப்பதைக் கண்டு பிரமித்தேன்!

"ஆயினும் சுத்தமான சாஸ்திரீய சங்கீதக்காரர்கள் கிராம இசைக்கு அவ்வளவாக மரியாதை தராமல் இருப்பதைக் கண்டு எனக்கு வியப்பாக இருந்தது. சாஸ்திரீய சங்கீதத்திற்கு கிராம இசையே அடிப்படை என்பதை அனைவருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்கிற ஆவல் என்னுள் அதிகமானது. அதற்குத் தகுந்தாற்போல 90-ம் ஆண்டு நாரதகான சபாவில் ஒரு நிகழ்ச்சியும் ஏற்பாடானது.

"அந்த நிகழ்ச்சிக்குச் செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர், உமையாள்புரம் சிவராமன், புல்லாங்குழல் ரமணி, விநாயகராம் என்று பிரபலமான சாஸ்திரீய சங்கீதக்காரர்கள் வரவிருந்தார்கள். அவர்களுக்கு முன்னால் கிராம இசையின் மகத்துவத்தைப் பாடிக் காட்டும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

"அதற்கான ஏற்பாடுகளை நான் செய்து கொண்டிருந்த போதுதான், என்னுடன் சேர்ந்து பாடுவதற்கு ஒரு பெண் தேவைப்பட்டார். என்னுடன் படித்த சக மாணவிகளை நான் அழைத்து கிராமப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டேன். யாரும் கிராம இசையின் ஜீவனைக் கொண்டு வருவது போல் பாடுவதாக எனக்குப் படவில்லை.

"இந்த நிலையில்தான் எனக்கு ஜூனியராக இசை பயின்று கொண்டிருந்த மாணவி அனிதா என்னிடம் வந்து, 'எல்லோரையும் பாடச் சொல்லிக் கேட்டீர்கள். என்னை மட்டும் ஏன் கேட்கவில்லை?' என்று கோபமாகக் கேட்டார்.

"நான் அவரிடம் கேட்காததற்குக் காரணம், அவரது தாய்மொழி இந்தி என்பதும், அவர் வட இந்தியப் பாணியில் மற்ற மாணவிகளை விட மிகவும் ஸ்டைலாக இருந்ததும் - கிராமத்தானான என்னை மதிப்பாரா என்கிற தாழ்வு மனப்பான்மையை நான் என்னுள் வளர்த்துக் கொண்டிருந்ததும்தான்.

"இந்தச் சூழ்நிலையில் அவர் என்னிடம் வந்து இப்படிக் கேட்டதும் ஒரு வேளை என்னை அவர் கிண்டல் செய்வதற்குத்தான் கேட்கிறாரோ என்று எனக்குச் சந்தேகம் வந்து விட்டது. அதனால் மிகவும் கஷ்டமான ராகங்களைச் சொல்லிப் பாடச் சொன்னேன்! ஆயினும் அவர் நான் எதிர்பார்த்ததற்கும் மேலாகப் பாடி என்னை அசத்தி விட்டார்! அவரையே என்னுடன் சேர்ந்து பாட அழைத்துக் கொண்டு சென்றேன். நாங்கள் இருவரும் அன்று நாரதகான சபாவில் பாடிய கிராமப் பாடல்களைக் கேட்டு செம்மங்குடியே மனமுவந்து பாராட்டினார். அந்த உற்சாகம் காரணமாகத்தான் எம்.பில் முடித்த நான் கிராம இசையிலேயே பி.எச்டியும் செய்ய ஆரம்பித்தேன்.

"இதற்கிடையில் டெலிவிஷனிலும் எங்களுக்குப் பாடும் வாய்ப்புக் கிடைத்துப் பிரபலமானோம். கச்சேரிகளுக்கெல்லாம் எங்களை அழைக்க ஆரம்பித்து விட்டார்கள். நாங்களும் போய்க் கச்சேரியில் இரு

வரும் சேர்ந்து பாடுவதைக் கண்ட பலரும் எங்களைக் காதலர்கள் என்றே எண்ண ஆரம்பித்து விட்டார்கள். எனக்குத் திருமணம் செய்வதற்காகப் பெண் பார்க்கச் சென்ற இடத்திலெல்லாம் என் தந்தையிடம், 'உங்கள் பையன் ஏதோவொரு சேட்டுப் பெண்ணோடு சேர்ந்துதான் பாடுகிறானாமே! நாங்கள் எப்படிப் பெண் கொடுப்பது?' என்று மறுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

''வெறுத்துப் போன என் தந்தை, என்னிடம், 'நீயேன் அந்த சேட்டுப் பெண்ணையே கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூடாது?' என்று கேட்டார். அதுவரை எனக்கும் சரி, அனிதாவுக்கும் சரி அப்படியொரு எண்ணமே இல்லை என்பதால், நான் மறுத்தேன். ஆனால் என் தந்தையோ விடாமுயற்சியாக அனிதாவிடம் கேட்க, அவரும் மறுத்து விட்டார். அதோடு, தமக்குத் தம் வீட்டில் பைலட் மாப்பிள்ளையாகப் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் கூறி விட்டார்.



''அதோ போறாரே அவரு பாக்யராஜ் ரசிகர்.''
''எப்படி கண்டு பிடிச்சிங்க?''
''அப்பா சௌக்கியமா?'ன்னு கேட்டேன். திரையக் குட்டிக் கதையாப் பதில் சொல்றாரு.''
– எஸ். ஸ்ரீராம்

''அனிதா இப்படிச் சொன்னதும் எனக்கு என்னவோ போல் ஆகி விட்டது. என்னைத் திருமணம் செய்து கொள்ள இஷ்டப்படாதது சரி. ஆனால், என்னை விட பைலட் மாப்பிள்ளை மட்டும் என்ன உசத்தி? நான் கறுப்பு என்பதைத் தவிர வேறு எந்த வகையில் தாழ்ந்து போய் விட்டேன் என்கிற ஈகோ என்னுள் எழுந்து விட்டது. அதனால் எப்படியும் அனிதாவின் சம்மதத்தோடு அவரையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் என்னுள் எழுந்து விட்டது! இதையொரு சவாலாகவே அனிதாவிடம் சொன்னேன்.

''இந்த விஷயம் அனிதாவின் பெற்றோருக்குத் தெரிய வர, அவர்கள் அனிதாவை என்னுடன் பாட அனுப்ப மறுத்தார்கள். நான் அவர்களிடம், 'நான் ஒரு போதும் தவறான வழியில் செல்ல மாட்டேன். எனது சபதத்திற்கும் இசைக்கும் சம்பந்தமில்லை. தயவு செய்து, அனிதாவை என்னோடு பாட அனுப்ப மறுத்து, எனது ஒழுக்கத்தையே சந்தேகப்படாதீர்கள்?' என்றேன். அவர்களுக்கும் என் மேல் நல்ல அபிப்ராயம் இருந்ததால் என் பெற்றோரிடமும் கலந்து பேசி திருமணத்திற்கே ஒப்புக் கொண்டு விட்டார்கள். அவர்களுடைய உறவினர்கள் சிலரின் எதிர்ப்புக்கு இடையிலும் எங்கள் திருமணத்தையும் நடத்தி வைத்தார்கள்!'' என்றார் குப்புசாமி.

''அது சரி, அனிதா எப்படி ஒப்புக் கொண்டார்?'' என்று நாம் கேட்ட போது, இதை அவரிடமே கேளுங்களேன்!'' என்றார் அவர்.

''என்னிடம் அவர் ரொம்பவும் பிரியமாக இருப்பார். கெட்ட பழக்கங்களும் அவரிடம் இல்லை. இசையில் - அதுவும் கிராம இசையில் அவருக்கிருந்த ஆர்வம் - மேலும் மாலை ஆறு மணிக்கு மேல் பெண்கள் வீட்டு வாசலைத் தாண்டி வெளியே செல்லக் கூடாது என்கிற அளவுக்குக் கட்டுப்பாடும் கண்டிப்பும் கொண்ட என் குடும்பத்தினருக்கு, அவர் மேல் முழு நம்பிக்கை ஏற்பட்டு, அவரோடு கச்சேரி செய்வதற்கு வெளியூர்களுக்கெல்லாம் அனுப்பினார்கள். இவற்றோடு, ஏற்கெனவே அறிமுகமில்லாத ஒருவரைத் திடீரென்று திருமணம் செய்து கொள்வதை விட, நன்கு தெரிந்த ஒருவரைத் திருமணம் செய்து கொள்வது மிகவும் பாதுகாப்பான - அன்புமயமான வாழ்க்கையைத் தரும் என்றும் நம்பினேன்!'' என்றார் அனிதா.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட அனிதா, எப்படி தமிழக கிராமப் பாடல்களின் மீது ஈடுபாடு கொண்டார்? ''தாய்மொழி இந்தியானாலும் நான் வளர்ந்த சூழ்நிலை முழுக்க முழுக்க தமிழ்ச் சூழ்நிலைதானே!'' என்கிறார் அவர்.

இருவருடைய லட்சியமும் சாஸ்திரிய சங்கீதத்துக்கு இருக்கும் சமூக கௌரவத்தை - சபா அங்கீகாரத்தை - கிராம இசைக்கும் ஏற்படுத்தப் பாடுபடுவது மட்டுமல்ல; கிராம இசை என்கிற தொட்டிலில் வளர்ந்ததுதான் சாஸ்திரிய சங்கீதம் என்பதை அனைவரும் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும் என்பதும் தான்!

– இளங்கோவன்

வண்ணப்படம் : கோபிநாத்

பாலம்



●● தொழில் கல்வி (Mechanical) படித்துக் கொண்டிருக்கும் எனக்கு பைலட்டாகப் பணிபுரிய விருப்பம். இது பற்றி தகவல்கள் தெரிவித்து வழி காட்டுவோருக்கு நன்றியுடையவனாக இருப்பேன்.

- இ. சரவணன்,
ராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம்,
சர்.பி.எஸ். சிவசாமி சாலை,
சென்னை - 600 004.

●● 1965 முதல் 1976 வரை நான் ''பத்மன்'' , ''ஸ்வப்னா'' என்ற புனைபெயர்களில் ''வான்மதி'', ''காதம்பரி'' பத்திரிகைகளில் எழுதிப் பிரசுரமான கதைகளின் பிரதிகளை எனக்கு யாரேனும் தந்து உதவினால் நல்லது.

- ஆர். வேணுகோபால்,
26/6 CPWD குவார்ட்டர்ஸ்,
சென்னை - 600 090.

●● தேனீ வளர்ப்பில் சுயதொழில் செய்ய விரும்புகிறேன். அது சம்பந்தமான நூலோ விவரங்களோ கொடுத்து உதவ வேண்டுகிறேன்.

- எஸ். ராமசுப்பு,
கொப்பம்பட்டி,
கோவில்பட்டி (வட்டம்),
வ.உ.சி. (மாவ) 627 720.

●● சங்கரதாஸ் சுவாமிகளின் மேடை நாடகப் புத்தகம் வைத்திருப்போர் முதலில் தயவு செய்து விலை விவரம் தெரிவிக்கவும். அதற்குரிய தொகை எம்.ஓ. செய்கிறேன். அல்லது வி.பி.பி.யில் பெற்றுக் கொள்கிறேன்.

- எஸ். ஆர். வேணுநாதன்,
மேடை நாடக ஆசிரியன்,
இசுக்கழி (அஞ்சல்)
606 804.

●● ''பழையனூர் நீலி'' பற்றி அறிய ஆவல். வரலாற்று, இலக்கிய ஆதாரங்கள் வைத்திருப்போர் தயவு செய்து அனுப்பி உதவுங்கள்.

- கே. பாலகிருஷ்ணன்,
23, மேற்கு மாடத் தெரு,
628 215.

●● விலங்கியல் மூன்றாமாண்டு படிக்கிறேன். படிப்பு முடிந்ததும் மீன் பண்ணை அமைக்க விருப்பம். இத் துறையில் சிறந்து விளங்குகிறவர்களின் ஆலோசனைகள் தேவை. செலவு மற்றும் வழிமுறைகளைத் தெரிவித்தால் என் லட்சியப் பயணத்துக்கு உதவியதாக இருக்கும்.

- வி. ராஜன் பாபு,
மூன்றாம் ஆண்டு விலங்கியல்,
ந.க.ம. கல்லூரி,
பொள்ளாச்சி.

●● ஸ்ரீமத் பாகவத ரகஸ்யம் நூலின் தமிழாக்கம் - ஹரிஹர சர்மா எழுதியது - நான்கு பாகங்களில் மூன்றுு உள்ளது. நான்காம் பாகம் எனக்குக் கொடுப்பதற்கு விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்க.

- ம. மு. விசுவநாதன்,
27, ராஜாஜி தெரு,
காந்தி நகர்,
மதுரை - 625 020.

●● சுயதொழில் செய்ய விரும்பும் படித்த வேலையில்லா இளைஞர்களுக்குக் காளான் வளர்ப்பில் நேர்முகப் பயிற்சி அளிக்க விருப்பம். ஆர்வமுள்ளோர் சனி, ஞாயிறு கிழமைகளில் நேரில் சந்திக்கவும்.

- ஜி. சொக்கலிங்கம்,
10E/EB, காலனி, இரண்டாம் தெரு,
ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088.

●● மயிலாடுதுறை வட்டம், திருவாலங்காடு கிராமத்தின் ஒன்றிய நடுநிலைப் பள்ளி நூற்றாண்டு விழா காணும் இந் நேரத்தில் பழைய மாணவர்கள் தொடர்பு கொள்ளக் கோருகிறேன்.

- தலைமை ஆசிரியர்,
ஊ.ஒ.ந. பள்ளி,
திருவாலங்காடு - 609 810.

●● எனக்கு Catering Technology -யில் 35 வருஷ அனுபவம். Catering Consultant ஆக இருக்க விரும்புகிறேன். என் அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

- ஜி. சுப்பிரமணியம்,
1172,B 31, BDA Flats,
Austin Town Layout,
Neela Sandra,
Bangalore - 560 047.

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது. - ஆர்.)

பாண்டியன் மகள்

9. மலைப்பாதை

மரணவிளிம்பு

தான் தலைவனாவதற்குத் தடையாக இருந்த கார்குழலியைத் தீர்த்துக் கட்டும் பொறுப்பை நான்கு வீரர்களிடம் ஒப்படைத்தாலும் உபதலைவன் மனம் அமைதியின்றித் தவித்தது. என்னதான் போர்ப் பயிற்சி இருந்தாலும் கார்குழலியால் அந்த நான்கு வீரர்களைக் கணநேரம் கூட சமாளிக்க இயலாது என்பதையும், அந்த வீரர்களும் சாமானிய வீரர்கள் அல்ல என்பதையும் நன்றாக அறிந்திருந்தும் உபதலைவன் சித்தம் ஏதோ விவரிக்க இயலாத சந்தேகத்தால் குழம்பியது. அதை அதிகப் படுத்தும் வகையில் ரதத்தில் ஏறிச் சென்ற கார்குழலியின் அலங்காரத் தோற்றமும் அவளுடைய அலட்சியப் பார்வையும் அடிக்கடி நினைவுக்கு வந்து அவனை மேலும் குழப்பின.

அவன் குழம்பிய சிந்தனையின் குறுக்கே வாயிலில் வந்து நின்று அழைத்த வீரனின் குரல் புகுந்தது.

''பிரபு!''

''என்ன?'' உபதலைவன் குரல் கடுமையுடன் வந்தது.

''சிறைக் காவலர் வந்திருக்கின்றனர்'' என்றான் வீரன்.

சிறையிலிருந்து ஒருவன் தப்பியதும் தான் அதைப் பிறகு விசாரிப்பதாகக் கூறியதும் அப்போதுதான் அவன் நினைவுக்கு வந்தது.

உள்ளே நுழைந்து வணங்கிய காவலர்களை எரித்து விடுபவன் போலப் பார்த்த உபதலைவன், ''அவன் எப்படித் தப்பினான்?'' என்று இரைந்தான்.

மென்று விழுங்கிய காவலர் இருவரும், ''உங்களிடம் தெரிவிக்க ஏதோ முக்கிய செய்தி இருப்பதாக எங்களை அழைத்தான். அருகில் நெருங்கியதும் தாக்கப்பட்டோம். எதைக் கொண்டு எங்களைத் தாக்கினான் என்பது தெரியவில்லை பிரபு.''

''சாளரத்தின் கம்பிகளை எப்படி வளைத்தான்?''

''தெரியவில்லை பிரபு.''

''பூட்டிய கதவை எப்படித் திறந்தான்?''

''தெரியவில்லை பிரபு.''

''அவனிடமிருந்து ஆயுதங்களை அகற்றினீர்களா இல்லையா?''

''அறைக்குள் தள்ளும் முன்தான் அகற்றினோம் பிரபு.''

''பின் வெறும் கைகளினாலா உங்களைத் தாக்கினான்?''

''தெரியவில்லை பிரபு.''

உபதலைவனின் எரிச்சல் எல்லை கடந்தது.

''உங்களுக்கு இந்தத் தெரியவில்லை பாட்டைத் தவிர வேறு என்னதான் தெரியும்?'' என்று இரைந்தான்.

''தெரிய...'' என்று தொடங்கிய காவலர் சட்டென்று வாயை மூடிக் கொண்டனர்.

அவர்களை வெளியேற உத்தர விட்ட உபதலைவன் இருக்கையிலமர்ந்து கொண்டு வாயிலை வெறித்து நோக்கினான்.

வாயிலில் நின்ற வீரன் மீண்டும் குரல் கொடுத்தான்.

''பிரபு!''

''என்ன?'' உபதலைவனது குரல் இன்னும் உஷ்ணமாயிருந்தது.

''நேற்று அந்த வாலிபனைத் தலைவியார் தனியாக நீண்ட நேரம் விசாரித்தார்கள்.


''என்ன தனியாகவா?'' - உபதலைவனுக்கு இந்தத் தகவல் புதிதாக இருந்தது. முன்தினம் சரிவர விசாரிக்காத தனது முட்டாள் தனத்தை நொந்து கொண்டான்.

''தனியாக இல்லை பிரபு. அந்த முதிய வீரன் கேசவனும் உடனிருந்தான்.''

''இப்போது அவன் எங்கே?''

''இன்று காலை முதல் அவன் கோட்டையில் எங்கும் காணப்படவில்லை, பிரபு!''

விஷ்வக்சேனன்



உபதலைவன் திகைத்து நின்றான். தன் திட்டத்தை மீறி ஏதோ நடந்திருக்கிறதென்பது அவனுக்குப் புரிந்தது.

விடுவிடுவென்று வெளியில் வந்தவன் தனது புரவியை அழைத்து வர உத்தரவிட்டான்.

புரவியில் தாவி ஏறியவன் ரதம் சென்ற பாதையில் கனவேகமாக விரைந்தான்.


கொட்டுந்தளத்தை நோக்கிச் சென்ற பாதை பார்வைக்கு மிக ரம்மியமாயிருந்தது. இருபுறங்களிலும் தெரிந்த மலை முகடுகளும் அவற்றைத் தொட்டுத் தடவி நீந்திக் கொண்டிருந்த மேகங்களும் வெள்ளிச் சரிகைவிட்டாற்போல் பளபளத்த அருவிகளும், இயற்கை தன் கைத்திறனையெல்லாம் அங்கு கொட்டி விட்டதோ என்ற பிரமையை ஏற்படுத்தின.

கோட்டையை விட்டு அதிக தூரம் அது வரை வந்திராத கார்குழலிக்கு இந்தக் காட்சிகளெல்லாம் புதுமையாகவும் கருத்தை அப்படியே அள்ளுபவையாகவும் தோன்றின.

ரதம், மலையுச்சியை நோக்கி வளைந்து வளைந்து சென்ற அந்தப் பாதையில் சற்று நிதானமாகவே சென்றது.

நேர் உச்சியில் ஒற்றை மரம் ஒன்று தனித்துத் தெரிவதையும் அதைக் கடந்ததும் பாதை சமமாக இருக்கும் என்பதையும் உணர்ந்திருந்த நான்கு வீரர்களின் பார்வைகளும் ஒன்றை ஒன்று சந்தித்துக் கொண்டன. உபதலைவன் குறிப்பிட்ட இடம் நெருங்குவதைப் புரிந்து கொண்ட நால்வரும் நடவடிக்கைக்குத் தயாராயினர்.

கார்குழலி தான் சென்று கொண்டிருந்த ரதத்தைக் கவனித்தாள். கோட்டைத் தலைவனால் கவனமாகப் பராமரிக்கப்பட்டிருந்த



அந்த ரதம் உட்புறத்தில் சுத்தமாகவும் சுக மான பஞ்சணையுடனும் இருந்தது. வாளொன்றும் கயிற்றில் ஆடித் தொங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட கார்குழலி யின் இதழ்களில் முறுவல் ஒன்றும் விரிந் தது.

உச்சியில் நின்ற மரத்தை நெருங்கியதும் ரதத்தை நிறுத்துமாறு சாரதிக்கு சமிக்ஞை செய்த நால்வரில் ஒரு வீரன், தன் புரவியை ரதத்தின் குறுக்காக முந்திச் சென்று நிறுத்தி னான். ரதம் நின்றது.

பாதையின் விளிம்பை அடுத்துத் தெரிந்த அதலபாதாளம் சற்று அச்சத்தையே ஏற்படுத்தியது கார்குழலிக்கு. அதை உதறிக் கொண்டு தனது வலது கரத்தை நீட்டி அந்த வாளின் பிடியில் வைத்தாள். ஆனால் அவள் அந்த வாளை உருவுமுன் இடதுபுறக் காட்டி லிருந்து பெரும் ஆரவாரம் கேட்டது. மரங் களினிடையேயிருந்து புரவிகளில் பல வீரர் கள் வந்தனர்.

திகைத்து நின்ற நான்கு சேர வீரர்களும் வந்தவர்கள் சோழ வீரர் என்பதை அவர் களின் உடையைக் கொண்டு அறிந்து, தங்கள் வாட்களை அவர்கள் மீது திருப்பி னார்கள்.

சோழ வீரர்கள் எண்ணிக்கையில் அதிகமாயிருந்தாலும் ரதத்தின் உடன்வந்த நால்வருடன் நான்கு வீரரே போரிட்டனர். மற்றவர்கள் பாதையின் குறுக்கே இருபுறங் களிலும் நின்றனர்.

ரதத்தின் சாரதி எங்கோ காணாமற் போயிருந்தான். சோழ வீரர்கள் அநாயாச மாகப் போரிட சண்டை துரிதமாக முடிந்து போயிற்று. கார்குழலியைக் கொன்று விடும் திட்டத்துடன் வந்திருந்த வீரர் நால்வரும் அந்த மலைப்பாதையின் குறுக்கே இறந்து விழுந்து கிடந்தனர்.

ரதத்தை நெருங்கிய சோழ வீரர் தலை வன் சீலையை விலக்கி, கார்குழலியை நோக்கித் தலைவணங்கினான்.

''பாண்டிய இளவரசிக்கு வணக்கம். கோட்டையில் உங்களைச் சந்தித்தவரது உதவியாளன் நான். பெயர் ஜெயந்தன்'' என்று அறிமுகப்படுத்திக் கொள்ளவும் செய்தான்.

சரியான தருணத்தில் வந்து தன்னைக் காத்த ஜெயந்தனை நன்றி ததும்பிய விழி களால் நோக்கிய கார்குழலி, அவன் வணக் கத்தைத் தலையசைத்து ஏற்றாள்.

அவள் விழிகளில் நன்றியுடன் வியப் பும் கலந்திருந்தது. ''நான் பாண்டிய இள வரசியென்பதும் இந்த வழியில் இங்குதான் என் ரதம் மடக்கப்படும் என்பதும் எப்படி உங்களுக்குத் தெரிந்தது?''

ஜெயந்தன் முகத்திலிருந்த முறுவல் விரிந்தது.

அருள்வாக்கு

வெளி அடக்கம் உண்டானால் தான் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளடக் கம் சித்திக்கும். இதனால்தான், ''இந்தி ரிய வியாபாரங்களைக் குறைத்துக் கொள்; கூட்டத்தில் சேராதே; 'உலகுக்கு நல்லது செய்வது' என்பது உள்படச் சகல காரியங்களையும் விலக்கப் பிரயாசைப் படு; பணத்தைப் பக்கத்தில் சேர்க்காதே; காட்டுக்குப் போ'' என்றெல்லாம் சொன் னார்கள். இப்படி இதை விடு, அதை விடு என்று நமக்கு இஷ்டமானதை எல்லாம் துறக்கச் சொன்னால் நாம் கேட்போமா? மாட்டோம். சித்தம் சுத்தமானால்தான் இதைச் செய்யப் பக்குவம் வரும்.

இதனால்தான் முதலில் சித்தம் சுத்த மாவதற்காக 'இதை விடு அதைவிடு' என்று சொல்வதை விட முக்கியமாக, 'இதைச் செய், அதைச் செய்' என்று

''இளவரசி, அரையன் மதுராந்தகர் எங்களைக் கானகத்தில் விட்டுப் பிரியுமுன் அவர் வந்த காரணத்தைக் கூறினார். நீங்கள் இந்த வழியில் வருவதையும் அதோ நிற்கும் ஒற்றை மரத்தைப் பற்றியும் நேற்றிரவு தெரி வித்தார்.''

''நேற்றிரவா? அவர் சிறையிலிருந்து வந்து என்னைச் சந்தித்தபோதே நள்ளிர வுக்கு மேல் ஆகியிருந்ததே!'' கார்குழலியின் குரலில் வியப்பு வழிந்தது.

''விளக்கொளியில் சமிக்ஞை செய்யும் முறை ஒன்று இருக்கிறது இளவரசி'' என் றான் ஜெயந்தன்.

பின்னாலிருந்து அதே நேரத்தில் வீர னொருவன் குரல் கொடுத்தான். ''தலை வரே, தனியே புரவியில் ஒருவன் வந்து கொண்டிருக்கிறான்.''

கார்குழலிக்கு வருபவன் யாரென்பது உடனே புரிந்தது. ''கோட்டையின் உபதலை வன் வருகிறான்'' என்று தெரிவித்தாள்.

ஜெயந்தன் அரைக்கண நேரம்தான் சிந் தித்தான். அடுத்து அவன் உத்தரவுகள் மின் னல் வேகத்தில் பிறந்தன.

''கீழே கிடப்பவர்களை அப்புறப்படுத் துங்கள். அனைவரும் உடனே மறைவுக்கு வந்து விடுங்கள். இளவரசி நீங்கள் ரதத்தி லேயே அமர்ந்திருக்கலாம்'' என்றவன், அரு கிலிருந்த மரத்தின் பின் சென்று மறைந் தான்.

புரவியின் குளம்படிச் சத்தம் நெருங்கி யது.

ரதம் மட்டும் பாதையில் தனித்து நிற்ப தைக் கண்டதும் உபதலைவன் திகைத்தான். உடன் வந்த வீரர்களோ, சாரதியோ இன்றி

பலவிதமான கர்மாக்களை விதித்திருக்கிறது. ஒரு காரியத்தில் ஈடுபடுவதே நமக்கு இயல்பாக, சுபாவமாகக் கைவருகிறது. எனவே, இந்த மாதிரி, நமக்குச் சொந்த விருப்பு வெறுப்பு இல்லாமல் சாஸ்திரம் சொல்கிற காரியங்களை ஆரம்பிக்கிறோம். இதிலும் ஆரம்பத்தில் விருப்பு வெறுப்பு தலைதூக்கத்தான் செய்யும். இருந்தாலும் எடுத்த எடுப்பில் சித்தையை அடக்கித் தியானம் செய்வதை விட, ஏதோ கொஞ்சத்தில் கொஞ்சமாவது விருப்பு வெறுப்புகளை, சௌகரிய அசௌகரியங்களைப் பாராமல் கர்மாக்களை



அநுஷ்டானம் செய்ய முடிகிறது. இப்படி ஒரு பிரயத்தனத்தை ஆரம்பித்து விட்டால் அப்புறம் பகவத்கிருபையால் விருப்பு வெறுப்புகள், சௌகரிய அசௌகரிய எண்ணங்கள் மேலும் மேலும் குறைந்து ஸத்கர்மாக்களை ஒழுங்காகச் செய்ய முடிகிறது. ஆசையும் துவேஷமும் குறைவதால் சித்தம் சுத்தமாகிறது. இப்படி சுத்தமான பிறகுதான் அது ஒருமுகப்பட்டு தியானத்தில் அமிழ முடியும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

நின்ற ரதம் அவன் சந்தேகத்தைக் கிளப்பியது. ஒருமுறை ரதத்தைச் சுற்றி வந்தவன் கீழே தெரிந்த குளம்படிகளையும், திட்டுத் திட்டாகக் கிடந்த ரத்தக் கறைகளையும் கண்டு இன்னும் குழம்பினான்.

தன் வாளை உருவி எடுத்தவன் அதன் நுனியால் சீலையை விலக்கி, உள்ளே நோக்கியதும் பிரமித்தான். கையில் வாள் ஒன்றுடன் சர்வாலங்காரத்துடன் மகா சக்தி போல் அமர்ந்திருந்தாள் கார்குழலி. அவள் இதழ்களில் முறுவல் ஒன்றும் தவழ்ந்து கொண்டிருந்தது.

அவள் கையிலிருந்த வாளை விட அவள் புன்னகை அவனுக்கு விவரிக்க இயலாத ஓர் அச்சத்தை ஊட்டியது. ''என்ன இது? காவலர்கள் எங்கே?''

பதிலுக்கு மெல்ல நகைத்த கார்குழலி, ''யார்? என்னைக் கொல்ல அனுப்பினாயே, அவர்களையா கேட்கிறாய்?'' என்றாள்.

அவள் தன்னை அலட்சியமாக ஒருமையில் அழைத்துப் பேசியதைக் கண்ட உபதலைவன் முகத்தில் கனல் வீசியது.

''எங்கே அவர்கள்?'' மீண்டும் கேட்டான் அவன்.

நிதானமாகப் பதிலளித்தாள் கார்குழலி. ''அவர்களைக் கொன்று விட்டேன்!''

ஒருகணம் உபதலைவன் அயர்ந்தான். தான் அனுப்பிய வீரர்கள் செய்யத் தவறியதைத் தான் செய்து முடிக்கத் தீர்மானித்தவன், தன் வாளை ஓங்கினான்.

ஓங்கிய வாள் ஓங்கியபடியே நின்றது. உபதலைவனது வாள் பிடித்த கரத்தைப் பின்னாலிருந்து வலிய கரம் ஒன்று இரும்புப் பிடியாகப் பிடித்தது.

''தனித்திருக்கும் ஒரு பெண்ணைக் கொல்ல உபதலைவர் வாளை ஓங்குவது சரியல்ல.'' - பின்னாலிருந்து குரலொன்றும் ஒலித்தது.

கையை உதறிக் கொண்டு திரும்பிய உபதலைவன், எதிரில் ஒரு சோழ வீரன் விஷமப் புன்னகையுடன் நிற்பதைக் கண்டு உறைந்து போனான். ''யார் நீ?'' அவன் கேள்வியும் சற்று குழறலாக ஒலித்தது.

''என் பெயர் ஜெயந்தன். சோழ நாட்டைச் சேர்ந்தவன்'' என்று அறிவித்த ஜெயந்தனின் மீது உபதலைவனது வாள் கனவேகத்தில் இறங்கியது. கண்ணிமைக்கும் நேரத்தில் சட்டென்று நகர்ந்து தப்பிய ஜெயந்தன் ஒருமுறை சுழன்று திரும்பினான்.

சுழன்று திரும்பிய வேகத்தில் ஜெயந்தனது இடையிலிருந்த குறுவாள் அசுர வேகத்தில் பறந்து உபதலைவனது மார்பில் பாய்ந்தது. மீண்டும் வாளை ஓங்கிய கரம் ஓங்கியபடியே நிற்க, அலறுவதற்காகத் திறந்த வாய் சப்தமின்றித் திறந்தபடியே இருக்க, வேரற்ற மரம் போலத் தரையில் சாய்ந்தான் உபதலைவன்.

அதற்குள் நெருங்கி வந்து விட்ட வீரர்களை நோக்கிய ஜெயந்தன், ''இவனை அப்புறப்படுத்தி விடுங்கள். மதுராந்தகர் உத்தரவுப்படி நீங்கள் சேரன் எல்லையில் காத்திருங்கள்'' என்று உத்தரவிட்டான்.

கார்குழலியின் பக்கம் திரும்பிய ஜெயந்தன், ''இளவரசி, இனி ஆபத்தொன்றும் இல்லை. தங்களை சோழ நாடு கொண்டு சேர்க்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார் மதுராந்தகர்'' என்றான்.

வீரர்களுக்கு விடைகொடுத்த ஜெயந்தன், சாரதி ஸ்தானத்தில் தாவி ஏறியமர்ந்தான்.

பிரதான பாதையை விட்டுப் பக்கவாட்டில் காட்டினூடே சென்ற ஒரு பாதையில்

திரும்பிய ரதம், ஜெயந்தனின் லாவகமான சாரத்தியத்தில் கன வேகமாகச் சேரன் எல்லையை விட்டு விலகிப் பறந்தது.

தன் வாழ்வில் மகத்தான மாறுதலை ஒரே நாளில் ஏற்படுத்தி விட்ட அரையனின் நினைவு வந்தது கார்குழலிக்கு. எத்தனை நிதானம்? தெளிவான திட்டம். அதைச் செயல்படுத்த ஜெயந்தனைப் போன்ற திறமைசாலிகள். இவர்களைப் போன்ற வீரர்களிருப்பதால்தான் புலிக் கொடி துங்கபத்திரா வரையில் பறக்கிறது என்று எண்ணினாள் அவள்.

அரையனைப் பற்றி ஜெயந்தனிடம் விசாரிக்கவும் செய்தாள் கார்குழலி. ரதம், ராஜபாட்டையை அடைந்து சோழ நாட்டை நோக்கிப் பறக்கத் தொடங்கி விட்டிருந்தது.

"**அ**ந்த சோழ வீரர் யார்? பெயரை மட்டும்தான் என்னிடம் தெரிவித்தார் அவர்."

"மதுராந்தகரையா கேட்கிறீர்கள்? உங்கள் தாயைக் காப்பாற்றிப் பாதுகாத்து வரும் திருநாராயணபட்டரின் சீடர் இவர். சோழ இளவரசியையும் மேலைமங்கலத்துக் கோட்டையையும் ஒரே நாளில் மீட்டவர்."

"அப்படியா?"

"ஆம். சோழ இளவலின் நட்பை இத்தனை விரைவில் இத்தனை நெருக்கமாக இதுவரை யாரும் பெற்றதில்லை!"

அதே சமயத்தில் அரண்மனையில் அமைச்சர் நம்பிப் பல்லவராயர் தமது கையிலிருந்த ஓலையைப் படித்து விட்டு நகைத்துக் கொண்டிருந்தார். எதிரிலிருந்த சோழ இளவல் காரணம் புரியாததால் வினவினான். "எதற்காக நகைக்கிறீர் அமைச்சரே?" என்று.

"இந்தக் கவியின் சீடன் வேற்று நாட்டு ரதங்களில் இளவரசிகளைக் கடத்துவதில் நிபுணனாயிருக்கிறான். அம்மங்கையைப் பாண்டியர் ரதத்தில் அழைத்து வந்தவன், இப்போது சேரன் ரதத்தில் பாண்டிய இளவரசியை அனுப்பியிருக்கிறானாம்" என்ற அமைச்சர் மீண்டும் நகைத்தார். விக்கிரமனும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டான். பிறகு கேட்டான் :

"அமைச்சரே, உறையூர் கோட்டையைச் செப்பனிடும் பணி முடிந்து விட்டதா?"

"ஏறக்குறைய முடிந்து விட்டது இளவரசே."

"இங்கிருந்து காவற்படையின் ஒரு பிரிவை அங்கு அனுப்பி விடுங்கள். நான் சில நாட்களுக்கு உறையூரிலிருந்தவாறு என் பணியை மேற்கொள்ளுகிறேன். பாண்டிய இளவரசியையும் அங்கு அழைத்து வர ஜெயந்தனுக்குத் தகவல் அனுப்பி விடுங்கள்" என உத்தரவிட்டான் இளவல்.

(தொடரும்)

முதன் முதலில் ஊசி போட்டார்!

செத்தும் கொடுத்தார் சீதக்காதி

இவரது இயற்பெயர் செய்கு அப்துல் காதிர். இப் பெயரே சுருங்கி 'சீதக்காதி' என்று ஆயிற்று... நவரத்தின வணிகத்தில் சீதக்காதி பெரும் பொருள் ஈட்டினார். ஏழை எளியவர்களுக்கு இல்லை என்று கூறாது வாரி வழங்கும் வள்ளலாக விளங்கினார்...

தாம் இறக்கும் முன் தம் அடக்கவிடத்தில் கட்டடம் ஏதும் கட்ட வேண்டாம் என்றும், தம் 'கப்ர்' மீது முளைக்கும் புல் பூண்டுகளை ஆடு மாடுகள் தின்பதையே தாம் விரும்புவதாகவும் கூறினார். இறந்தும் பிற உயிர்களுக்குப் பயன்பட எண்ணிய அவருடைய கொடை உணர்வு இது.

தொப்பி தைத்து விற்ற சக்கரவர்த்தி

ஔரங்கசீப் தம் சொந்தச் செலவுகளுக்கு ஒரு காசு கூட அரசாங்கக் கருவூலத்திலிருந்து எடுக்க விரும்பியதில்லை. திருக் குர் ஆனுக்குப் படியெடுத்துக் கொடுத்தும், தொப்பி தைத்து விற்றும் வந்த வருமானத்தைக் கொண்டே தம் சொந்தச் செலவுகளைக் கவனித்துக் கொண்டார்.

இறந்த கணவனுடன் மனைவி தீயில் உடன்கட்டை ஏறும் 'சதி' வழக்கத்தை திருத்தினார். இஸ்லாமியப் புனித இடங்களுக்கு மட்டுமல்லாது அனைத்து மதக் கோவில்களுக்கும் மானியங்களை வழங்கினார். ஆடம்பரங்களை ஒழித்தார். மன்னர்களைக் கவிதையால் புகழும் போக்கை திருத்தினார். அரசுப் பணம் மக்களின் நலனுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

கைக்கூலிப் பழக்கம்

மணமகன் மணமகளுக்கு 'மஹர்' வழங்க வேண்டுமெனத் திருமறையில் அல்லாஹ் தெளிவாகக் கூறியுள்ளார். இந்தத் தொகையை வழங்குவதன் மூலம் மணமகளின் தகுதியை மணமகன் உயர்த்துகிறான். இந்தத் தொகை குறைந்தபட்சம் பத்து தாணைய மதிப்புடையதாக இருக்க வேண்டும். இதற்கு மேற்பட்ட தொகையை மணமகன் தகுதிக்கும் செல்வவளத்திற்கும் ஏற்ப வழங்கலாம்... இதற்கு மாறாகப் பெண் வீட்டாரிடமிருந்து 'கைக்கூலி' எனும் வரதட்சணை வாங்குவது இஸ்லாமிய நெறிக்கு முற்றிலும் புறம்பானதாகும்.

ஹராம்

மதுக்குடி போன்ற ஹராமான (விலக்கப்பட்டவை) அம்சங்களை உண்பவனுடைய தொழுகை இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. வட்டி போன்ற ஹராமான சம்பாத்தியமுள்ளவர்களின் வணக்கமும் இறைவனால் ஏற்கப்படுவதில்லை.

இறந்தவருக்கு அஞ்சலி

மாற்றுச் சமயத்தவரின் சடலம் தூக்கி வரப்பட்டாலும் ஒரு முஸ்லிம் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டும். யூதர் ஒருவரின் பிரேதம் எடுத்துச் செல்லப்பட்டபோது பெருமானார் அவ்விதம் செய்தார்.

முதன் முதலில் ஊசி போட்டவர்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த மருத்துவ மேதை 'அவிசென்னா' என உலகம் போற்றும் இப்னுஸீனா. தங்கம் வெள்ளியை மென்மைப் பொருளாக்கி மருந்துடன் கலந்து தந்து நோய் தீர்க்கும் வழிமுறையை அறிந்து கூறியவர். ஊசி மூலம் உடலில் மருந்தைச் செலுத்தி இரத்தத்துடன் கலக்கச் செய்து நோய் போக்கும் 'இஞ்ஜெக்ஷன்' முறையை முதன் முதலில் கண்டறிந்து கூறியவரும் இவரே.

தொகுப்பு : பாலன் பூங்குழலி

இளைஞர் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் - மணவை முஸ்தபா, விலை ரூ 90. மீரா பப்ளிகேஷன், ஏ. ஈ. - 103, அண்ணா நகர், சென்னை - 600 040.

ஸ்பரித் வெற்றிகள்

அருள்மொழிவர்மன்

வாசலில் செருப்புச் சப்தம் கேட்டது. அப்பா வந்து விட்டார். குமார் படித்துக் கொண்டிருந்த கவிதைப் புத்தகத்தை மேசைக்குள் தள்ளினான். நன்றாகத் தூங்குகிறவன் போல் படுத்துக் கண்ணை மூடிக் கொண்டான். அப்பா இவன் அருகில் வந்து நின்றார். நீண்ட பெருமூச்சுடன் நகர்ந்தார். முற்றத்தில் கை கால் கழுவியதும், அம்மா தட்டு எடுத்து வைப்பதும் கேட்டன. தோள் துண்டை உதறி விட்டுச் சாப்பிட உட்கார்ந்தார். அடுத்து வழக்கமான கேள்விகள் : ''என்னவாம்? துரை இண்டர்வ்யூவுக்குப் போனாரா? எப்படி செஞ்சிருக்காராம்?'' எரிச்சலும் கசப்பும் சமமாய்க் கலந்த அப்பாவின் கேள்வி.

அம்மாவிடமிருந்து பதிலே இல்லை. போன ஆறு மாதத்துக்கு முன்பு வரை அவன் பக்கம் பேசியவள் அவள். ''பாவம். அவன் என்னங்க செய்வான்? நாயா பேயா அலையறான். விளையாட்டில் ஜெயிச்சதுக்கே ஒரு கட்டு சர்டிபிகேட் வச்சிருக்கான். அழகில் குறைச்சலா? அறிவில் குறைச்சலா?'' என்பாள். அப்பா மௌனமாகி விடுவார்.

அதெல்லாம் அந்தக் காலம். ரேஷன் அரிசி கூட விலை கூடி விட்டது. அப்பாவின் குறைந்த சம்பளம் எதற்கெல்லாம் ஈடு கொடுக்கும்? போஸ்டல் ஆர்டர், இண்டர்வ்யூ போக டிரஸ் அயர்ன் பண்ணுவது, சில சமயம் பஸ் சார்ஜ் எல்லாம் சேர்ந்து மாதம் நூறு ரூபாய் கூட ஆகி விடும். ஆரம்பத்தில் முகம் மலரக் கொடுத்த அம்மா, இப்போது சிடுசிடுக்கிறாள். ''சும்மா லைட் எரிக்காதே; கரண்ட் பில் அதிகமாகிறது; ரொம்ப நேரம் படிக்காதே'' என்று அடுக்கடுக்காய் உத்தரவுகள். நுரை பொங்க வரும் காப்பி நீர்த்துப் போய் விட்டது. குமார் மௌனமாய் ஜீரணித்தான்.

மனம் வெறுத்துப் போன சமயங்களில் அக்கா வீட்டுக்குப் போவான். அக்கா குழந்தையுடன் விளையாடினால் சற்று நிம்மதியாக இருக்கும்.

ஒருநாள் அக்கா தனியே அழைத்தாள். ''தம்பி, நீ ஒரு பிஸ்கெட் பாக்கெட் கூட வாங்காம கையை வீசிட்டு வர்றியாம். என் மாமியார் ஜாடையா சொல்லிக் காட்டறா. உன் அத்தானும் அந்த வெட்டி ஆபீசருக்கு இங்க என்ன வேலை அப்படிங்கறார்!'' என்றாள். அதன்பின் அக்கா வீட்டை மறந்தான்.

காலையில் விடியும்போதே அமர்க்களம்தான். அப்பா அவனைத் தான் வேலை பார்க்கும் அலுவலகத்திற்கு அழைத்துப் போகப் போகிறாராம். கம்பெனி எம்.டியிடம் அறிமுகப்படுத்தி, ஏதாவது வேலை போட்டுத் தரும்படி கேட்கப் போகிறாராம். அவன் ஷேவ் செய்ய உட்கார்ந்தான்.

''டேய். தாடி மீசையோட பரிதாபமாப் போனாத்தான்டா எம்.டிக்கு இரக்கம் வரும். உன்னை என்ன மாப்பிள்ளையா பார்க்கப் போறார்? சும்மா வா. இப்படி மடிப்புக் கலையாத டிரஸ் போடாதே. லட்சாதிபதி மகனாட்டம் இருக்கு. மாச சம்பளக்காரன் மகனாட்டம் வா. உன் சர்டிபிகேட் எல்லாம் ஃபைலில் வைக்காதே. ஜவுளிக் கடை மஞ்சள் பையில் வச்சுக்க.''

ஆயிரம் உத்தரவுகள்; அறிவுரைகள். குமார் வாயே திறக்கவில்லை.

எம்.டி. அறை பிரமாதமாக இருந்தது. ஒரு பெரிய கல்யாணத்துக்கு ஆகும் செலவு அவரது அறையை அலங்காரம் செய்ய ஆகியிருக்க வேண்டும். அப்பாவும், மகனும் எம்.டியின் முன்பு சற்று நேரம் நின்றபின்பே அவர் நிமிர்ந்தார். பைல்களை ஒதுக்கி விட்டு, ''என்னய்யா இந்த பையன் தான் உன் மகனா?'' என்றார்.

அப்பா கூனிக்குறுகி குடும்ப நிலைமை, பணக் கஷ்டம், பையனின் படிப்பு எல்லாவற்றையும் பரிதாபமான குரலில் சொல்லி முடித்தார். குமார் நீட்டிய சர்ட்டிபிகேட்டுகளை மேலோட்டமாகப் பார்த்து விட்டு திருப்பிக் கொடுத்த எம்.டி. போகலாம் என்று தலையசைத்தார்.

வெளியே வந்து, ''சரி, நீ வீட்டுக்குப் போ. நான் சாயங்காலம் என்ன ஏதுன்னு தெரிஞ்சுக்கிட்டு வரேன். நான் அவரிடம் பேசும் போது நீயும் நடுநடுவே நம் கஷ்டத்தை பற்றிச் சொல்ல வேண்டியதுதானே. வாயில் என்ன கிடக்கு?'' என்று திட்டிய படியே அப்பா அவனை அனுப்பி விட்டார்.

வீட்டில் போய் அவசரமாய்ப் பார்க்க வேண்டிய வேலை என்ன இருக்கிறது? பஸ்ஸுக்குக் காத்திராமல் நடக்கலானான் குமார். சர்ரென்று ரோட்டை தேய்த்துக் கொண்டு அவனை உரசியபடி வந்து நின்றது மோட்டார் பைக். திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

''என்னடா குமார்? என்னைத் தெரியவில்லையா? நான்தான் சேகர். கடைசி பெஞ்ச் சேகர்.'' பைக்காரன் கூலிங் கிளாஸை கழற்றி விட்டுச் சிரிக்கவும் சட்டென்று அடையாளம் பிடிபட்டு விட்டது.

''ஓ. சேகரா! எப்படிடா இருக்கே?'' - கேள்விக்கே அவசியமில்லை. வயிற்றைத் தொடும் புலிநக செயின். டாலடிக்கும் மோதிரங்கள். செண்ட் விலையுயர்ந்த டிரஸ்.

''நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்கே? காலேஜிலே எல்லாத்திலும் முதல் ராங்க். ஸ்போர்ட்ஸில் ஏகப்பட்ட கப். அப்பல்லாம் நீதானே ஹீரோ.''

''அதெல்லாம் அந்தக் காலம். இப்போ வெறும் ஜீரோ. வேலையில்லாப் பட்டதாரி.''

சேகர் பைக்கிலிருந்து இறங்கி, நண்பனை அணைத்துக் கொண்டான். ''முதலில் ஹோட்டலுக்கு வா. சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்.''

சேகர் ஒரு கட்சித் தலைவரிடம் பி.ஏ வாக இருக்கிறானாம். வெகு அலட்சியமாகப் பேசினான். ''எல்லாம் நம் கையில் தான்டா இருக்கு. இப்ப நீ என்ன செய்யறே தெரியுமா? நாளைக்குக் காலையில் என் கூட மெட்ராஸ் வர்றே. தலைவரைப் பார்த்து உனக்காக என்ன சொல்லணுமோ அதைச் சொல்றேன். எப்படியாவது ஒரு நல்ல வேலை வாங்கித் தரேன்.''



சேகர் கிளம்பும் போது, "இந்தா, என் விசிட்டிங் கார்டு. நாளைக்குக் காலையில் ஸ்டேஷனுக்கு வந்து விடு. அப்படியில் லேன்னா மெட்ராஸ் வந்தாலும் இந்தக் கார்டை யாரிடம் காண்பித்தாலும் உன்னை ரொம்ப மரியாதையோடு என் பங்களாவில் கொண்டு வந்து விட்டு விடுவார்கள். வரட்டுமா!"

மின்னல் வெட்டிய மாதிரி இருந்தது. அந்தக் கணத்தில் குமாருக்கு உலகமே வெறுத்துப் போனது.

முதன் முதலாய் மனதில் ஒரு விஷ விதை முளை விட்டது. நல்லவனாய் இருந்து வாழ்ந்து என்ன பயன்? நேர்மை யாய் இருந்து இதுவரை கண்ட பலன்தான் என்ன? உடனடியாய் எந்த வழியிலாவது பணம் சம்பாதிக்க வேண்டும். நாலு பேர் மதிக்கும்படியாய்ப் பணக்காரனாக வாழ்ந்து காண்பிக்க வேண்டும். மனசு இறுகிப் போக வீடு வந்து சேர்ந்தான் குமார்.

எம். டி. என்ன முடிவு சொல்லியிருப் பார்? அப்பா என்ன சொல்லப் போகிறார் என்ற எதிர்பார்ப்போடு காத்திருந்தான். இரவு பத்து மணிக்கு அப்பா வந்தார். எம்.டிக்கு இருபத்தைந்தாயிரம் வேண்டு மாம். பணம் வந்த மறு நிமிடமே அப்பா யிண்ட்மெண்ட் ஆர்டர் கைக்குக் கிடைத்து விடுமாம். வெளியாரிடம் நாற்பதாயிரம் வாங்குவாராம். ஆபீசிலேயே வேலை பார்ப்பதால் அப்பாவுக்காக இந்தச் சலுகை! அப்பா கொதித்துப் போய் புலம்பித் தீர்த் தார். வெளியே காட்ட முடியாத கோபத்தை யெல்லாம் இவன் மீது கொட்டினார்.

மறுநாள் காலையிலேயே அம்மா விடம் சொல்லி விட்டு சேகரைப் பார்க்க ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் விட்டான் குமார். கட்சித் தலைவரைப் போய்ப் பார்த் தார்கள். அரைமணி நேரம் அழகாய்ப் பேசி னார். சேகரைத் தனியே அழைத்துப் பேசி னார். பிறகு சேகர் குமாரிடம் பெரிய பட்டிய லைக் காண்பித்தான்.

"ஐம்பதாயிரம் முதல் பத்தாயிரம் வரை ரேட். வருமானம் அதிகமுள்ள டிபார்ட் மெண்ட்டில் வேலை வேண்டுமென்றால் ஐம்பதாயிரம். சம்பளம் மட்டும் கிடைக்கும் வேலைக்குப் பத்தாயிரம். தலைவர் உனக் காக ஒரு சலுகை தருகிறார். அதாவது முத லில் பாதிப் பணம் கொடு. அப்பாயிண்ட் மெண்ட் ஆர்டர் கிடைத்த பிறகு மீதிப் பணம் தந்தால் போதும். பணம் கொடுத்த பத்தே நாளில் வேலை. இதெல்லாம் வேண்டா மென்றால் என்னுடன் தங்கி விடு. 'கட்சிப் பணி', 'பொதுப் பணி...' இதிலெல்லாம் தாராளமாய்ப் பணம் கிடைக்கும். ஐ.ஏ. எஸ். ஆபீசர் கூட ஒரு போன் போட்டால் நம்மைத் தேடி ஓடி வருவார். என்ன சொல்றே?"

"ம். நான் ஊருக்குப் போய் அப்பா விடம் கேட்டு முடிவு சொல்றேனே!" என்ற குமார் ரயிலேறி விட்டான்.

ஊரில் அப்பா தன் நண்பர் ஒருவரிடம் சொல்லி ஜவுளிக் கடையில் வேலைக்கு ஏற்பாடு பண்ணியிருந்தார். "பெரிய படிப் பெல்லாம் படித்து விட்டுத் துணி கிழிக்க ணும்னு உன் தலையில் எழுதியிருக்கு!" என்று பொருமியபடி அம்மா வேலைக்கு அனுப்பி வைத்தாள்.


ஞாயிற்றுக் கிழமை லீவு என்பதால் புத்தகக் கடையில் போய்ப் புரட்டிக் கொண் டிருந்தான் குமார். எல்லாப் புத்தகங்களும் வாங்க ஆசைதான். பணமில்லை. ஒரே ஒரு புத்தகம்தான் வாங்கினான். "தம்பி. என் பெயர் செல்வராஜ். நீங்க ஜவுளிக் கடையில் சேல்ஸ்மேனாக இருக்கீங்க இல்ல! இந்த மாதிரி புத்தகமெல்லாம் வாங்கறீங்களே, யாருக்கு?"

இவனை நெடுநேரம் கவனித்திருக்க வேண்டும் அவர். அறிமுகம் தொடங்கியது.

"நான் சொந்தமாகக் கம்பெனி நடத்த றேன் தம்பி. என்ன அக்கிரமம் பாரேன். உன் அறிவுக்கும், படிப்புக்கும் நீ எங்கோ இருக்க வேண்டியவன். இந்த நாட்டில்தான் இப்படி யெல்லாம் நடக்கும். இந்த அரசியல்வாதி கள்தான் இதற்கெல்லாம் காரணம். இதை இப்படியே விடலாமா? இவர்களையெல் லாம் பழிவாங்க வேண்டாமா?" இதே ரீதி யில் இன்னும் பேசினார். குமாரைத் தம் வீட்டுக்கு வரவழைத்து உபதேசம் செய்தார்.

குமார் கொஞ்சம் கொஞ்சமாக மாறி னான். "நீங்க சொல்றது ரொம்ப கரெக்ட் சார். விதியை நொந்து கொண்டு காலம் கழிப்பதில் அர்த்தமேயில்லை. என் அறிவுக் கும் படிப்புக்கும் சரியான மதிப்புக் கொடுக் காத இந்த நாட்டை, சமுதாயத்தை சும்மா விடக் கூடாது. இந்த அறிவும், திறமையும் எப்படிப்பட்டது என்பதை இவர்களுக்குக் காட்டியே தீரணும்."

"அப்படிச் சொல்லு தம்பி. உன்னை மாதிரி புறக்கணிக்கப்பட்ட இளைஞர்களை எல்லாம் ஒன்று சேர்த்து நான் ஓர் இயக்கம்



"அதை ஏன் சார் கேட்கறீங்க? என் போதாத வேளை. எல்லாரையும் 'சகஜமா' கேட்கிற மாதிரி பேட்டை ரவுடிட்ட போய், 'நம்பள கவனிக்கவே மாட்டேங்கறீங்க'ன்னு கேட்டுட்டேன்...!"

– ஆர். வசந்தகுமார்

''கண்டிப்பாச் சேர்றேன் சார். உங்களை மாதிரி வழிகாட்டறவங்க இருக்கும் போது எங்களுக்கெல்லாம் கவலையே கிடையாது.''

''அப்புறமென்ன? ஜவுளிக் கடை வேலையை விட்டு விடு. என் இயக்கத்தில் உன்னைச் சேர்த்தாச்சு. இந்தா. இதில் ஐந்தாயிரம் இருக்கு. தாராளமாச் செலவு பண்ணு. ஒரு பத்து நாள் டயம் தர்றேன். இந்தப் புத்தகங்களையெல்லாம் நல்லாப் படிச்சு மனத்தில் பதிய வச்சுக்கோ. பெரிய கம்பெனியில் வேலை கிடைத்து விட்டது; சம்பளம் மூவாயிரம் என்று உன் அப்பாவிடம் சொல்லி விடு. வெளியூர் வேலை என்று சொல்லணும். என்னைப் பத்திச் சொல்ல வேண்டாம். புத்தகங்கள் யார் கண்ணிலும் படக் கூடாது. கரெக்டா பத்து நாள் கழித்து வந்து விடு.''

செல்வராஜ் விடைகொடுத்தார். புத்தம் புதிய சலவை நோட்டுகளின் மணம் நாசியை நிறைக்க குமார் எங்கேயோ பறந்தான்.

பணத்தைப் பார்த்ததும் அப்பா முழுவதுமாக மாறிப் போனார். ''நான் எரிச்சலில் திட்டியதையெல்லாம் மனசில் வச்சுக்காதே. திறமையா வேலை பார்த்து முன்னேறப் பாரு. முதலாளி மனம் கோணாமல் நடந்துக்க!'' என்றார்.

அம்மா ஒரு படி மேலே போனாள். ''எனக்கு அப்பவே தெரியும். என் புள்ளை அறிவுக்கும், திறமைக்கும் பெரிய வேலை கிடைக்கும்னு. காலா காலத்தில் ஒரு மருமக வரணும். நான் பேரப் பிள்ளையைக் கொஞ்சணும்.''

அம்மா மூலம் விஷயம் தெரிந்து அக்காவும், அத்தானும் வந்தார்கள். ''தம்பி, பெரிய வேலை கிடைச்சிருக்காமேடா. எங்களையெல்லாம் மறந்து விடாதே. நீயும் பொறுமையா அலைஞ்சதுக்குக் கடைசியில் கடவுள் கண் திறந்தார். உன் அத்தான் வழியில் சொந்தக்காரப் பெண் ஒண்ணு இருக்கு. நீ வந்து பாரு. பிடிச்சிருந்தா முடித்து விடலாம். முப்பது பவுன் நகை, இருபதாயிரம் ரொக்கம், பெரிய வீடு எல்லாம் கிடைக்கும். விட்டு விடக் கூடாது. என்ன நான் சொல்றது?'' அக்கா நீளமாய்ப் பேசிக் கொண்டே போக, அத்தானும் அவர் பங்குக்குப் பாசம் காட்டினார்.

அதுவரை ஏறெடுத்தும் பாராத எதிர் வீட்டுப் பெரியவர் வலிய வந்து பேசினார். அவர் பெண் வெட்கச் சிரிப்புடன் இவன் முன் நடந்து போனாள். பணம், அது மனிதர்களை என்ன மாதிரியெல்லாம் பாடாய்ப் படுத்துகிறது. இதில் பெற்றவர் என்ன மற்றவர் என்ன?

குமார், செல்வராஜ் கொடுத்த புத்தகங்களைப் புரட்டினான். மந்திரிமார்களின் பொதுக் கூட்ட மேடைகளைத் தகர்க்கக் குண்டு வைத்தல், ரெயில்களைக் கவிழ்க்க பாலத்தில் குண்டு வைத்தல், தீவிரவாதிகளுக்கான பயிற்சி முகாம்களுக்கு விசேஷ தகவல் சாதனங்கள் தயாரித்தல், நாசகாரச் செயல்களில் ஈடுபட்டுத் தப்பிக்கும் முறை அனைத்தும் விவரமாகச் சொல்லப்பட்டிருந்தன. ஒவ்வொரு செயலுக்கும் அதன் நாசத்துக்குத் தகுந்த அளவு பணம் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பும் இணைக்கப்பட்டிருந்தது.

குமார் அனைத்தையும் கவனமாகப் படித்தான். பிறகு காற்றாடச் சற்று வெளியே போனான்.


தற்செயலாக அவனது அறைக்குள் நுழைந்த அப்பா மேசை மேல் கவிழ்ந்து கிடந்த புத்தகத்தைப் பார்த்தார். ஒவ்வொன்றாக எடுத்துப் படித்தவர் அதிர்ந்து போனார். 'அடப்பாவி. பயங்கரவாத கும்பலில் சேர்ந்து விட்டானா? ஓகோ. அதனால் தான் இப்படிப் பணம் புரளுகிறதா!'

அப்போதுதான் உள்ளே நுழைந்தான் குமார். பாய்ந்து ஓடி அறைந்தார் அவனை. ''டேய். இதெல்லாம் என்னடா? நாட்டுக்குத் துரோகம் பண்றியா? உன்னை... உன்னை...'' பேச்சு வராமல் தொண்டை அடைத்தது.

குமார் நிதானமாக அவரை விலக்கினான். ''அப்பா. நான் இந்த நிலைக்கு வரக் காரணம் என்னன்னு கொஞ்சம் யோசிங்க. அப்போ புரியும். இதைப் பார்த்தீங்களா?'' கையிலிருந்த செய்தித்தாளை அவர் முன் வீசிக் காட்டிப் படித்தான்.

''தீவிரவாதிகளுக்கு அரசாங்கம் அழைப்பு. சரணடையும் தீவிரவாதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படும். அவர்களது கல்வித் தகுதிக்கேற்ற வேலையும் கொடுக்கப்படும். அவர்களின் நல்வாழ்விற்கு எல்லா உதவிகளும் செய்யப்படும். நேர்மையா நடந்தா இந்த நாட்டில் வேலை கிடைக்காது. தீவிரவாதியாக மாறிக் குற்றம் செய்து சரணடைஞ்சா, உடனே வேலை கிடைக்கும். எப்படி இருக்கு? எனக்குத் தேவை வேலை. அதுக்கு ஒரு வழி கிடைச்சிருக்கு.''

அப்பா பிரமித்து நிற்க, குமார் வெளியேறினான்.




''உங்க பெரிய பையன் என்ன பண்றான்?''
''M. Sc. முடிச்சுட்டு சும்மா இருக்கான்.''
''சின்ன பையன்?''
''சும்மா இருக்கிறதுக்காக M. Sc. படிக்கறான்.''

– எஸ். ஸ்ரீராம்

பெங்களூர் ரிப்போர்ட்

சந்திரசேகர்–வி.பி.சிங் இணைகிறார்கள்!



கர்நாடக ஜனதா தளம் பிளவுபட்டு விடும் என்ற நிலைமையில் திடீரென்று ஒரு மாறுதல். எக்காரணம் கொண்டும் ஹெக்டேவைத் தனியே போக விட்டு விடக் கூடாது என்று பொம்மை எடுத்த முயற்சிக்குப் பலன் கிடைத்திருக்கிறது. ஜனதாதளத் தலைவர் பொம்மையும் சமாஜ்வாடி ஜனதாத் தலைவர் தேவேகௌடாவும் இணைந்து ஹெக்டேவைச் சந்தித்து சமாதானப்படுத்தி விட்டனர். அத்துடன் நில்லாமல் அகில இந்திய ரீதியில் வி.பி.சிங்கின் ஜனதாத்தளத்தையும் சந்திரசேகரைத் தலைவராகக் கொண்ட சமாஜ்வாடி ஜனதாவையும் இணைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றியும் பேசி முடித்திருக்கின்றனர்! இதன் முதல் கட்டமாக ஜனதாதளமும் எஸ்.ஜே.பியும் கர்நாடக மாநிலத்தில் மார்ச் பத்தாம் தேதியன்று இணைந்து விடப் போகின்றன! அது சரி, சந்திரசேகருடன் ஏற்படும் இந்தப் புதிய உறவு தேசிய முன்னணியில் தி.மு.க.வின் நிலையைப் பாதிக்காதோ!

எஸ். எம். கிருஷ்ணா முதல்வராக வர முயற்சி செய்து கொண்டிருந்தவர். நரசிம்மராவின் முழு ஆதரவு எப்போதுமே கிருஷ்ணாவுக்குத்தான் உண்டு. எம்.எல்.ஏக்களின் பெருவாரியான ஆதரவு மொய்லிக்கு இருந்ததால் நரசிம்மராவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் கிருஷ்ணாவைத் துணை முதல்வராக நியமிக்கும்படி ராவிடமிருந்து அழுத்தம் வரவே, மொய்லியும் ஒப்புக் கொண்டார். இப்போது மற்ற சீனியர் அமைச்சர்களை விடவும் தமக்குக் கூடுதல் அதிகாரங்கள் வேண்டும் என்ற ரீதியில் கேட்க ஆரம்பித்து விட்டார் கிருஷ்ணா. தமக்குத் தனியாக கேபினட் செகரெட்டரி ஒருவரை நியமிக்க வேண்டும் என்று மொய்லிக்குக் கடிதம் எழுதியதாகவும் மொய்லி மறுத்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் திடீரென்று பங்காரப்பாவைப் போய் வீட்டில் சந்தித்து, அவருடன் விருந்து சாப்பிட்டிருக்கிறார் கிருஷ்ணா!

பங்காரப்பாவைக் கிருஷ்ணா சந்திப்பதற்கு முந்தைய தினம் பங்காரப்பாவின் ஆதரவாளர்கள் கூட்டம் அசோகா ஓட்டலில் நடந்தது. எம்.எல்.ஏக்களும் எம்.பிக்களுமாக 71 பேர் கலந்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. மந்திரி பதவி எதிர்பார்த்துக் கிடைக்காமல் ஏமாந்தவர்களின் கூட்டம்தான் இது. மொய்லிக்கு எதிராகப்

போர் தொடுப்பது எனவும் கூட்டத்தில் முடிவாயிற்றாம். அரசியல் இவ்வாறு அசிங்கப்பட்டுக் கொண்டு வருவதைப் பார்க்க 'ஆளுங்கட்சி எம்.எல்.ஏக்கள் அத்தனை பேருமே அமைச்சர்கள்தாம்' - என்று இந்தியா முழுவதற்குமாக ஒரு புதிய சட்டத்தைப் போட்டு விடலாம் போலிருக்கிறது!

கர்நாடக ஜனதாதளத் தலைவர் களில் ஒருவர் முன்னாள் அமைச்சர் டி.பி. சந்திரேகௌடா. அதற்கும் முன்னால் சிக்மகளூர் தொகுதியின் எம்.பி.யாக இருந்தவர். இந்திரா காந்தி சிக்மகளூரில் நின்ற போது அவருக்காக ராஜினாமா செய்து தொகுதியை விட்டுக் கொடுத்தவர். அத்துடன் நில்லாமல் அந்தத் தொகுதி யில் இந்திரா காந்தி ஜெயிப்பதற்கும் காரணமாயிருந்தவர். சரி... அதற்கென்ன வந்தது இப்போது? இந்திரா காந்தியின் தோழியான புபுல்ஜெயகர் இந்திரா காந்தியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார். 295 ரூபாய் விலையுள்ள இந்தப் புத்தகத்தில் சந்திரேகௌடா பெயர் வர வேண்டிய இடங்களில் எல்லாம் தேவேகௌடாவின் பெயர் வந்துள்ளது! ''நான் கோர்ட்டுக்குப் போகப் போகிறேன்'' - என்று அறிவித்திருக்கிறார் சந்திரேகௌடா.

மைசூர் யூனிவர்ஸிடி, அதனுடைய 76-ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விழாவில் முதல்வர் வீரப்பமொய்லிக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப் போவதாக அறிவித்தது. 'சே, வழக்கம் போல இந்த அரசியல்வாதிங்க தங்களுடைய வேலையை ஆரம்பிச்சுட்டாங்க' - என்ற முணு முணுப்பு கிளம்ப ஆரம்பித்தது. கர்நாடக பிரகதிரங்கா தலைவர் பல்கலைக் கழகத்தைக் கண்டித்து அறிக்கை விட்டார். சட்டசபையிலும் பிரச்னை கிளம்பியது. உடனே எழுந்தார் மொய்லி. ''இது எனக்குத் தெரியாமல் நடந்திருக்கிறது. எனக்கு இதுபோன்ற பட்டங்கள் வேண்டாம். நான் டாக்டர் பட்டம் வாங்கிக் கொள்ளப் போவதில்லை'' என்று தீர்மானமாய்ச் சொல்லி விட்டார். இப்படிக் கௌரவமாக நடந்து கொண்டதற்காகவே அவருக்கு ஒரு கௌரவ டாக்டர் பட்டம் தரலாம் என்றுதான் தோன்றுகிறது!

- பெர்னாண்டஸ்



ஏழை ஜாதி

இரண்டே வார்த்தையில் கதையைச் சொல்லலாம். அரசியல் சாடல். என்னதான், 'இது எதையும், யாரையும் குறிப்பிடு வதல்ல' என்று ஆரம்பத்தில் ஸ்லைடு காட்டினாலும், சமீப கால அரசியல் ஜீவிகள் பலர் ஃபிரேமுக்கு ஃபிரேம் ஞாபகத்துக்கு வருவது தவிர்க்கக்கூடியதாக இல்லை. அதுவும் அந்தக் கடைசி சீனில், கழுத்தளவு விஜயகாந்த் பால்கனியிலிருந்து கைகூப்புவ தெல்லாம்.... ரொம்ப ரொம்பக் குறும்பு!

சமீபத்திய தோல்விகளுக்குப் பிறகு மீண்டும் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளும் 70 எம் எம் உத்வேகத்தில் ஆக்ரோஷகாந்த். அதனால் கச்சாமுச்சாவென்று நொடிக் கொரு சண்டை. ஒரு குட்டித் தூக்கம் போட்டு எழுந்திருக்கும் அளவுக்கு அவற் றின் நீளம்.

'அடடே, ஜெயப்ரதா!' (வயது கொஞ்சம் கூடினாலும் கண்களில் குறையாத கவர்ச்சி) என்று நிமிர்ந்து உட்கார்ந்தால் - அநியாயத்துக்கு வேஸ்ட் பண்ணியிருக் கிறார்கள். நடிகை-கம்-எம்.பி. ரோலில். (புரிகிறதா?) ஒரு தடவை கனவு காண்கிறார். ஒரு தடவை வெட்கப்படுகிறார். ஊர்வல சீனில் மெட்ராஸ் முழுக்க காலால் அளக் கிறார்.

நீ.........ள நீள வியாகத் அலிகான் வசனங்கள். படம், ஏழை ஜாதியா, பரா சக்தியா என்கிற சந்தேகம் அவ்வப்போது ஏற்படாமல் இல்லை.

பாராட்டியே தீர வேண்டியது கேமரா மேன் ராஜராஜனை. சிற்சில 'ஷாட்'களில் ஹாலிவுட்ராஜன்.

இசை இனிமை ராஜா. ஏதோ ஒரு பாடலில் பழைய வாலி தென்படுகிறார்.

என்னதான் அரைத்த மாவு என்றாலும் அநாவசிய காதல் சமாசாரங்கள் இல்லை, அபத்த காமெடி டிராக் இல்லை. என்ன, கொஞ்சம் ஜவ்வைக் குறைத்திருக்கலாம்.

- ஆர்.பி.ஆர்.

தந்தை மகற்காற்றும் நன்றி.

சோம. வள்ளியப்பன்

"அப்... அப்பா... எங்கப்பா...? சலவை வேட்டியெல்லாம் கட்டிக்கிட்டு... கோவிலுக்கா? நானும் வர்றேம்ப்பா..."

"நவுரு... நவுரு... இங்க வா சுந்தரி... இவனைப் பாரு வாழைப்பழம் தின்னுட்டு அந்தக் கையோட வேட்டியத் தொட வர்றான்..." நகர்ந்து நகர்ந்து ஒதுங்கினான். அவனுடைய மேஜை மேலிருந்த 'பேச்சை' எடுத்து மனதுக்குள் வாசிக்க ஆரம்பித்தான்.

"கோவிலுக்கில்லடா. அப்பா வேற இடத்துக்குப் போறார்."

"எங்கன்னுதான் சொல்லேன்!"

"அப்பா பேசப் போறார்றா..."

"பேசவா?"

"அம்மாவைக் கேட்காதடா. அவளுக்கு என்ன தெரியும்...? இங்க வா. அப்பா இன்னைக்கு அமைச்சர் கலந்துக்குற விழாவில பேசப் போறேன். பொங்கல் விழாவையும் திருவள்ளுவர் விழாவையும் இணைக்க... தமிழ்டா... சுந்தரத் தமிழ்.. அவளுக்கு என்ன தெரியும்...?"

"கிளம்புகிறேன்" என்று சொல்லி விட்டு, மாடியிலிருந்து கீழே படிகளில் இறங்கிய போது, கீழே கீழ் வீட்டுப் பாண்டுரங்கன்.

"எங்க சார்...? ஜோரா கிளம்பிட்டீங்க..."

"நம்ம மக்கள் மன்றத்தில கல்வி அமைச்சர் பேசறார்ல... அதுல பேசணுமின்னு வாங்க. சரின்னேன். அதான்..." என்று சொன்ன குணசேரகனுக்குப் பெருமையாக இருந்தது. கீழ் வீட்டுப் பாண்டுரங்கனும் இருக்கிறானே... ஹூம்... பதில் சொல்லி விட்டுத் தன் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டு சந்தனப் பவுடர் வாசனையோடு மன்றத்து வாசலில் வண்டியை நிறுத்தினான்.

"என்ன அரேஞ்ச் பண்ணானுவ... பேச வரச் சொல்லிட்டு, வழி காண்பிக்கக் கூட வாசல்ல ஒருத்தனையும் காணோம்..." மதர்ப்பாய் நடந்தான் உள்ளே. ஹால் முக்கால் வாசி நிரம்பியிருந்தது.

'அதோ இராஜேந்திரன்... சில்க் ஜிப்பாவும் வேஷ்டியுமாய். நாம கூட அது மாதிரி ஒண்ணு வச்சுக்கணும். வரட்டும். கண்ணுல படுற மாதிரி, நிற்போம். அவனே கவனிச்சுக் கூப்பிடட்டும்...'

"வாங்க சார்... வாங்க குணசேகரன். கரெக்டா வந்திட்டீங்களே. அமைச்சர் வந்தாச்சு. சங்கத்திலதான் தங்கறார். குளிச்சிட்டு வந்திடுவார். சரியா ஆறரைக்கு ஆரம்பிச்சடலாம். இதோ... வந்திடுறேன்" என்று சொல்லி விட்டு ஓடினார்.

குணசேகரன் வெளிப்பக்கம் போய் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். கையிலிருந்த பேச்சை மீண்டும் ஒரு நோட்டம் விட்டான். பத்து நாளாய்த் தேடித் தேடி தயாரித்தது. அசத்திட மாட்டேன் இன்னிக்கு!

திடீரென்று வாசலில் பரபரப்பு. 'வந்திட்டார் போல'. சிகரெட்டைக் கீழே போட்டு செருப்புக் காலால் தேய்த்து விட்டு மேடையருகே போனான்.

இரு கரங்களையும் கூப்பியவாறே மெல்லிய புன்னகையுடன் சற்று மினுமினுப்பாய் அமைச்சர். அவரை நெருங்கி அடித்துக் கொண்டு ஒரு ஜால்ராக் கூட்டம்!

பரபரப்பு ஓய்ந்து அனைவரும் மேடையில் அமர்ந்தாயிற்று. அமைச்சருக்கருகில் அமரப் போன குணசேகரனை அடுத்த நாற்காலிக்குத் தள்ளி விட்டு, ராமநாதன், அமைச்சர் அருகில் அமர்ந்து கொண்டான். 'அலையறானுவ அல்பனுங்க.' ஒரு நாற்காலி தள்ளி அமர்ந்து கொண்டான் குணசேகர்.

நிகழ்ச்சி நிரல் தரப்பட்டது. வரவேற்புரை செயலாளர் இராஜேந்திரன். இரு பெரும் விழா பற்றிக் குணசேகரன். சிறப்புரை கல்வி அமைச்சர். பின்பு திருக்குறள் மற்றும் பொங்கல் விழாப் போட்டிகளின் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு அமைச்சர் பரிசு வழங்குதல்.

தாவணி போட்ட இரண்டு மாணவிகள் 'நீராடும் கடலுடுத்த...' என்று தமிழ்த் தாயை வாழ்த்தினார்கள். செயலாளரின் வரவேற்புரையில் அவர் தன்னை எத்தனை

யாவதாக விளிக்கிறார் என்று உன்னிப்பாய்க் கவனித்தான் குணசேகரன்.


''அடுத்து திரு குணசேகரன் அவர்கள் பேசுவார்கள்.''

ஏற்ற இறக்கம்; அர்த்தமுள்ள இடைவெளி, கொஞ்சம் நகைச்சுவையென நன்றாகப் பேசினான் குணசேகரன். இடையிடையே அமைச்சர் கவனிக்கிறாரா என்னும் பார்த்துக் கொண்டான்.

பின்பு அமைச்சர் பேசினார். குணசேகரன் பேச்சை விட படு சுமார்தான். அதைத் தெரிந்து கொண்ட குணசேகரன் மனது சந்தோஷமடைந்தது. 'இவர் எப்படி மினிஸ்டராகியிருப்பார்...'

''இப்பொழுது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகளை வழங்குவார்கள்'' என்ற அறிவிப்பைத் தொடர்ந்து, ''திருக்குறள் ஒப்பிக்கும் போட்டியில் முதல் பரிசு முதல் வகுப்பு செல்வி மைதிலி'' என்று மாணவ - மாணவியர் அழைக்கப்பட்டனர். படபடவெனக் கைதட்டல். ஒரு சின்னப் பெண் மேடை ஏறியது. அமைச்சர் புத்தகக் கட்டும் சான்றிதழும் தர, போட்டோக்கள் 'கிளிக்'.

''அடுத்து... அடுத்து...'' என்று வரிசையாகப் பாட்டுப் போட்டி, ஓவியப் போட்டிகளுக்கான பரிசுகள் வகுப்புவாரியாக.



குழந்தைகளைப் போட்டோவுக்கு ஒழுங்காக நிற்க வைக்கும் சாக்கில் ராமதாஸ் அமைச்சருடன் ஒட்டிக் கொள்ள, குணசேகரனுக்கு எரிச்சலாய் இருந்தது.

"இறுதியாக மூன்று போட்டிகளிலும் பரிசுகள் வாங்கிய ரகுநாதனுக்கு, சிறப்புப் பரிசான வெள்ளிக் கோப்பையை அமைச்சர் அவர்கள் வழங்குவார்கள்."

அந்த நேரம் குணசேகரனும் அந்த போட்டோவில் விழும்படி இடம்பார்த்து நின்றான்!

விழா முடிந்தது. அமைச்சரும் அவர் கூட்டமும் நொடியில் பறந்தனர். குழந்தைகளுடன் பெற்றோர் கிளம்பிக் கொண்டிருக்க, மற்றொரு சிகரெட்டைப் பற்ற வைத்தபடி குணசேகரன் வெளியே வந்தான்.

எதிரில் மக்கள் மன்றத்து அட்டெண்டர் பையன் வந்தான்.

"என்னப்பா தாமஸ் என் பேச்சு எப்படி?"

"சூப்பர் சார். எல்லாத்துலயும் உங்க பேச்சுத்தான் சார் டாப்பு.." இப்பொழுது இன்னும் சிலர் சூழ்ந்து கொண்டார்கள். குணசேகரன் பேச்சைப் புகழ்ந்தார்கள். குணசேகரனுக்குப் பசிப்பது போலிருந்த நினைப்பு விடைகொடுத்து விட்டிருந்தது.

விழா முடிந்து முக்கால் மணி நேரத்திற்கும் மேலிருக்கும். குணசேகரன் வீட்டுக்குக் கிளம்பினான்.

முதல் தட்டலிலேயே கதவைத் திறந்தாள் சுந்தரி. ஹாலில் - தரையில் படுத்திருந்தான் மகன் பார்த்திபன். மௌனமாக உணவு பரிமாறப்பட்டது.

"என்ன நீ... அமைச்சர் பேசின விழாவில பேசிட்டு வர்றேன்.. எல்லாரும் பாராட்டுறாங்க, நீ என்னடான்னா ஒண்ணுமே கேட்க மாட்டேங்குறே...!"

ஆதங்கத்தைக் கேட்டே விட்டான்.

"பங்ஷன்தான் ஒன்பதரைக்கே முடிஞ்சிடுச்சாமே, நீங்க ஏன் வர பதினொன்னாயிடுச்சு?"

"ஒன்பதரைக்கே முடிஞ்சிடுச்சுன்னு உனக்கு யார் சொன்னது?"

"கீழ் வீட்டுப் பாண்டுரங்கன்தான் சொன்னார்."

"அவருக்கு எப்படித் தெரியுமாம்? மேடையில இருந்தாராமா?" குரலில் ஏளனம்.

"அவர் பையன் ரகுநாதனுக்குப் பரிசு கொடுத்தாங்களாம், அதுக்காக வந்திருந்தாராம்."

"என்ன பேரு சொன்னே? ரகுநாதனா...? மூணுலயும் பர்ஸ்ட் வந்தானே அவனா?"

"ஆமாங்க, அந்த புத்தகம், சர்டிபிகேட்டு, கப்பு எல்லாத்தையும் கீழே போய் நம்ம பையன் பார்த்திபன் ஏக்கமாப் பார்த்திட்டு வந்தானுங்க, அதான் சாப்பிடாமலேயே படுத்திட்டான்."

"ஏன், நீ சொல்ல வேண்டியதுதானே, எல்லாருக்கும் பரிசு குடுத்த மேடையிலேயே எங்கப்பா அமைச்சரோட இருந்தார்னு பெருமைப்பட்டுக்கறதை விட்டுட்டு..."

"நீங்க அமைச்சரோட மேடையில இருந்து பேசியதற்காக உங்க பையன் பெருமைப்பட்டுக்கலாமுங்க. வாஸ்தவம்தான். இந்த வயசுல அவனுக்கு அது புரியலைங்க. ஆனா தன் பையன் பரிசு வாங்கணுங்கறதுக்காக - அதைப் பார்த்துத் தான் பெருமைப்படணுங்கறதுக்காக ஒரு மாசமா அவனைத் தயார் பண்ணினாரே ரகுநாதனோட அப்பா... பாண்டுரங்கன்... அவருக்காக அவர் பையன் பெருமைப்படுவாங்க..."

அத்தனை பேர் பாராட்டும் உயரத்தில் பறந்து கொண்டிருந்த மனநிலையும் சட்டென விலக, அடுத்த வருடம் மக்கள் மன்றத்து மேடையில் தான் நிற்பதை விட தன் மகனை நிற்க வைப்பதே தன் கடமையென உறுதி கொண்டான்.



"ஆபீஸிலிருந்து நான் வந்ததும் வராததுமா ஏன் எங்கிட்டே சண்டைக்கு வர்றே?"

"இன்றைக்கு உங்க அம்மாகிட்டே சண்டையில் தோத்துட்டேன். உங்ககிட்டேயாவது சண்டை போட்டு ஜெயித்தால்தான் என் மனசு ஆறும்!"

- ஜா. ஜானமுத்து

"திடீர்னு 'நோ... நோ'ன்னு கத்திக்கிட்டு ஆபரேஷன் தியேட்டர்லேர்ந்து டாக்டர் ஓடறாரே?"

"ஆமாம்! ஆபரேஷன் சக்ஸஸ் ஆயிட்டதை அவரால் ஜீரணிக்க முடியலை, பாவம்!"

- எஸ். ரமேஷ்




எந்த **மதத்தையும்**

சாராத ஜீவன்களுக்கு உணவு அளித்து, அவைகளின் ஆசீர்வாதத்தை பெற்று, க்ஷேமம் அடையுங்கள்

1. காலையில் எழுந்தவுடன் **பசுவுக்கு** கீரை கொடுக்கவும்





2. வாசலில் அரிசிமாவால் கோலம் போட்டு **எறும்புகள், குருவிகளுக்கு** உணவு அளிக்கவும்.



3. நாம் உணவு உட்கொள்ளும் முன்பு **காக்காய்க்கு** உணவு அளிக்கவும்.



4. சாப்பிட்டப் பின் **நாய்க்கு** உணவு அளிக்கவும்.







இத்துடன் நல்லோர்களுக்கு கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி விநியோகம் செய்தால் நம் குடும்பம் க்ஷேமமடைந்து நாடு செழிக்கும்

திருமண வைபவங்களுக்கு:-
சீர்முறுக்கு, சீர் அதிரசம், முள்ளுத்தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால், அப்பம் முதலியன.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 600 020
போன்: 412557

சக்கரவர்த்தித் திருமகன்

26. வனம் சென்றனர்!

குமாரன் மரவுரி தரித்துக் கடைசியாகப் பேசியதைக் கேட்ட அரசன் மனமுடைந்து படுக்கையில் கிடந்தான். ராமனை நினைத்துக் கொண்டு அழுதான். பேச முடியவில்லை.

பேசுவதற்குக் கொஞ்சம் சக்தி வந்ததும், ''நான் எத்தனையோ கன்றுகளைக் கொன்று தாய்ப் பசுக்களை இம்சித்திருக்க வேண்டும். இல்லாவிடில் இந்தத் துக்கம் எனக்கு நேர்ந்திராது. மரணமும் நாம் வேண்டுகிறபோது நம் இஷ்டப் பிரகாரம் வராது. கைகேயினுடைய இம்சையை நான் அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது.

''அக்கினி தேவனைப் போல் எழில் கொண்ட என் மகன் தன் உடையைக் கழற்றி விட்டு மரவுரியைத் தரித்தான். நானும் பார்த்துக் கொண்டு உயிருடன் இருக்கிறேன்... ராம.... ராம... ராம... வனம் போய் விட்டாயா?'' என்று முணுமுணுத்துக் கொண்டு படுக்கையில் அரை நினைவாகக் கிடந்தான்.

பிறகு தெளிந்து. ''சுமந்திரனே, ரதம் கொண்டு வந்து குழந்தைகளையும் ஜானகியையும் ஏற்றிக் கொண்டு ராஜ்யத்து எல்லை வரையில் போ!'' என்றான்.

லக்ஷ்மணன் சுமித்திரா தேவியின் பாதங்களைத் தொட்டு வணங்கி, ''அம்மா!'' என்று சொல்லி, வேறு பேச்சில்லாமல் நின்றான்.

அவனைக் கட்டியணைத்துச் சுமித்திரை உச்சிமோந்து, ''நீ அண்ணன் பேரில் வைத்திருக்கும் அன்பே போதும், உன்னைப் பெற்றதின் பெரும் பாக்கியம் அடைந்து விட்டேன். குழந்தாய், ராமனைக் காப்பது உன் கடமை. வனத்தில் மிக ஜாக்கிரதையாக உன் அண்ணன் பக்கத்தில் எப்போதும் இருக்க வேண்டும். தம்பிக்கு அண்ணன் குருவும் அரசனுமேயாவான். இது நம் குலத்தின் தருமம். போய் வருவாய், லக்ஷ்மணா! காட்டில் ராமனே உனக்குத் தந்தை; ஜானகியே தாய்; இதை அறிவாய். வனத்தையே அயோத்தியாகப் பாவிப்பாய். சந்தோஷமாகப் போ, என் அன்புக்குரிய மகனே!'' என்றாள்.

ராமாயணக் கதையில் அதிகம் பேசாத மகாஞானி, எதையும் முதிர்ந்த அறிவுடன் சரியாக உணர்ந்து நடந்து கொள்ளுகிறவள் சுமித்திராதேவி. ராமனுடைய அவதார ரகசியம் சுமித்திரைக்குத் தெரிந்திருந்ததாகப் பெரியோர்கள் சொல்லுவார்கள். கௌசல்யா தேவியைப் போல் மகனைத் தடுத்துப் பேசாமல் ''போய் வருவாய்'' என்று சுமித்திரை தன் மகன் லக்ஷ்மணனுக்குத் தைரியமாகச் சொன்னாள்.

''ரதத்தில் ஏறுவாய் சக்கரவர்த்தித் திருமகனே! புகழின் சிகரமே! உனக்கு மங்களம். எங்கு செல்ல வேண்டுமோ, செல்லுவாய். உனக்கு மங்களம். பதினான்கு வருஷம் இப்பொழுதிலிருந்தே ஆரம்பமாகி விட்டது. ராஜகுமாரா!'' என்றான் சுமந்திரன்.



சீதை சிரிப்பும் சந்தோஷமுமாகத் தேரில் ஏறினாள். அவளுக்கு வேண்டிய துணிமணிகளையெல்லாம் மாமி கௌசல்யை கட்டிக் கொடுத்திருந்தாள். இரு சகோதரர்களுடைய கவசங்களும் ஆயுதங்களும் கிழங்கு தேடி வெட்டிக் கொள்வதற்கான குந்தாலியும் கூடையும் தேரில் வைக்கப்பட்டன. வனவாசத்துக்கு முக்கியமாகக் கூடையும் குந்தாலியும் வேண்டும்.

ராம லக்ஷ்மணர்களும் ஏறினார்கள். சுமந்திரன் தேரை ஓட்டினான்.

இந்தக் கட்டத்தில் கொஞ்சம் நின்று நாம் ஆண்டவனைத் தியானிக்கலாம். வனவாச ஆரம்பமாகிய இந்தப் புண்ணிய கட்டத்தில் நம்முடைய பாப எண்ணங்களை விலக்கித் தூய்மையடைய விரும்பிப் பிரார்த்திப்போமாக. சத்தியம், தீரம், அன்பு இவை ராமாயணத்திலிருந்து நாம் பெறும் பிரசாதம். அதற்காகவேதான் ராமாவதாரம். மரவுரி உடுத்திய சக்கரவர்த்தித் திருமகனையும் தம்பி லக்ஷ்மணனையும் ஜானகியையும் மனத்தில் நிறுத்தி ஆண்டவன் அருள் பிரசாதத்தைக் கேட்போமாக.

"இழுத்துப் பிடி, இழுத்துப் பிடி, சாரதியே! ரதத்தை மெள்ள ஓட்டு! ராமன் முகத்தையாவது நன்றாகப் பார்ப்போம்" என்று தெருவில் நின்ற ஜனங்கள் கத்தினார்கள்.

"ஐயோ, இப்பேர்ப்பட்ட புத்திரர்களைப் பெற்று விட்டு, காட்டுக்கு அனுப்புகிறார்களே! இவர்களைப் பெற்ற தாய்மார்களுடைய வயிறு எரியாதா? உயிர் நிற்குமா? பார்த்தாயா வைதேஹியை? இவளல்லவோ புண்ணியவதி! இந்த லக்ஷ்மணன் அல்லவோ

ராஜாஜி

பாக்கியவான்! இவனல்லவோ ஒரு தம்பி? தருமம் அறிந்த வீரன்!"

இப்படியெல்லாம் பேசிக் கொண்டு ரதத்தைத் தொடர்ந்து நகரத்து ஜனங்கள் ஓடினார்கள். அவர்களுடைய துக்கம் ஆறாகப் பெருகிற்று.

ஒரு பக்கம், "ரதத்தை வேகமாகச் செலுத்து" என்கிறான் ராமன். ஜனங்களோ, "மெள்ள மெள்ள!" என்கிறார்கள். கூட்டமோ மிகப் பெருங் கூட்டமாகப் போயிற்று.

எப்படியோ சமாளித்துக் கொண்டு சுமந்திரன் ரதத்தை அயோத்தியை விட்டு வெளியே செலுத்தினான். நகரம் துக்கத்தில் மூழ்கிற்று. ஒவ்வொரு வீட்டிலும் கண்ணீரும் உபவாசமும் நிந்தனையுமாக இருந்தது.

அரசன் அந்தப்புரத்தை விட்டு வெளியே வந்து ரதம் புறப்பட்டதைப் பார்த்துக் கொண்டு வெகு நேரம் நின்றான். தேர் கிளப்பிய தூசியையே ராமனாகப் பாவித்து அந்தத் தூசி கண்ணுக்குத் தெரியும் வரையில் பார்த்துக் கொண்டு நின்றான். அந்தத் தூசியும் மறைந்து போன பின் 'ஐயோ!' என்று கதறிக் கீழே விழுந்தான். ஒரு பக்கம் கௌசல்யையும் ஒரு பக்கம் கைகேயியும் இருந்தார்கள்.

தசரதன் கைகேயியைப் பார்த்துச் சொன்னான் : "பாவியே! என்னைத் தொடாதே. நெறி தவறியவளே, உன் முகத்தைப் பார்க்க எனக்கு வேண்டியிருக்கவில்லை. உனக்கும் எனக்கும் சம்பந்தம் அற்றது. உன்னை விட்டேன்! விட்டேன்!" என்றான்.

"பரதனும் இதற்குச் சம்மதித்து ராஜ்யத்தைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்



டானேயானால் எனக்காக அவன் நீர்க்கடன் செய்தாலும் அது என்னைச் சேராது'' என்றான்.

''ராமன் எவ்வாறு காட்டில் வசிப்பான்? கல்லோ கட்டையோ தலைக்கு வைத்துத் தரையிலா படுப்பான்? ஐயோ, அவன் எவ்வாறு கிழங்கும் காயும் உண்டு பிழைப்பான்?''

இப்படிப் பலவாறு பிரலாபித்தான். தானே நெருப்பில் கையைவைத்துக் கையைச் சுட்டுக் கொண்டு அழுவது போல் தசதரன் தானே செய்த காரியத்தின் முடிவை எண்ணி எண்ணிப் பிரலாபித்தான்.

''கைகேயி, நீ சுகமாக இரு. உன் காரியத்தை நடத்தி முடித்தாய் அல்லவா? விதவையாகிச் சந்தோஷமாக இரு!'' என்று அவளை நினைத்து நினைத்துக் கோபாவேசமானான். மயானத்தில் ஸ்நானம் செய்து திரும்பிய நிலையில் அந்தப்புரம் போய்ச் சேர்ந்தான்.

''இங்கே வேண்டாம். என்னைக் கௌசல்யை வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள்'' என்றான்.

அவ்வாறே செய்தார்கள். கௌசல்யா தேவியின் அந்தப்புரத்தில் தசரதன் பிரலாபித்துக் கொண்டு படுத்தான்.

நடு ராத்திரியில் ''கௌசல்யா, நீ இருக்கிறாயா? கைகளால் தொட்டுக் காட்டு. என் கண்களில் திருஷ்டி போய் விட்டது, ராமனுடன் போய் விட்டது'' என்றான்.

கௌசல்யா தேவியின் துக்கமோ, மிகப் பெரிது. தன் துக்கத்தையும் பொறுத்து அரசனுக்கு அவள் என்ன சமாதானம் சொல்ல முடியும்?

''இராத்திரி நேரங் கூட நடு மத்தியான வெய்யிலைப் போல் உடலைச் சுடுகிறதே'' என்று அவளும் அழுதாள்.

சுமித்திரை கௌசல்யைக்குச் சொன்னாள் : ''அக்கா! சாஸ்திரமும் தருமமும் தெரிந்த நீ ஏன் துக்கப்படுகிறாய்? மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய நீ இப்படித் தைரியம் இழக்கலாகாது. சத்தியத்துக்காக அல்லவோ ராமன் வனம் சென்றிருக்கிறான்? ராஜ்யத்தைத் துச்சமாக எண்ணித் தந்தையைச் சத்தியவான் ஆக்குவதே தன் கடமை என்று வனம் சென்ற தீரனை மகனாய்ப் பெற்ற நீயல்லவோ பாக்கியசாலி? கஷ்டமான தருமத்தைக் குறைவற நடத்திப் பயனடையும் உன் மகனைப் பற்றி நீ துக்கப் படலாமா? முன்னோர் வழியில் நடந்து அனந்தமான - முடிவில்லாத - புகழ் பெறும் ராமனைப் பற்றி நாம் துயரப் படலாகாது. லக்ஷ்மணனும் அவனுடன் சென்றானே என்று என் மகனைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன். வனவாசத்தின் கஷ்டங்களை நன்றாகத் தெரிந்தும் ஜானகி உன் மகனுடன் சென்றிருக்கிறாளே! ராமனுடைய கீர்த்தி மேலோங்கிப் பிரகாசித்து உலகமெல்லாம் ஒளி வீசும். நாம் துக்கப்படலாகாது. மகாத்மாவான உன் மகனுடைய பரிசுத்தமும் உத்தம குணங்களும் அவனுக்குப் பூரண கவசமும் காப்புமாகும். சூரியனுடைய வெய்யில் அவன் உடல்மேல் பட்டாலும் அது சுடாது. காற்றும் அவன் மேல் குளிர்ந்து வீசும். இரவில் தூங்கும் போது அவனுடைய புண்ணிய தேகத்தை சந்திரனுடைய கிரணங்கள், பெற்ற குழந்தையைத் தகப்பன் தழுவி ஆலிங்கனம் செய்வது போல், அவன் மேல் வீசிக் காப்பாற்றும். நம்முடைய வீரராகவனைப் பற்றி நீ கவலைப்படாதே! எந்தப் பகைவனும் அவனை எதிர்த்து உயிருடன் மீள முடியாது. நம்முடைய ராமன் சர்வ கல்யாண குணங்களும் பொருந்தியவன், சூரன். அவன் நிச்சயம் திரும்பி வந்து அயோத்தியாதிபதியாக சிம்மாசனம் ஏறுவான். லோகநாதனே ராமன். உன் மருமகள் சீதை அவனுடன் சென்றிருக்கிறாள். சீதை வேறு, லக்ஷ்மி வேறல்ல. திரும்பி வந்ததும் பூதேவியையும் ராமன் அடைவான். நீ சந்தேகப் படாதே. அவன் வனம் போவதைப் பார்த்த நகரத்து ஜனங்களுடைய அனுதாபத்தைப் பார்த்தாய். என் வீர மகன் வில்லும் கத்தியும் கையில் தாங்கி அவனைக் காக்கக் கூடவே போயிருக்கிறான். ராமனுக்கு ஒரு குறையோ பயமோ கிடையாது. செய்த பிரதிக்ஞையை முடித்து விட்டு அவன் திரும்பி வருவதை உன் கண்ணாலேயே பார்ப்பாய். சோகத்தை விடு, நான் சொல்லுவது சத்தியம். சந்திரனைப் போல் பூரண கலையுடன் திரும்பி வந்து உன் பாதங்களைத் தொட்டு வணங்கி நிற்பதைப் பார்ப்பாய். அப்போது உன் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகும். என் அன்புக்குரிய கௌசல்யே! துக்கம் வேண்டாம். மூவரும் திரும்பி வருவார்கள். துக்கப்படும் அந்தப்புரத்து ஜனங்களுக்கு ஆறுதலும் தைரியமும் நீ சொல்ல வேண்டும். அப்படியிருக்க நீயே மன

முடைந்து நிற்கிறாய், வேண்டாம். இந்த உலகத்தில் ராமனைப் போல் தரு மத்தில் உறுதியாய் நிற்பவன் வேறு யார்? அதைப் பற்றி நாம் துக்கப்பட லாமா? நீ பெருமைப்பட வேண்டும்.''

இவ்வாறு சுமித்திரை தேற்றினாள். சுமித்திரா தேவியின் தைரியமான வார்த் தைகளைக் கேட்டு கௌசல்யையின் துக்கம் ஓரளவு அகன்றது.


ராமனுடைய தேருடன் கூடவே நகரத்து ஜனங்கள் பெருங் கூட்டமாகத் தொடர்ந்து சென்றார்கள்.

''வனம் போக வேண்டாம். திரும் புங்கள்'' என்று ரதம் போவதைத் தடுத் துக் கொண்டு ஓடினார்கள்.

''தகப்பனாரைச் சத்திய சந்தராகச் செய்வதற்காக நான் வனம் போகிறேன். இதற்கு நீங்கள் துக்கப்படலாகாது. என்னை நிறுத்த வேண்டாம்'' என்று எவ்வளவு கேட்டுக் கொண்டும் அவர் கள் விடவில்லை, கூடவே சென்றார் கள். ராமன் பேரில் அவர்களுக்கிருந்த அளவற்ற பிரியத்தினால் என்ன சொல் லியும் ''வனம் போக வேண்டாம்! வனம் போக வேண்டாம்!'' என்று சொல்லிக் கொண்டு ரதத்தோடு ஓடி னார்கள்.

ராமன் ரதத்தை நிறுத்தி அன்பு நிறைந்த பார்வையுடன் அவர்களுக்குச் சொன்னான் :

''அயோத்தி நகரத்து மக்களே! என் மேல் நீங்கள் வைத்திருக்கும் பிரியமும் கௌரவமும் நான் அறிவேன். அதை யெல்லாம் நீங்கள் இனி பரதன் மேல் செலுத்த வேண்டும். அதுவே எனக்கும் திருப்தி தரும். சீலமும் சகல கல்யாண குணங்களும் பொருந்தியவன் பரதன். அவன் மனம் திருப்தியடையுமாறு நடந்து கொள்ளுங்கள். அவனுக்குச் செய்ய வேண்டியதையெல்லாம் சரி யாகச் செய்யுங்கள். அவன் வயதில் சிறியவனாக இருந்தாலும் ஞானத்தில் முதிர்ந்தவன். வீரமும் மென்மையும் இரண்டும் கலந்த சிரேஷ்டமான உள்ளம் பெற்றவன். உங்களை க்ஷேம மாகக் காப்பாற்றும் சக்தி அவனுக்கு உண்டு. அவனே உங்கள் நாதன். தகப் பன் சொல்லைச் சத்திய வாக்காகச் செய் வதற்கு நான் வனம் போகிறேன். பர தனை யுவராஜனாக அரசர் நியமித்திருக்



கிறார். அவன் அந்த பதவிக்குத் தகுந்த குணங்களைப் பெற்றவன். மகாராஜா விதித்தபடி நானும் நீங்களும் எல்லோரும் நடக்க வேண்டும். தந்தைக்கு உண்டாகும் துயரத்தைப் போக்க நீங்கள் எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும்.''

இப்படி ராமன் அவர்களுக்குப் புத்திமதியும் நல்ல வார்த்தையும் சொன்னான். ஆனால் அவர்களோ, ராமனுடைய வார்த்தைகளில் நிறைந்திருந்த தருமமும் நீதியும் அன்பும் கண்டு முன்னை விட அதிகமாகவே அவனை விரும்பினார்கள்.

சிரேஷ்ட குணம் பொருந்தியவர்களும் வயதில் மிக முதிர்ந்தவர்களுமான பிராமணர்கள் சிலர் வேகமாகப் போகும் தேரைப் பார்த்து, ''ஹே, குதிரைகாள்! ஏன் எங்கள் ராமனை வனம் கொண்டு போகிறீர்கள்? வேண்டாம்! குதிரைகளுக்கு ஓசைப்புலன் மிகக் கூர்மையானது என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். நாங்கள் சொல்லுவதைக் காதில் வாங்கி நின்று ராமனைத் திருப்பிக் கொண்டு வந்து எங்களிடம் விட்டு விடுவீர்களாக!'' என்று புலம்பினார்கள்.

இப்படி வயோதிக அந்தணர்கள் இறைஞ்சுவதைக் கண்டு ராமன் தேரை நிறுத்தினான். மூவரும் பிறகு தேரிலிருந்து இறங்கிக் காலால் நடந்து சென்றார்கள்.

பாமர ஜனங்களும் நகரத்து முக்கியஸ்தர்களும் ஞானமும் வயதும் விரதநியமங்களால் சித்தியும் அடைந்த அந்தணர்களும் அயோத்தியில் பறக்கும் பறவைகளுங்கூட ராமனை வனம் போக வேண்டாம் என்று வற்புறுத்தி வருவதைப் பார்த்து, தமஸா நதி குறுக்கே வந்து தடுத்தது போல் தோன்றியது. தமஸா நதிக் கரையில் தேர் நின்றது. சுமந்திரன் குதிரைகளை அவிழ்த்து விட்டுத் தண்ணீர் காட்டிப் புல் மேய விட்டான்.

''லக்ஷ்மணா! இதுவே நம்முடைய வனவாசத்தில் முதல் ராத்திரி. இந்த புண்ணிய நதிக் கரையில் இன்று தங்குவோம். வனவாசம் ஒன்றும் கஷ்டம் இல்லை. பார், வனத்திலுள்ள பக்ஷிகளும், மிருகங்களும் மரங்களுங்கூட நம்மிடம் அநுதாபம் காட்டுவது போல் சப்தமும் காட்சியும் அளிக்கின்றன. ஆனால் அயோத்தியையில் நம்முடைய பெற்றோர்களின் துயரை நினைத்தால் கஷ்டமாகத்தான் இருக்கிறது. பரதனுடைய குணங்களை நினைத்துத் தைரியம் அடைகிறேன். அவன் நம்முடைய பெற்றோர்களைப் பிரியமாகக் கவனித்துக் கொள்வான். சந்தேகமில்லை. சுமந்திரரே, குதிரைகளுக்கு வேண்டியதைச் செய்யவும்'' என்றான் ராமன்.

பிறகு நதியில் மாலை வந்தனங்கள் செய்து விட்டு ராமன், ''இன்று உபவாசமிருக்கலாம். இது நம்முடைய வனவாச ஆரம்ப ராத்திரி. லக்ஷ்மணா! நீ என்னுடன் இருக்கிறபடியால் எனக்கு ஒரு கவலையுமில்லாமலிருக்கிறது'' என்றான்.

ராமனுக்கும் சீதைக்கும் படுப்பதற்குப் புல் பரப்பி அமைத்துக் கொடுத்து, லக்ஷ்மணன் சுமந்திரனுடன் பேசிக் கொண்டே இரவைக் கழித்தான்; தூங்கவில்லை.

அதிகாலையில், விடிவதற்கு முன் ராமன் எழுந்திருந்து சுமந்திரனைப் பார்த்து, ''நகரத்து ஜனங்கள் ஆற்றங் கரையில் எங்கெங்கோ படுத்து ஓடி வந்த களைப்பினால் நன்றாகத் தூங்குகிறார்கள். எங்கள் பேரில் இவர்கள் வைத்திருக்கும் அன்பைப் பார்த்து எனக்குத் துக்கமாக இருக்கிறது. எப்படியாவது என்னை நிர்ப்பந்தித்துத் திருப்பி அழைத்துப் போவதே இவர்கள் எண்ணம். ஆகையால் நாம் இப்போதே கிளம்புவோம்'' என்றான்.

குதிரைகளைப் பூட்டி மெள்ள நதியைத் தாண்டி அக்கரை சேர்ந்தார்கள். அங்கே நின்று ராமன் சுமந்திரனுக்குச் சொன்னான் : ''தேரை மறுபடி ஜனங்கள் தூங்கும் அக்கரைக்குச் செலுத்தி, அங்கிருந்து அயோத்தியை நோக்கித் தேரைக் கொஞ்ச தூரம் ஓட்டிப் பிறகு தேரைத் திருப்பி இவ்விடம் ஓட்டி வந்தால் ஜனங்கள் விழிப்பதற்கு முன் நாம் ஏறிச் செல்வோம். தேரின் சுவடு பார்த்து நாம் நகரத்துக்குத் திரும்பிப் போய் விட்டதாக எண்ணி அவர்களும் ஊர் திரும்புவார்கள். இல்லாவிடில் இந்த ஜனக் கூட்டம் நம்மை விடாமல் பின் தொடர்ந்து வரும்'' என்றான்.

சுமந்திரனும் அப்படியே செய்தான். தேர் திரும்பி வந்ததும் மூவரும் ஏறித் தெற்கு முகமாகச் சென்றார்கள்.

(தொடரும்)

"இப்படி வரைந்தால் குறைந்தா போவீர்கள்!"

◆ 'முதல்வர் உரை : மாபெரும் ஏமாற்றம்!' என்ற தலையங்கத்தில், 'கல்விக்கேற்ற வேலை வாய்ப்பு; வேலை வாய்ப்புக்கேற்ற கல்வி இருக்க வேண்டும். புள்ளி விவரங்களை ஒப்பிப்பதில் ஒரு பயனும் இல்லை' என்ற வரிகள் முத்தான கருத்து.

குத்தாலம், கே. பத்மநாபன்.

◆ சொன்னா நம்பு கலா! நான் உன் புருஷன் சிவாதான். நீ ஷாப்பிங் முடித்து விட்டு வர்றதுக்குள்ளே இந்த "சொல் விளையாட்டு" போட்டி விடைகளைக் கண்டுபிடிச்சி போஸ்ட் பண்ணிடலாம்னு நெனைச்சு தீவிர முயற்சி நடத்தினதுல இப்படி வழுக்கையானதுதான் மிச்சம். ப்ளீஸ் நம்பு கலா!

தோட்டப்பாளையம், வடமாலவன்.

◆ ஆபீஸ் பையன் எழுத்தில் தான் கெட்டி என நினைத்தேன். ரொம்பத் துல்லியமாகக் கணக்குப் போடுவதிலும் புலியாக உள்ளானே! சபாஷ்!

கடையம், அ. செபாஸ்டின்.

◆ சேப்பாக்கம் கிரிக்கெட் மாட்சைப் பார்த்தவங்க கணக்கை உங்க ஆபீஸ் பையன் தான் பெரிசா எழுதறான்னு பிரகரிக்கிறீங்களே; அவன் மட்டும் எங்கே மாட்சைப் பார்த்தானாம்? வர்றவங்க, போறவங்க, முறைக்கறவங்க, தேடறவங்க எத்தனை பேர்னு கணக்குத் தானே பார்த்துக்கிட்டிருந்தான்?

சென்னை - 14, அய்யாறு எஸ். வாசுதேவன்.

◆ தலைநகரின் தண்ணீர்ப் பிரச்னை கண்ணீரை வரவழைத்தாலும், கிராமப்புறங்களில் மட்டும் என்ன வாழ்கிறதாம்! குடிதண்ணீருக்குத் தலையில், இடுப்பில், கையில் என பாத்திரங்களுடன் அலைந்து தண்ணீர் எடுத்து வரச் சிரமப்படும் பெண்கள், சுலபமாகக் கிடைக்கும் 'தண்ணீ'ரை அடித்து விட்டு வந்து கலாட்டா செய்யும் கணவனையும் சேர்த்துச் சமாளிக்க வேண்டி உள்ளது.

சிதம்பரம், ஆர். தமிழரசி.

◆ "தண்ணீர்ப் பஞ்சத்தில் திணறும் சென்னை!" - கட்டுரையில், சென்னை குடிநீர் வாரியத்தின் நிர்வாக இயக்குனராக உள்ள எஸ். ஸ்ரீனிவாசன் எதிர்காலத்திற்கான திட்டங்கள் என நீர்த் தேக்கங்களின் கரைகளை உயர்த்தி வருவதைக் குறிப்பிட்டிருக்கிறார். செங்குன்றம் ஏரி (புழல் ஏரி) அருகில் வசிப்பவன் என்ற வகையில் கூறுகிறேன். இவர்கள் சென்ற வருடம் உயர்த்திய கரை சென்ற வருடம் பெய்த சாதாரண மழையிலேயே கரைய ஆரம்பித்து விட்டது. இன்னும் எவ்வளவு காலம் தாங்குமோ எனத் தெரியவில்லை. தற்போது பெரிய கற்களைக் கொண்டு வந்து போட்டுள்ளார்கள். மூன்று வருடம் முன் ஏரி வற்றியபோதே அதனை நடுவிலிருந்து கரை வரை ஆழப்படுத்தியிருந்தாலே கொள்ளளவு கூட வழி ஏற்படுத்தியிருக்கலாம். தற்போது செய்யும் காரியம் கூட சரிவரச் செய்யவில்லை என்பதை நேரில் பார்க்கும் அனைவரும் அறிவர்!

செங்குன்றம், பாலசுப்ரமணியன்.

◆ கார்ட்டூனில் வாழப்பாடியை விலக்கினால்தான் காங்கிரசுடன் கூட்டுச் சேருவேன் என்று ஜெயலலிதா கூறுகிறார். கூடவே நரசிம்மராவையும் போகச் சொன்னால்தான் இணைவோம் என்று எஸ்.டி.எஸ். கூறுவதாகவும் வரைந்துள்ள கார்ட்டூனும் மிகவும் அருமை. ஏன் சார் உங்களுக்கு இந்த ஓரவஞ்சனை. எங்கள் ஜெயலலிதாவை பிரதமராக ஆக்கினால்தான் காங்கிரசுடன் சேருவோம் என்றும், எங்களை காபினெட் மந்திரிகளாக ஆக்கினால்தான் கூட்டுச் சேருவோம் என அ.தி.மு.க. மந்திரிகள் கூறுவது போலவும் வரைந்தால் குறைந்தா போவீர்கள்!

போடிநாயக்கனூர், கே. நாராயணசாமி.

◆ 'சங்கீதத்திற்கு விஞ்ஞான அடிப்படை உண்டு. ஆனால், அது வெறும் விஞ்ஞானமாகி விடக் கூடாது. அது மனித உணர்வுகளை உணர்த்தும் சக்தி வாய்ந்த கலை என்பதை மறக்கக் கூடாது.' - "இழப்பு" சிறுகதை இந்த உண்மையை மிகவும் அருமையாக எடுத்துக் காட்டியது.

சென்னை - 35, எஸ். நடராஜன்.

◆ 'தரிசு நிலம்' சிறுகதை, இப்போதும் எங்கள் ஊரில் ஓ.என்.ஜி.சி.யிடம் நிலத்தைக் கொடுத்து விட்டு கோர்ட்டுக்கும் வீட்டுக்கும் அலையும் எங்கள் மனிதர்களை ஞாபகப் படுத்தியது!

முத்துப்பேட்டை, தஞ்சைத் தரணியன்.

◆ இன்று நாட்டில் தலைவிரித்தாடும் வன்முறைகளுக்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்ற மிக அருமையான கருத்தைப் புலப்படுத்திய 'நீ அணைப்பு' சிறுகதை பாராட்டுதலுக்குரியது. சிறு சம்பவத்தின் மூலம் வன்முறை வேண்டாம் என்பதை மிக எளிமையாகச் சொன்னவிதம் அருமை.

விசலூர், ஜி. பாலகிருஷ்ணன்.

பரிசுக் கடிதம்!

ஜெயலலிதா பிறந்த நாளை வாரா வாரம் கொண்டாடி அரிசி, பருப்பெல்லாம் தள்ளுபடிக்குக் கொடுத்தால் நல்லாயிருக்கும்னு சொல்லியிருக்கீங்க. (ஜில்லு-ஜானு) அது மட்டும்தானா? குற்றவாளிகளை வாரா வாரம் விடுதலை பண்ணினா சிறைச்சாலைகள்லாம் சுத்தமாகும். கோவில்கள்ல வாரா வாரம் சிறப்புப் பூஜை நடக்கிறதால அவை மேலும் புனிதமாகும். தமிழகத்தின் நிரந்தர முதல்வர்ங்கற போஸ்டர் தமிழகமெங்கும் நிரந்தரமாத் தட்டுப்படும். மந்திரிகள், தொண்டர்கள் இரத்த தானத்தால ஆஸ்பத்திரிகள்ல இரத்த ஆறு பாயும். இன்னும் எத்தனை எத்தனை நன்மைகள் இருக்கு! ஆனா அம்மா வயசு மாத்திரம் வாரா வாரம் ஏறிடுமேன்னு கவலையாயிருக்கு!

பூந்தமல்லி, டாக்டர் ரெ. தெய்வச்சிலை.

அமெரிக்கப் படிப்புக்கு அட்மிஷன் கிடைச்சாச்சு.

திருவாளர் பரந்தாமனுக்கு ஒரு புறம் மகிழ்ச்சி. மறுபுறம் கவலை. ஒரே மகன். மிகுந்த புத்தி சாலி. மேல் படிப்புக்காக அமெரிக்கா செல்ல விரும்பினான். அங்கே ஒரு பல்கலைக் கழகத்தில் இடம் கிடைத்த தோடு கல்வி உதவித் தொகையும் கிடைத்தபோது அவருக்குத் தரையில் கால் பதிய மறுத்தது. காற்றில் மிதக்கும் ஆனந்த உணர்வு, அதே நேரத்தில் இன்னொரு கவலையும் மெலிதாக ஊடுருவியது. விமான டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மொத்தமாக ஒரு தொகை தேவைப்பட்டது. கடன் வாங்குவதா? நகைகளை அடமானம் வைக்கலாமா? குழம்பினார். இந்த இரண்டுக்கும் அவசியமில்லாத இன்னொரு வழி புலப்பட்டது. தான் ஏற்கெனவே சேர்ந்திருந்த ஸ்ரீராம் சீட்டைப் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தார்.

வெளி ஆதரவையோ, உதவி யையோ நாடவேண்டிய அவசிய மின்றித் தங்கள் பணத்தைக் கொண்டே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் கௌரவ மான பாதை ஸ்ரீராம் சீட்டு.

கூட்டு முயற்சியாக ஒரு வருக்கொருவர் உதவிக் கொள்ளும் நமது பாரம்பரியத்துக்கு இணக்க மான நிறுவன அமைப்பு சிட்ஃபண்ட். இந்த உண்மையைப் புகழ்வாய்ந்த ஏசியன் டெவலப்மெண்ட் பேங்க் நடத்தியுள்ள ஓர் ஆய்வும் கண்டு ணர்ந்து தெரிவிக்கிறது.

உடனடியாகத் தேவைப்படும் நிதியைப் பெற்று அதனைச் சுலப மான மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்துவதற்கு ஸ்ரீராம் இணையற்ற சாதனம். இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்ய. நாளைய சேமிப்பு. இரண்டுக்கும்.

ஸ்ரீராம் சித்திரை சீட்டு விழா!
5 முதல் 14 வரை ஏப்ரல் '93.



பயணச் செலவுக்குப் பணம் தேவைப்படுதே!

பரவலாகக் கிளைகளும் எண்ணற்ற சர்வீஸ் செண்டர்களுமாக விரிவடைந்து ஒரு மகத்தான மக்கள் இயக்கமாக வளர்ச்சியடைந்துள்ள ஸ்ரீராம் சிட்ஸின் துணை கொண்டு 5,70,000 உறுப்பினர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

அதேபோல் நீங்களும் அடைய ஓர் அரிய வாய்ப்பு-ஸ்ரீராம் சித்திரை சீட்டு விழா!

ஸ்ரீராம் சிட்ஸ் -
மேலும் பலருக்கும்
பல வகையிலும் பலன்.



ஸ்ரீராம் சிட்ஸ் &
இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்.
நிர்வாக அலுவலகம்: 'சுப்பிரமணியம் பில்டிங்'.
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002.
போன்: 474451/475536/470400/473932.

ADWAVE/SCI/4525

முதல்வரின் சொத்து மதிப்பு ஆறு கோடியாமே?



✱ அழிவுப்பாதை



✱ ஆறு கோடி!

● ச. இளங்கோவன், நெய்வேலி.

? இந்திய கிரிக்கெட் அணியின் சமீபத்திய வெற்றிக்கு முக்கிய காரணம் என்ன?

! டென்ஷன் இருந்தால் நம் அணி தொறுங்கிப் போகிறது என்றும் டென்ஷன் குறைவான விளையாட்டில் நம்மவரால் தாக்குப் பிடிக்க முடிகிறது என்றும்தான் சமீபத்திய டெஸ்ட் வெற்றிகளும் ஒருநாள் மாட்ச் தோல்விகளும் நிரூபிக்கின்றன. தென்ஆப்பிரிக்காவில் இந்த டென்ஷனை டெஸ்ட் பந்தயங்களின் போதும் உருவாக்குவதில் தென் ஆப்பிரிக்க அணி வெற்றி பெற்றது என்பதை டிவியில் பார்த்தவர்கள் புரிந்து கொள்ள இயலும்.

● எம். கே. பாஷா, உத்தமபாளையம்.

? ஒரு ரூபாய் சம்பளத்துக்கு வேலை பார்க்கும் முதல்வரின் சொத்து மதிப்பு ஆறு கோடியாமே?

! இதுபோன்ற சிக்கல்களைத் தவிர்க்கத்தான் பதவிக்கு வரும் அமைச்சர்கள் உடனே தங்கள் சொத்து விவரங்களைப் பகிரங்கப் படுத்த வேண்டும் என்ற ஒரு நல்ல கருத்து நிலவுகிறது. ஆனால் அதை ஏற்கத்தான் ஆளில்லை. தற்போது முதல்வரின் சொத்து மதிப்பு ராக்கெட் வேகத்தில் உயர்ந்திருப்பதற்கு ஒருவேளை நியாயமான காரணம் கூட இருக்கலாம். ஆனால் அவர் சார்பில் பேசிய அமைச்சர் எஸ்.டி.எஸ். இதைக் கேட்க வருமான வரி இலாகாவுக்குத்தான் அதிகாரம் உண்டு என்று சொன்னது ரொம்பத் தப்பு. பொது வாழ்வில் ஈடுபட்டு மக்களின் வோட்டுப் பெற்றுப் பதவிக்கு வந்தவர்கள் மக்களுக்குப் பதில் கூறக் கடமைப்பட்டுள்ளனர். 'ஜெ'விடமிருந்து சரியான விளக்கம் வராதவரை தவறு நடந்திருப்பதாக அனுமானிக்கவே அதிக இடம் இருக்கிறது.

● பகம்பொன், திருநெல்வேலி.

? காந்தி சொன்ன போது கதர் அணியாத மக்கள், இன்று படத்தில் ரஜினி அணிந்தார் என்றவுடன் அணிகிறார்களே?

! உங்கள் கருத்து தவறானது. காந்தி சொன்னதும் இந்த நாட்டில் லட்சோபலட்சம் மக்கள் கதர் அணிந்தார்கள். அது மட்டுமல்ல; தாங்களே நூற்று நெசவுக்கு அளித்தார்கள். அன்று கதர், உடல் - உள்ளத் தூய்மைக்கும் மனஉறுதிக்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது. காந்தி காலத்துக்குப் பிறகு நிலைமை தலைகீழாகி விட்டதற்குக் காரணம் அரசியல் வாதிகளே. இன்றும் கதர் அணிவது ஏழை நெசவாளிக்கு உதவும் காரியமாகும். இதை ரஜினி உணர்ந்து படத்தில் மட்டுமின்றி நிரந்தரமாகவே கதர் அணிந்து பிறரையும் பின்பற்றச் சொன்னால் நல்ல காரியம் செய்தவராவார்.



✱ கதர் அணிகிறார்

● கோவிந்தராஜன், சேலம். ❑

? "புகை பிடித்தல் உடல்நலத்துக்குக் கெடுதல்", "குடி குடியைக் கெடுக்கும்" என்ற பிரசாரங்களுடன் கூடவே, சிகரெட், மது விற்பனையை அங்கீகரிக்கும் அரசு; "கற்பு நெறியே சிறந்த ஒழுக்கம்" என்ற பிரசார வாசகத்துடன் 'சிவப்பு விளக்கு' விடுதிகளை அனுமதிக்குமா?

! அப்படிச் சொன்னாலும் தேவலாமே; இப்போது அதைவிட மோசமாக "பாதுகாப்புடன் உடல் உறவு கொள்ளுங்கள்" என்றல்லவா மத்திய அரசு பிரசாரம் செய்கிறது! எய்ட்ஸ் பற்றிய எச்சரிக்கை போஸ்டர்களில் "ஒழுக்கமே உயர்வு தரும்" என்று போடுவதில்லையே.

● இரா. குழந்தைராஜ், தஞ்சாவூர்.

? முதல்வர் பிறந்த நாளை அமைச்சர்கள் பால்குடம் எடுத்துச் சாமி கும்பிட்டுக் கொண்டாடினார்களாமே?

! ஆமாம். ஆனால் பால்குடம் எடுப்பது எதற்கு என்று அதன்பின் உள்ள தத்துவத்தைப் புரிந்து கொண்டு செயலாற்றினார்களா என்பது சந்தேகமே. பாலைப் போல் மனம் தூய்மையாகி இறைவன்பால் லயிக்க வேண்டும் என்பதை உணர்த்துவதே பால் குடம், பால் காவடி எல்லாம்.

● கே. பட்டு, கும்பகோணம்.

? 'இ. காங்கிரஸ் அழிவுப் பாதைக்குச் சென்று கொண்டிருக்கிறது' என்கிறாரே அத்வானி?

! பிப்ரவரி 25 பேரணியை அனுமதிக்காமல் அரசு அடக்கி விட்டதால் இப்படி

சொல்கிறார். இதனால் அத்வானி கூற்றுப்படி காங்கிரஸ் அழிவுப் பாதைக்குச் செல்கிறது. ஆனால் பேரணி அனுமதிக்கப் பட்டிருந்தால் நாட்டையே அழிவுப் பாதைக்கு அத்வானி அழைத்துச் செல்வதாகத்தான் இருந்திருக்கும். இன்று தேசத்துக்குத் தேவை மனித மணிகளை வீணடிக்கும் பேரணிகளும் கதவடைப்புகளும் மறியல்களும் அல்ல. அவரவரும் கடமையுணர்ந்து கடினமாக உழைத்து தேசத்தை முன்னேற்றுவதுதான். ஆளும் கட்சிக்கு ஒரு எதிர்க்கட்சி அவசியம் தேவை. ஆனால் அது ஆக்கபூர்வமானதும் அறிவுபூர்வமானதுமான எதிர்ப்பாக இருக்க வேண்டும். பலப் பரீட்சைகள் இருதரப்புக்குமே தோல்வியைத்தான் அளிக்கும். கூடவே தேசமும் தோற்றுப் போகும்.

● விஸ்வகர்மா, சென்னை.

? சென்னை முழுவதும் முதல்வரின் உருவம் பெண் தெய்வம் போன்று போஸ்டர் அடித்து ஒட்டியிருந்தது பற்றி உமது கருத்து என்ன?

! நகரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் போஸ்டர் ஒட்ட தடைவிதித்தது அரசு. இப்போது அரசின் ஆசியுடன் போஸ்டர் ஒட்டி அசிங்கப்படுத்தப்படுவது நகரம் மட்டுமல்ல; மக்களின் இறையுணர்வும் கூட.

● நெ. க. திலீபன், வத்ராயிருப்பு.

? தமிழகத்தில் அ.இ.மு.க. – பாரதீய ஜனதா கூட்டணி ஏற்படுமென்று நெடுஞ்செழியன் கூறியுள்ளாரே?

! தமிழக அமைச்சரவை மீது மத்திய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்து விடப் போகிறதே என்ற கவலையில் அவ்வப்போது மிரட்டி வருகிறார்கள். ஆனால் ரொம்ப மிரட்டுவது ஆபத்தாக முடியலாம். சாது மிரண்டால் காடுகொள்ளாது என்பது பழமொழி.

● பூ. பெரியசாமி, தக்கோலம்.

? அரசு அதிகாரிகள் கூட அம்மாவின் அடிமைகளா?

! முதல்வர் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள கம்ப்யூட்டர் திரைகளில் கூட ஜெ துதிதான் ஜெகஜ்ஜோதியாகத் தெரிகிறதாம்!



* அழிவற்ற அன்பு



* பா. ஜ. கூட்டணி

□ ரூ 25 பரிசு பெறுபவர் :
கோவிந்தராஜன்,
1/135, வசந்த நகர்,
அழகாபுரம், சேலம் – 636 016.

● கே. எம். ரவிசந்திரன், மதுரை.

? முதல்வரது பிறந்த நாளில் அவர் செய்த மகத்தான செயல் யாது?

! வேறென்ன, மின் கட்டணத்தைக் கணிசமாக உயர்த்தி ஒருவர் பாக்கியின்றி எல்லோருக்கும் "ஷாக்" கொடுத்ததுதான். நல்லவேளை, "மத்திய அரசு கட்டணத்தை உயர்த்தி விட்டது; மாநில அரசைக் கலந்தாலோசியாமல் செய்தது தவறு" என்ற நாடகத்தை மறந்து போய் இதற்கும் அரங்கேற்றி விடாமல் இருந்தாரே! பெரிய காரியம்! பின்வாரிய நஷ்டத்தை ஓரளவேனும் சரிக்கட்ட முதல்வர் இங்கு நினைப்பது போல்தான் மான்யங்கள் விஷயத்தில் மத்திய அரசும் எண்ணுகிறது என்பதை இப்போதாவது புரிந்து கொண்டால் சரி.

● எம். ரேவதி, மன்னார்குடி.

? தங்கள் சமீபத்திய பிரமிப்பு?

! விமானத்தில் ஓட்டை விழுந்தும், பறவை சிக்கியதால் பழுதுபட்டுப் போயும், "ஹைட்ராலிக் சிஸ்டம்" இயக்கம் இழந்தும் கூட விமானம் பத்திரமாகத் தரை இறங்கி, இங்கிலாந்து - இந்திய கிரிக்கெட் வீரர்கள் காப்பாற்றப்பட்டதுதான். பெரும் பழியிலிருந்து இந்தியாவையும் பேரிழப்பிலிருந்து கிரிக்கெட் உலகையும் காத்த இறைவன் கருணைக்கு நன்றி.

● ஆர். பிரகாசம், நல்லாலம்.

? அழிவற்றது எது? அளவிட முடியாதது எது?

! சமீபத்தில் செம்மங்குடி அவர்கள் தமது மனைவியை இழந்து விட்டார். அனுதாபம் தெரிவிக்க வந்தவர்களிடம் தைரியத்தைக் கைவிடாமல் பேசிக் கொண்டும் இருந்தார். ஆனாலும் இத்தனை காலம் இணைபிரியாது இருந்து விட்டு வயதுக் காலத்தில் தோழமையில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. இதை எப்படிச் சமாளிப்பீர்கள் என்று கேட்டேன். அவள் என்னிடம் மட்டுமின்றி எல்லாரிடமும் காட்டிய அன்பை எண்ணிக் கொள்வேன் என்றார். அன்பு அழிவற்றது என்பது புரிந்தது. அப்புறம் ஓர் ஆச்சர்ய விஷயம் சொன்னார். சில ஆண்டுகளுக்கு முன் குரு வாயூர் சென்றிருந்த போது தைய அம்மாள், 'எனக்கு எதற்கு நகை?' என்று ஒன்று பாக்கியின்றி அனைத்தையும் குரு வாயூரப்பனுக்கே அர்ப்பணம் பண்ணி விட்டாராம். ஆண்டவனிடம் வைக்கக் கூடிய அன்பு அளவிட முடியாதது என்பதும் தெரிய வந்தது.

நவரச நினைவுகள் : 8



* பாவை விளக்கு

தமிழ் வசனங்களைத் தெலுங்கில் எழுதி வைத்துக் கொண்டுதான் நான் பேசினேன் (வளையாபதி திரைப்படம்) என்று சொன்னேன் அல்லவா?... பின்னர் தமிழ் எழுதவும் படிக்க வும் ஆசைப்பட்டு ஒரு தமிழ் ஆசிரியரை ஏற்பாடு செய்து கொண்டேன். அந்தச் சமயத்தில்தான் அகிலனின் 'பாவை விளக்கு' நாவலை சினிமாவாக எடுக்கும் திட்டம் உருவானது. அதில் 'கௌரி' கதாபாத்திரத்தில் நடிக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. நாவலை என் தமிழாசிரியர்தான் எனக்குப் படித்துக் காட்டினார். கதையிலும் கௌரி கதாபாத்திரத்திடமும் எனக்கு ரொம்ப ஈடுபாடு ஏற்பட்டுப் போயிற்று. 'கௌரி காரெக்டர் உயிரோடு இருந்தால் இப்படித்தான் நடப்பாள்; இப்படித்தான் பேசுவாள்; இப்படி

பாவை விளக்கில் ஜானகி சித்திரப் பாவையில் வைஷ்ணவி!

பிளேனில் பம்பாய்க்குப் பறந்த நடிகை - வஹிதா ரஹ்மான். அவர் திறமையை இனங்கண்டு அழைத்துச் சென்றவர் : குருதத். வெகு சீக்கிரமே அவர் புகழ் ஏணியின் உச்சியை அடைந்தார்.

அத்தகைய மின்னல் வேக வளர்ச்சி என் கலை வாழ்க்கையில் என்றுமே இருந்த தில்லை. பலவித கஷ்டங்களைப் படிப்படியாகக் கடந்துதான் நான் முன்னுக்கு வந்தேன். ஆனால் திறமையுடன் அதிர்ஷ்டமும் அமையப் பெற்றவர்கள் - வஹிதா ரஹ்மானைப் போல் - குறுகிய காலத்தில் தனி இடம் பிடித்துக் கொண்டார்கள்.

அத்தகையவர்களின் வளர்ச்சி என்னுள் பொறாமையை ஏற்படுத்தியதே கிடையாது. எனக்கு வர வேண்டிய வாய்ப்புக்கள் நிச்சயமாக வந்தே தீரும்; அதே போல் எனக்குக் கொடுப்பினை இல்லாத விஷயங்கள் நிச்சயமாக எனக்குக் கிடைக்காது என்ற விவேகம் சீக்கிரமே எனக்கு வந்து விட்டது. அந்த உறுதியிலிருந்து நான் தளரவே யில்லை.

யிப்படி நடந்து கொள்வாள் என்றெல்லாம் பலவாறாகக் கற்பனை செய்து என் மனத்துக்குள்ளேயே அவளுக்கு ஒரு முழுமையான வடிவம் கொடுத்து விட்டேன்.

பாவை விளக்கு படத்தின் ஒரு காட்சியில் எம்.என். ராஜம் மாடியில் இருப்பார். அவரைத் தேடிக் கொண்டு படியேறி மேலே போகும் என்னுடைய குழந்தை தவறிப் போய்க் கீழே விழுந்து இறந்து விடும்.

கதாநாயகன் சிவாஜி கணேசன். குழந்தையை அடக்கம் செய்து விட்டு, இடுகாட்டிலிருந்து திரும்பி வந்து, வீட்டினுள் நுழையும் காட்சியில், அவரைப் பார்த்து, 'குழந்தையை அடக்கம் பண்ணிட்டீங்களா? மண்ணுக்குச் சொந்தமாக்கிட்டு வந்துட்டீங்களா?' என்று வசனம் பேசி நான் கதறி அழ வேண்டும். அந்தக் காட்சியையும்சரி, அதில் நடித்த போது ஏற்பட்ட உணர்ச்சிகளையும் சரி, என்னால் மறக்கவே

சௌகார் ஜானகி

முடியாது.

காட்சி முடிந்து, ''பிரமாதமாய் நடித்து விட்டாய்'' என்று டைரக்டரும், செட்டில் இருந்தவர்களும் பாராட்டிய பொழுது கூட நான் சோகத்திலிருந்து மீள முடியாமல் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தேன்.

அது மட்டுமில்லை... அடுத்த மூன்று நான்கு நாட்களுக்கு என்னால் சரியாகத் தூங்க முடியவில்லை! மாடிப் படிகளில் உருண்டு விழுந்து குழந்தை இறந்து போகிற காட்சி அடிக்கடி என் மனத்தில் தோன்றி என்னை வதைத்துக் கொண்டேயிருந்தது. பாவை விளக்கு படத்தைத் திரையில் பார்த்த போது கூட என்னையும் அறியாமல் நான் மறுபடியும் அழுது விட்டேன்! அந்தக் காட்சி என்னை அவ்வளவு தூரம் பாதித்து விட்டது.

அகிலனின் பாவை விளக்கு திரைப் படமான போது அதில் நடிக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதே எழுத்தாளரின் சித்திரப் பாவை டி.வி. சீரியலில் நடிக்க என் பேத்தி வைஷ்ணவிக்கு வாய்ப்பு கிடைத்தது! இந்த அபூர்வ ஒற்றுமையை நினைத்துப் பார்க்கும் போது சந்தோஷமாக இருக்கிறது.

பாவை விளக்கு பெரிய அளவு 'ஹிட்' படமல்ல. ஆனால் எனக்கு நல்ல பெயர் வாங்கித் தந்த படம். அதே அளவுக்கு நற்பெயர் வாங்கித் தந்த இன்னொரு படம் 'படிக்காத மேதை'. இது பாவை விளக்குக்குப் பின்னர்தான் எடுக்கப்பட்டது என்றாலும் அதற்கு முன்னரே ரிலீஸ் ஆகி விட்டது.

'படிக்காத மேதை' -யில்தான் நான் முதன் முதலாக சிவாஜி கணேசனுடன் நடித்தேன். 'சௌகார்' படத்தில் வில்லனாக வந்த எஸ்.வி. ரங்காராவுக்கு இதில் அற்புதமான குணச்சித்திர வேடம். அதே போல் கண்ணாம்பாவுக்கும் ஆழமான காரெக்டர்.

உணர்ச்சிபூர்வமாக வசனம் பேசிய கண்ணாம்பாவைக் கண்டு நான் பிரமித்துப் போயிருக்கிறேன். பிற்காலத்தில், தெலுங்குப் படங்களில் சிறப்பாக நடித்ததற்காக எனக்குக் 'கண்ணாம்பா நினைவு விருது' வழங்கினார்கள். அப்போது ஏற்பட்ட மகிழ்ச்சியும் பழைய நினைவுகளின் எழுச்சியும் ஓர் அபூர்வ அனுபவம்.

✱ படிக்காத மேதை



'படிக்காத மேதை'யில் லக்ஷ்மி என்ற பயந்த சுபாவம் கொண்ட அப்பாவிப் பெண்ணின் கதாபாத்திரம் என்னுடையது. அது எனக்கு மிகவும் பொருத்தமாக இருந்ததாகப் பலரும் சொன்னார்கள். ஆனால் அதற்கு நான் எவ்வளவு தூரம் உழைத்தேன் என்பது எனக்குத்தான் தெரியும். எதையுமே நுணுக்கமாக கவனித்து மனத்தில் பதிய வைத்துக் கொள்ளும் பழக்கம் எனக்கு உண்டு. நான் பார்த்துப் பழகிய பல்வேறு குடும்பப் பெண்களின் நடை, உடை பாவனைகளைக் கவனித்து வைத்திருந்ததால் அவற்றுள் பொருத்தமானவற்றைச் சரியான இடங்களில் பயன்படுத்தி லக்ஷ்மி பாத்திரத்துக்கு என்னால் உயிரூட்ட முடிந்தது.

குறிப்பிடத்தக்க இன்னொரு விஷயம், படிக்காத மேதை படத்துக்கு வசனம் எழுதிய கே. எஸ். கோபாலகிருஷ்ணன் மற்றும் தயாரிப்பாளர் பாலா மூவிஸ் கிருஷ்ணசாமி இருவரும் என் பேரில் வைத்திருந்த நம்பிக்கை. 'லக்ஷ்மி' கதாபாத்திரத்தில் என்னை நடிக்க வைக்க வேண்டாம் என்று பலர் 'அறிவுரை' சொன்ன போதிலும் அதைப் பொருட்படுத்தாமல் எனக்கு வாய்ப்பு அளித்தார்கள்.

''ஜானகி பிளாட்டிங் பேப்பர் மாதிரி கேரக்டரின் ஜீவனை உறிஞ்சிக் கொண்டு வெளிப்படுத்தறார்...'' என்று ஒருமுறை கே.எஸ்.ஜி. பாராட்டினார். ரங்காராவோ, 'ஆளைப் பார்த்தா ஒண்ணும் தெரியாத அப்பாவியாத் தோணுது; ஆனா என்ன மாதிரி ஆக்டிங்!'' என்று ஆச்சர்யப்பட்டார்.

இத்தகைய பாராட்டுகளையெல்லாம் கேட்கும் போது, 'இதையெல்லாம் யாருடனாவது பகிர்ந்து கொண்டால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்...!' என்று எனக்கு ஏக்கமாக இருக்கும். ஆனால் என் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளக் கூடியவர்கள் யாருமே எனக்கு இல்லை.

என் ஏக்கம் பல சமயங்களில் சோகமாக மாறி என்னை அழுத்தியதும் உண்டு. இந்த உலகிலேயே நான் மட்டும் தனிமைப்படுத்தப்பட்ட ஜீவன் போல் உணர்வேன்.

இது ஒருபுறமிருக்க, சோகமான கதாபாத்திரங்களில் நடித்ததற்காக எனக்குக் கிடைத்த பாராட்டே எனக்கு எதிராக வேலை செய்ய ஆரம்பித்தது...

(தொடரும்)

படங்கள் உதவி : ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்



அமைச்சரைத் தடுத்த போலீஸ் அதிகாரி!

சேதி கேட்டோ!

கேரள அரசு இங்குள்ள போலீஸ் இலாகாவிலிருந்து திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களை ''கமாண்டோ''க்களாக - கறுப்புப் பூனைகளாக உருவாக்கியது. வி.ஐ.பிக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க மட்டுமின்றி கேரளாவிற்குள் தீவிரவாதிகள் நுழைந்தால் அவர்களைச் சமாளிப்பதற்கும், இந்தக் கறுப்பு பூனைப் படை தயாராயிற்று. ஐம்பது கறுப்புப் பூனைகள் வரை உருவாக்கப்பட்டார்கள்.

டாக்டர் சங்கர் தயாள் சர்மா உதவி ஜனாதிபதியாக இருந்த போது குருவாயூர் கோவிலுக்கு வந்தார். அப்போது இந்த கறுப்புப் பூனைப் படைதான் பாதுகாவலுக்கு நின்றது. இவர்கள் உருப்படியாகச் செய்தது இது ஒன்றுதான். அதற்குப் பிறகு இந்தப் பூனைப் படைக்குத் தேவையே ஏற்படவில்லை. இவர்கள் சும்மாவே இருந்ததால், சில வீரர்களை மட்டும் மந்திரிகள் தங்களது காவலுக்கு அமர்த்திக் கொண்டார்கள்.

கடந்த ஆண்டு இறுதியில் கேரளாவில் ஜாதிக் கலவரங்கள் சில இடங்களில் ஏற்பட்ட போது இந்தப் பூனைகள் அந்த இடங்களுக்கு அனுப்பப் பட்டார்கள். கலவரங்கள் ஓய்ந்த பிறகு அவர்களை அரசு திரும்ப அழைக்கவில்லை. இப்போது கறுப்புப் பூனைப் படையினர் கிராமங்களில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் காவல் நின்று பிக்பாக்கெட்காரர்களையும், வழிப்பறி செய்பவர்களையும் வேட்டை(?)யாடிக் கொண்டிருக்கிறார்கள்!

முன்னாள் மத்திய அமைச்சர் பி.ஜே. குரியன் திருவனந்தபுரம் விமான நிலையத்திலுள்ள வி.ஐ.பி. அறையில் இருந்தார். அவரைப் பார்க்கக் கேரள அமைச்சர் ராமச்சந்திரன் நாயர் வந்தார். வி.ஐ.பி. அறையின் முன்நின்று கொண்டிருந்த ஒரு போலீஸ் அதிகாரி, அமைச்சரைப் பார்த்து, ''பாஸ் உள்ளவர்களை மட்டும்தான் உள்ளே விடச் சொல்லி உத்தரவு; உங்களிடம் பாஸ் இருக்கிறதா?'' எனக் கேட்டார். அமைச்சரோ தம்முடன் வந்தவரைத் தான் போலீஸ் அதிகாரி கேட்கிறார் என நினைத்துக் கொண்டு, அறைக்குள் போக முயன்றார். அதிகாரி ஆத்திரமடைந்து அவரை யார் என்று தெரியாமல் பிடித்துத் தள்ளி விட்டார். அமைச்சர் நிலைகுலைந்து கீழே விழப் போய் சுதாரித்துக் கொண்டு விட்டார். இதற்குள் அங்கு நின்ற பத்திரிகை நிருபர்கள் ஓடி வந்து, ''அவர் மந்திரி ஐயா, உள்ளே விடுங்கள்'' என போலீஸாரிடம் கூற, அந்த போலீஸ் அதிகாரி வெலவெலத்துப் போய், சல்யூட் அடித்து, மந்திரியை வி.ஐ.பி. அறைக்குள் அனுப்பி வைத்தார்.

அது சரி, இப்படி ஒரு போலீஸ் அதிகாரி தமிழக அமைச்சர் ஒருவரைத் தெரியாத்தனமாகப் பிடித்துத் தள்ளி இருந்தால் என்ன நடந்திருக்கும்?

- எஸ். எஸ். மணி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர்: வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: சீதா ரவி. நிர்வாக ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம்: 2345624; சர்குலேஷன் மானேஜர்: 2345623; விளம்பரம் - சந்தா: 2345622; டைரக்டர்: 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால்: ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு - ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால்: ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

நறுமணம் கமழும் இரண்டு மல்லிகை மலர்களின் விலை ஒரே ஒரு பைசாதான் என்று உங்களுக்கு தெரியுமா?



ஒவ்வொரு பைசாவின் அருமையையும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம்

ஒவ்வொரு பைசாவின் மதிப்பைப்பற்றியும் ஏன் கணக்குப் பார்க்க வேண்டும் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம்.

துகர் ஃபைனான்ஸ் இந்தியா லிமிடெட் 11 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட போதிலும், துகர் குடும்பத்தினர் 80 ஆண்டுகளாக நிதித்துறை வாணிபத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

துகர் ஃபைனான்ஸ் இந்தியா லிமிடெட் அதன் நிர்வாக இயக்குநர் திரு. என். தாராசந்த் துகர் மற்றும் சேர்மன் திரு. வி. அன்னாராவ் (முன்னாள் சேர்மன், திருமலை திருப்பதி தேவஸ்தானம்) தலைமையில் இயங்கி வருகிறது. அவர்கள் அந்நாளைய பண்புகளில் ஊறியவர்கள். எனவே எங்கள் வியாபார தத்துவம், அந்நாளைய நேர்மையை பண்புகளான சிக்கனம் மற்றும் அடிப் படையாகக் கொண்டது.

எங்கள் பண்புகளில் எங்களுக்கு அசையாத நம்பிக்கை. எனவே,எங்கள் டெபாசிட்தாரர்களுக்கும் எங்களிடம் மிகுந்த நம்பிக்கை.

இப்போது எங்களிடமுள்ள டெபாசிட்டுகள், என்றுமே இல்லாத அளவுக்கு ஏறக்குறைய 10 கோடி ரூபாயை எட்டி விட்டது. தொடர்ந்தாற் போல் 8 ஆண்டுகளாக நாங்கள் 25% லாபப் பங்கை (டிவிடெண்ட்) வழங்கி வருகிறோம். எங்கள் முதலீட்டாளர்களின் எண்ணிக்கை 20,000ஐத் தாண்டி விட்டது.

கணக்கற்ற டெபாசிட்தாரர்கள் பாடுபட்டு சம்பாதித்து எங்களிடம் ஒப்படைத்திருக்கும் பணத்தை நாங்கள் பொறுப்புடன் பாதுகாத்து வருகிறோம்.

இப்பணத்தை, நாங்கள் விவேகத்துடனும், முன் ஜாக்கிரதையுடனும், நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும், வேலை வாய்ப்பிற்கும் வழிவகுக்கும் துறைகளிலே மட்டுமே முதலீடு செய்கிறோம். ஏனெனில், ஒவ்வொரு மல்லிகை மலருக்கும் மணம் இருப்பதுபோல, ஒவ்வொரு பைசாவுக்கும் மதிப்பு உண்டு. அதை நாங்கள் என்றும் மறப்பதில்லை!

• தவணைக் கொள்முதல் • லீசிங்
• ப்ராப்பர்டி டிவலப்மென்ட் • பப்ளிக் டெபாசிட்

DUGAR
FINANCE INDIA LTD
(Formerly DUGAR INVESTMENTS LIMITED)

இப்பொழுது அணுகுங்கள். இது எங்கள்
விசேஷ சேவை காலம்

தேசிய மயமாக்கப்பட்ட முன்னணி வங்கிகளின் [illegible] பங்கேற்பு

பதிவு அலுவலகம் : 'துகர் டவர்ஸ்', 123, மார்ஷல்ஸ் ரோடு, சென்னை-600 008. ☎ 883535 Tlx: 041-6670 DUGR IN
Fax: 044-881122
கிளைகள்: சென்னை : பிரைவண்ட் ரோட் ☎ 631888, தி.நகர் ☎ 441541, அடையார் ☎ 412505, மைலாப்பூர், பெங்களூர் ☎ 564422, கோழிக்கோடு ☎ 63344, கோயம்புத்தூர் ☎ 37867, எர்ணாகுளம் ☎ 369515, கடூர் ☎ 830, மதுரை, நெல்லூர் ☎ 27576, சேலம் ☎ 68769, செகந்திராபாத் ☎ 846006, திருப்பதி, விசாகப்பட்டினம் ☎ 45561.

• TAKE WING •

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

சில குழந்தைகள் மற்றவர்களை விட நன்றாக எடை போடுகிறார்கள் எப்படி ?

குழந்தைகள் சும்மா எடை போட்டால் மட்டும் போதாது. அவர்கள் 'சரியான' முறையிலே எடை போட வேண்டும். குறைவாகவும் கூடாது. மிகவும் அதிகமாகவும் கூடாது. குழந்தைகள் 'சரியான' அளவில் எடை போட வேண்டுமானால் தசைகளையும், திசுக்களையும் வளர்ப்பதற்கும் ரத்த விருத்திக்கும் உதவக்கூடிய புரோட்டீன்கள் தேவை.

இந்த புரோட்டீன்களைப் பெறுவதற்குச் சிறந்த வழி ஊட்டச்சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த உணவைத் தர வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆன பிறகு பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு வேளையும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த திட உணவு உங்கள் குழந்தைக்குத் தேவைப்படுகிறது.

பெரும்பாலான தாய்மார்களுக்கு இது முடிவதில்லை. வழக்கமான உணவு வகைகள் சரிப்பட்டு வருவதில்லை.

பிறகு என்னதான் வழி?

ஸெரிலாக். ஊட்டச்சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த, உங்கள் குழந்தைக்கு மிகவும் பழக்கமான பாலின் எல்லா நற்பயன்களும் அடங்கிய திட உணவு. வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த பால் புரோட்டீன்கள் இதில் உள்ளன. மேலும், கொழுப்புச் சத்துக்கள், கார்போஹைட்ரேட், இரும்புச் சத்து, கால்ஷியம் ஆகிய சத்துக்கள் சரியான அளவிலே கலந்த உணவு ஸெரிலாக். வைட்டமின்கள் A, D, E, B காம்ப்ளெக்ஸ் மற்றும் C இதற்கும் பலம் சேர்க்கின்றன.

இன்னுமொரு சிறப்பு. ஸெரிலாக் இப்போது நெஸ்லேயின் புரட்சிகரமான புதிய Z-லேன் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன் கூட்டியே பக்குவப்படுத்தப்படுகிறது. ஸெரிலாக் மிக எளிதில் ஜீரணமாகி விடுகிறது. மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது.

எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் ஸெரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு புரோட்டீன்கள் உள்ளன. ஏனென்றால் இதில் பாலின் எல்லா நற்பயன்களும் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை சரியான அளவு எடை போடுவதற்கு வேண்டிய ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவு ஸெரிலாக்.





இலவசம். ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்

உங்கள் குழந்தையின் வயது/பிறக்கக் கூடிய தேதி, உங்களுக்கு விருப்பமான மொழி ஆகிய விவரங்களை எமக்கு எழுதுக: ஸெரிலாக், தபால் பை எண் 21, புது தில்லி - 110 029.

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடவே, தானிய உணவு வகைகளைக் கொடுங்கள்.

Mudra NES 0319 Tam